## மனிதவள மாண்புக் கல்வி

# உலகளாவிய விழுமியங்கள்

ஆறாம் பருவம்


## NGM College

Re - Accredited by NAAC & ISO 9001 : 2008 Certified
Affiliated to Bharathiar University, Coimbatore
POLLACHI - 642 001, Tamil Nadu
**✆ : 04259 - 234868, 234870**
E- mail : ngm@ngmc.org
Website : www.ngmc.org

முதற் பதிப்பு : 2010
ஐந்தாம் பதிப்பு : 2015
ஆறாம் பதிப்பு : 2021

அச்சிட்டோர் :
**ருக்மணி ஆப்செட் பிரஸ்**
E-32, சிட்கோ தொழிற்பேட்டை,
கோயமுத்தூர் - 641 021.
போன் : 0422-2672789
ஈ -மெயில் : office.rukmaniop@gmail.com

# அணிந்துரை

ஒவ்வொரு இளைஞர்களும் தங்களை முதலில் உயர்த்திக் கொள்ள வேண்டும். பிறகு தங்கள் உயர்வுக்குக் காரணமாக இருந்த சமுதாயத்தை உயர்த்த வேண்டும்.

இந்த உன்னத நோக்கத்தையும், அந்த நோக்கத்தை அடையத் தேவையான தகுதியையும் வைராக்கியத்தையும் தருவதே கல்வியின் நோக்கமாக இருக்கவேண்டும்.

இன்றைய கல்வி புறமேம்பாட்டோடு நின்றுவிடுகிறது. இது அகத்தை அறிந்து கொள்ளவோ, அதை மேம்படுத்தவோ எந்தவொரு முயற்சியும் செய்வதில்லை.

இந்தக் குறையைப் போக்கும் வண்ணம் 1987 ஆம் ஆண்டில் **''அறவியலும் பண்பாடும்''** என்ற ஒரு பாடத்திட்டத்தை நாம் என்.ஜி. எம். கல்லூரியில் துவக்கி, அதை இன்று வரையில் வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகின்றோம். அண்மையில் அதைச் சற்று மேம்படுத்தி **''மனிதவள மாண்பு கல்வி ''** என்ற வகையில் மிகுந்த முனைப்போடு செயல்படுத்தி வருகின்றோம்.

நம் இளைஞர்கள் வித்தியாசமாகச் சிந்தித்துத் துணிச்சலோடு செயல்பட்டுச் செயற்கரிய காரியங்களைச் செய்து சரித்திரத்தில் இடம்பெற வேண்டும் என்பதே நமது நோக்கமாகும். அரிதான மனிதப்பிறப்பை அலட்சியம் செய்யாமல், ' கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்று வாழாமல் உன்னத இலட்சியத்திற்காக வாழ்ந்து இந்த மனிதப் பிறப்பை அர்த்தமுள்ளதாக ஆக்கிக்கொள்ள வேண்டும்.

வந்தேன், இருந்தேன்,போனேன் என்று இல்லாமல் சாதனையாளனாக உயர முற்படவேண்டும்.

புறத்தாக்கங்கள் எப்படி இருப்பினும் அகத்திலே ஒரு பக்குவத்தைச் செய்து கொண்டால் இந்தப் போட்டிகள் நிறைந்த பொருளாதாரச் சூழ்நிலையில் நாம் நிச்சயம் வென்றுவர முடியும் என்கின்ற துணிச்சலையும், தன்னம்பிக்கையையும் வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

மேற்படி நோக்கங்களைக் கீழ்க்காணும் ஆறு விழுமியங்கள் ஆறு பருவங்களில் வழங்கப்படுகின்றன. அவை

1. தனிமனித விழுமியங்கள்
2. குடும்ப விழுமியங்கள்
3. பணிசார்ந்த விழுமியங்கள்
4. சமுதாய விழுமியங்கள்

5. தேசிய விழுமியங்கள்

6. உலகளாவிய விழுமியங்கள் என்பனவாகும்.

இந்தப் பாடத்திட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து இதற்கென்று தனியாக ஒரு துறையை ஏற்படுத்தியுள்ளோம். தகுதிபடைத்த ஆசிரியர்கள், பாடப்புத்தகங்கள் , கட்டமைப்பு வசதிகள், பயிற்சி வகுப்புகள் மற்றும் தேர்வுமுறைகள் என்று ஏற்படுத்தியுள்ளோம்.

இக்கல்லூரியில் வேதாத்திரி மகரிஷியின் உடற்பயிற்சி, காயகல்பப் பயிற்சி, தியானப்பயிற்சி மற்றும் பல்வேறு குணநலமேம்பாட்டுப் பயிற்சிகள் அடங்கிய, ' மனவளக்கலை யோகாவானது இளநிலைப்படிப்பு மாணவர்களுக்கு ஒரு பண்பாட்டுக்கல்வியாக வழங்கப்பட்டு வருகிறது.

அனைத்துக் கல்லூரிகளிலும் இப்பாடத்திட்டத்தைச் செயல்படுத்தி நம் இளைஞர்களிடம் உள்ள அளவற்ற அறிவை முழுமையாக வெளிபடுத்தி, பாரதத்தை ஒரு வல்லரசாக உயர்த்தவதே நமது நோக்கமாகும்.

டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ் வாணவராயர்
தலைவர், என்.ஜி.எம். கல்லூரி
பொள்ளாச்சி.

# பொருளடக்கம்


1. இனப்பாகுபாடும் தீர்வும் ... 7

2. சுற்றுச்சூழல் பாதிப்பும் அதன் தீர்வும் ... 13

3. அரசியல் கொந்தளிப்பும் தீர்வும் ... 22

4. உலகை அச்சுறுத்தும் தீவிரவாதமும் தீர்வும் ... 26

5. கலாச்சார சீரழிவும் தீர்வும் ... 32

6. ஒருமித்த கலாச்சார விளைவும் தீர்வும் ... 38

7. பொருளாதாரப் பாகுபாடுகளும் தீர்வுகளும் ... 47

8. செயலும் மனிதனே தீர்வும் மனிதனே ... 54

9. தவம் ... 58

10. முத்திரைப் பயிற்சிகள் ... 62

# 1. இனப்பாகுபாடும் தீர்வும்

**எம். குப்புசாமி**
உதவிப்பேராசிரியர்
மனிதவள மாண்புத்துறை
என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி

இனப்பாகுபாடு என்பது ஒரு இனத்தைச் சார்ந்த நபர், தன் இனத்தைச் சாராத மற்றவர்களிடம் வேற்றுமை உணர்வுடன் நடந்து கொள்வது, நடத்துவது எனலாம். ஒருவரின் நிறத்தை வைத்து அவரை வித்தியாசமாக நடத்துவது, நடந்து கொள்வது நிறவெறிக் கொள்கை (Racial discrimination) எனலாம். நிறவெறிக் கொள்கையானது இனம், நிறம், தேசியம், மதம், பால் மற்றும் பாலியல் தொடர்பாக எழுவது இயல்பாக உள்ளது. (Race, Nationality, Religion, Gender and Sexual orientation)

உலகில் சுமார் 300 ஆண்டுகளுக்குள் தொடங்கிய புற உலகின் வளர்ச்சியான அறிவியலின் வளர்ச்சியை சமுதாயம் முழுமையாகவும், வேகமாகவும் ஏற்றுக் கொண்டு விட்டது. மாறாக, 10,000 ஆண்டுகளுக்கும் மேல் பழமைவாய்ந்த நமது அக உலக வளர்ச்சிக்கு அடிப்படையான ஆன்மீகம் சமுதாயத்தால் முழுவீச்சில் ஏற்றுக் கொள்ளப்படாமல், ஒரு சிலரால் மட்டும் பின்பற்றப்பட்டு வருவதைக் காண்கிறோம். பல்வேறு பிரச்சனைகளுக்கான வேர்கள் இங்குதான் துவங்குகின்றன.அக உலக வளர்ச்சிக் குறைவின் வெளிப்பாடாகவே இனப்பாகுபாட்டுச் சிக்கல்களும் சீரழிவும் உலகலாவிய பிரச்சினையாக வளர்ந்துள்ளன.

நாம் வாழ்ந்துவரும் இனப்பாகுபாடு நிறைந்த இக்காலக் கட்டம், வருத்தம் தோய்ந்த பக்கங்களாகவே இருந்து வருகிறது. விலங்கினத் தொடராக பரிணாமத்தின் மூலம் வந்துள்ள மனிதன், தன்னுடைய மேன்மையை,மகத்துவத்தை உணர்ந்து கொள்ளாமையே இப்பிரச்சினைக்கு மூலக் காரணம் ஆகும்.

60 இலட்சம் யூதர்களைக் கொன்று குவித்து புதைத்த ஹிட்லரின் செயல் இனவெறிப் படுகொலை ஆகும். ஐரோப்பாவில் தொடர்ந்து 100 ஆண்டுகள் நடந்த சிலுவைப் போர்களால் ஓடிய இரத்த ஆறு மத வெறியின் வெளிப்பாடு ஆகும். இந்திய சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் மீது ஜெனரல் டயர் நடத்திய துப்பாக்கிச்சூடும், அடக்கு முறையும் அதிகாரப் போதையும் கலந்த இனவெறியே. ஆப்பிரிக்க நாடான ருவாண்டாவில் நடந்தேறிய படுகொலைகள், தற்காலத்தில் அமெரிக்கா, மற்றும் ஆஸ்திரேலிய நாடுகளில் உயர்கல்வி கற்கச் செல்லும் பிற நாட்டு மாணவர்களை, அந்த நாட்டுச் சக வகுப்பு மாணவர்கள் செய்யும் துன்புறுத்துதல்கள் மற்றும் கொலைகள் எல்லாமே இனத்துவேஷத்தின் வெளிப்பாடுகளேயாகும்!

## இனப்பாகுபாட்டின் தோற்றுவாய்

உயிரினப் பரிணாமத்தில் விலங்கினத் தொடர்ச்சியாகவே மனித இனம் தோன்றியுள்ளது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்தியா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற நிலப்பரப்புகள் எல்லாம் ஒன்றிணைந்து இருந்தன. அந்த நிலப்பரப்பு ‘கொந்துவானா’ அல்லது ‘லெமூரியா’ என்று அழைக்கப்பட்டது. தென்னமெரிக்காவும் ஆப்ரிக்காவுடன் இணைந்திருந்தது. இது புவியலார் தரும் செய்திகளாகும். இந்த நிலப் பகுதியானது பூமியின் தட்டுக்கள் இடப்பெயர்ச்சி அடைந்ததுடன், ஆழிப்பேரலைகளால் அழிக்கப்பட்டும், கடல்கோளும் நடந்து கடலில் மூழ்கிப் போயின. தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப்படும் முதல் சங்கத்தின் தலைநகர் தென்மதுரையும், இடைச் சங்கத்தின் கபாடபுரமும் லெமூரியாவில் தான் அமைந்திருந்தன. இந்த நிலப்பரப்பில் தான் ஆதிமனிதனும் தோன்றியிருக்க வேண்டும்.

ஆதிமனிதன் தோன்றி வாழ்ந்து வந்த நிலப்பகுதியானது, பூமியின் தட்டுக்கள் இடம் பெயர்ந்தபோது, ஆதிமனிதனும் பிற உயிரினங்களும் இடம்பெயர்ந்த நிலப்பரப்புகளில் வாழ முற்பட்டனர். மேலும் சில குழுவினர் தங்கள் உணவுத் தேவையின் அடிப்படையில் புதிய புதிய நிலப் பரப்புகளைத் தேடிக் குடி பெயர்ந்தனர். (Migration). புதிய இடங்களில் தனக்குக் கிடைத்த இயற்கை வளங்களைக் கொண்டு வாழத் தொடங்கினர். இயற்கை வளங்களில் அங்கு கிடைத்த சூரிய ஒளி, தட்ப வெப்பம், காற்று, மழை ஆகியன நேரடியாகவும், நிலத்தில் அடங்கியிருந்த தாது உப்புகளும், இராசாயனங்களும் உணவுப் பொருட்கள் மறைமுகமாகவும், மனிதர்களின் உருவம், நிறம், உயரம், பருமன் ஆகியவற்றை நிர்ணயிக்கும் காரணிகளாக விளங்கின.

கண்டங்களாகப் பிரிந்த நிலப்பரப்பானது மனிதர்களைத் தீவுகளாக்கி விட்டது. ஒரு பகுதியில் வாழ்ந்தவர்கள் வேறொரு பகுதியில் வாழ்ந்தவர்களுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை. போக்குவரத்து, தகவல் பரிமாற்றம் எதுவும் சாத்தியம் அற்ற கால கட்டத்தில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் இப்படியே பல தலைமுறைகள் வாழ்ந்து விட்டனர். அதன்காரணமாக மனிதர்கள் தங்களுக்கு அமைந்துவிட்ட சூழ்நிலைகளின் தாக்கத்திற்கு உட்பட்டு உருவில், நிறத்தில், மொழியில் கலாச்சாரப் பண்பாட்டில் பெரிய அளவில் வேற்றுமைகளைக் கொண்டவர்களாகப் பரிணாமம் அடைந்து விட்டனர்.

அமெரிக்காவின் உயரமான மனிதர்களைப் போல் ஜப்பானிய மக்கள் உயரமாக வளருவதில்லை. வெள்ளை நிறத்தோல் உடைய பிரிட்டிஷ்காரர்களைப் போல் ஆப்பிரிக்கர்கள் வெண்மையான தோல் நிறம் பெறாமல் கருமையான தோலின் நிறம் உடையவர்களாக வாழ்கின்றனர்.

கிழக்கு ஆசிய நாட்டு மக்களின் தோலின் நிறம் ‘பிரவுண்’ ஆக இருப்பதைக் காண்கிறோம். இது தவிர மஞ்சள் நிறத் தோல் கொண்ட மங்கோலியர்கள் என்றும், சிவந்த நிறத்தோலினர் செவ்விந்தியர்கள் என்றும் வகை வகையாக மனிதர்கள் தோலின் நிற அடிப்படையில் உருவாகி விட்டனர்.

## இயற்கையின் உண்மையான நோக்கம்

என்றும் மாறாத எங்கும் நிறைந்த பேராற்றலாகவும், பேரறிவாகவும் இருந்து உயிரினங்களையும், உயிரற்றத் தோற்றப் பொருட்களையும் இயக்கிக் கொண்டிருக்கும் இயற்கையைத் தெய்வம் என்றும், அந்தப் பேரருட் சக்தியைப் பிரம்மம், சிவம், சக்தி,விஷ்ணு, அல்லா, பரமபிதா என்றும் பல நாமங்களால் போற்றி வணங்குகின்றனர் மானிடர்கள்.

இயற்கை தன்னையே இரசிக்க, அனுபவிக்க, அறிந்து கொள்ள எடுத்த உருவம்தான் ஆறாம் அறிவு பெற்ற மனித வடிவமாகும். 'பிரபஞ்சம்' என்ற நந்தவனத்தில் இறுதியாகப் பூத்த மலர்தான் மனித இனம்' என்று வேதாத்திரி மகரிஷி கூறுகிறார்.

வீசும் தென்றலுக்கு வேலி போட்டு வெளியே செல்லத் தடை விதிக்க முடியுமா? வெளிச்சம் தரும் சூரிய ஒளியை எல்லைக்கோட்டைத் தாண்டிச் செல்லாதே என்று தடை உத்தரவு போட முடியுமா? மழை மேகத்தை வேறெந்த நாட்டிற்கும் செல்லாதே என்று கட்டிப் போட முடியுமா? குளிர் நிலவின் ஒளிக்கிரகணங்களைத் தன்னுடைய நாட்டில் மட்டுமே குவித்திடவும் முடியுமா? இஸ்லாமியர் இழுத்துவிட்ட மூச்சுக் காற்றை கிருத்துவரோ, இந்துவோ மறுத்துவிட முடியுமா அல்லது இவர்கள் இழுத்துவிட்ட மூச்சுக் காற்றை இஸ்லாமியர்கள் மறுத்துவிட்டு சுவாசிப்பதை நிறுத்திவிட முடியுமா? இப்படியெல்லாம் மனம் விரிந்து சிந்திக்காமல் நிலம் மீது எல்லைக் கோடுகளைப் போட்டுக் கொண்டு என் நாடு, என் மொழி, என் மக்கள், என் இனம் என்று வாழத் தொடங்கியவுடன் மனிதனின் மனத்திலும் எல்லைக் கோடுகள் விழத் தொடங்கிவிட்டன. இதன் விளைவு பாகுபாடுகள், கலவரங்கள், போர்கள், அழிவுகள்.

## இனப்பாகுபாட்டின் காரணமாய் எழும் சிக்கல்கள்

நிற வேற்றுமையின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்ட கொடுமைகள் நிறைந்தது தான் உலக வரலாறு. அமெரிக்காவை கொலம்பஸ் கண்டுபிடித்து கூறிய பின்னர், அங்கு குடியேற்றம் அமைக்கத் தொடங்கிய வெள்ளை இனத்தவர்கள், அந்நாட்டின் பூர்வீகக் குடிமக்களை அனேகமாக ஒட்டுமொத்தமாக லட்சக்கணக்கில் கொன்றே விட்டனர். ஆப்பிரிக்காவில் வசிக்கும் கருப்பு இன மக்களை மந்தை மந்தையாக பிடித்துச் சென்று அடிமைகளாக, ஆடு மாடுகளைப் போன்று சந்தைகளில் விற்கப்பட்ட கொடுமைகளை என்னவென்று கூறுவது.

செல்வங்களை கொள்ளையடிக்கும் உள்நோக்கத்துடன் உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் படையெடுத்துச் சென்று போர் நடத்தி, நாடுகளைப் பிடித்து, அந்த நாட்டுச் செல்வங்களைக் கொள்ளையடித்து, மக்களை அடிமைகளாக்கி ஆட்சி செலுத்துவது, அவர்களின் நம்பிக்கை, கலாச்சாரம் பண்பாடுகளை அழித்து விட்டு தங்கள் கலாச்சாரம் பண்பாடுகளை பின்பற்ற கட்டாயப்படுத்துவது போன்ற இழிச் செயல்களை என்னவென்று நியாயப்படுத்த முடியும்.

இந்தியத் துணைக்கண்டம் மிகப் பழமைவாய்ந்த நீண்ட பாரம்பரியக் கலாச்சார பண்பாட்டுடன் உயர்ந்த மனித நாகரீகம் கொண்ட நாடாக விளங்கியது. இதற்குச் சான்றுரைப்பதே ஹாரப்பா, மொகஞ்சதாரோ அகழ்வு ஆய்வுகள் ஆகும். இந்த நாகரீகத்தை

முதலில் சிதைக்கத் தொடங்கியது ஆரியர்களின் வரவு. ஆரியர்கள் தங்களின் கூர்ந்த அறிவுத் திறனால் சிந்து சமவெளி மக்களின் நாகரீகப் பண்பாடுகளை ஏற்றுக் கொண்டு , மெல்ல மெல்ல இவர்களின் உள்நோக்கத்தை உட்புகுத்திவிட்டனர். அதிலொன்று தான் பிரம்மச்சரியம், கிரகஸ்தம், வானபிரஸ்தம், சந்நியாசம் என்ற நான்கு வர்ணங்கள். பின்னாட்களில் இந்த வர்ணங்களே சாதிப்பிரிவுகளாகவும், அந்த சாதிப்பிரிவுகளில் உட்பிரிவுகளும் ஏற்பட காரணமாகிவிட்டன. இன்றைய நிலையில் சாதிக் கட்சிகளும், சாதி சங்கங்களும் தோன்றி பாகுபாட்டை மேலும் வலுப் பெறச் செய்யும் சக்திகளாகிவிட்டன.

## இதிகாச கால இனப்பாகுபாட்டு நிலைகள் :

மகாபாரதக் கதையில் சந்தனு மகாராஜாவின் மனைவி ஒரு மீனவ இனத்துப் பெண். அர்ச்சுனன், வீமசேனனின் சில மனைவியர் வேற்று இனத்தைச் சார்ந்தவர்களே. சத்திரியனான அர்ச்சுனனுக்கும், யாதவ குலக் கொடி சுபத்திரைக்கும் பிறந்தவன் தான் அபிமன்யு. அதுபோலவே வீமசேனனுக்கும் அரக்கர் குலத் தோன்றலான அவன் மனைவி இடும்பைக்கும் பிறந்தவன்தான் கடோத்கஜன் போன்றவர்கள். அந்த நாட்களில் சாதி, மத, இனப் பாகுபாடுகள் இல்லை என்பதற்கான சான்றுகள் இவை.

இராமாயணக் கதையிலும், இராமனுக்குக் கங்கைக் கரையில் குகன் என்ற அற்புதமான உடன் பிறவா வேடர் இனச் சகோதரன் அமைகிறான். இலங்கை சென்று சீதையை மீட்டுவரும் பணிக்கு ஜடாயு (கருடன்), ஜாம்பவான் (கரடி) அனுமன் மற்றும் வானர சேனைகள் எல்லாம் துணைபுரிகின்றன. இங்கு மனித இனத்தையும் கடந்து பிற உயிரினங்களையும் துன்புறுத்தாமல் தன் இனம்போல் சகோதர பாசத்துடன் நடத்த வேண்டுமென்ற தத்துவம் வெளிப்படுகிறது.

உயிர்களுக்கிடையிலுள்ள அடிப்படை ஒற்றுமையை அறியாதவர்கள் பிற உயிர்களுக்குத் தீங்கு செய்கிறார்கள். ஒரு ஜீவன் மற்றொரு ஜீவனைத் துன்புறுத்தும் பொழுது கடைசியில் அவன் தன்னையே துன்புறுத்திக் கொண்டவனாகிறான். எல்லார்க்கும் நலமே நாடுதல் அகிம்சை. அந்த அகிம்சை தழைக்க ஆன்மீகம் தழைக்க வேண்டும்.

''எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய்
அங்கங்கு இருப்பது நீ அன்றோ பராபரமே'' - தாயுமானவர்.

இந்தச்செய்திகளெல்லாம் ஏதோ இந்தியர்களுக்காக, தரப்பட்டவையல்ல. தரணி எங்கும் வாழும் ஒட்டுமொத்த மானுட வர்க்கத்திற்கே நம் மகான்களால் அளிக்கப்பட்ட புதையல்! வாழ்வியல் நெறிகள்! வற்றாத பேரின்பத்திற்கான வழிகாட்டுதல்கள்!

## முடிந்த முடிவு:

'' ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' '' யாதும் ஊரே, யாவரும் கேளிர்'' என்று தெய்வக் கோட்பாட்டையும், ஒரே இன உறவு முறையையும் உலகமக்கள் சமுதாயத்திற்கு

பறைசாற்றியது நம் முன்னோர்களின் ஆழ்ந்த அறிவின் உச்சநிலையின் வெளிப்பாடேயாகும். விரிந்து பரந்த உலக மக்களை நோக்கி 'சர்வோ சுகினோ பவந்து' - அனைத்து உயிர்களும் சுகமாக வாழட்டும் என்று வாழ்த்தியதும் இதே உயர்ந்த அறிவு தான்.

ஆகவே அந்த அறிவு இயற்கையைப் பூரணமாக உணர்ந்து, இயற்கையுடன் இசைவுடன் இணைந்து, இயற்கை ரகசியங்களை அறிந்து, பிரபஞ்சத்தையே ஆட்சி செய்யும் - அறிவின் வளர்ச்சி வேகம், ஆர்வம் அந்த இலக்கை அடைவது உறுதி, இறுதி. இந்த பயணத்தில் அறிவை அறிய அகம் நோக்கி, மனம் குவிய தியானம் ஒன்றே பாதை. முடிந்த முடிவு இதுவே.

**சான்றோர் கூற்று**

'' சாதிப் பிரிவுகள் சொல்லி - அதில்
தாழ்வென்றும் மேலென்றும் கொள்வார்
நீதிப் பிரிவுகள் செய்வார் - அங்கு
நித்தமும் சண்டைகள் செய்வார்'' என்று பாரதி கூறுகிறார்.

'மனிதன்' என்ற அடையாளம் அவனுடைய குணங்களின் தொகுப்பைதான் குறிப்பதாக இருக்க வேண்டுமே தவிர, ஒருவருடைய தோலின் நிறத்தைக் கொண்டு முடிவு செய்யக் கூடாது. தோலின் நிறம் இயற்கை - சூழ்நிலை கொடுத்தது. ஆனால் மனித மனம் மனிதனுக்கு தெய்வத்தால் கொடுக்கப்பட்டது. மனித மனத்தில் 'மனித நேயம்' பிறக்க வேண்டும் ; மானுடம் செழிக்க வேண்டும். சாதி இனப் பாகுபாடுகளும், கொடுமைகளும் மறைய வேண்டும். சமதர்ம சமுதாயம் உருவாக அன்பு மலர வேண்டுமென்பதை பாரதிப் பெருமகனார் சாதிக் குழப்பங்கள் நீங்கி அன்பின் அடிப்படையில் வாழத் தொடங்கினால் வையக வாழ்வு வளம் பெறும் என்று முழக்கமிடுகிறார்.

'' சாதிக் கொடுமைகள் வேண்டாம் - அன்பு
தன்னிற் செழித்திடும் வையம்.....''
'' காக்கை குருவி எங்கள் ஜாதி - நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்''

என்று மகிழ்ச்சிப் பேரலையின் கொண்டாட்டம் விண்ணில் பட்டுப் பிரதிபலிக்கும்.

தேசப்பிதா காந்தியண்ணல் வேற்றுமைகளை அகற்றும் நோக்குடன் அளித்துள்ள போதனைகளையும் இங்கு நினைவு கூருவோம் ;

'' என் நாடு விடுதலையடைய வேண்டும் தான். ஆனால் உலகில் மனித இனம் வாழ, என் நாடு அழிய வேண்டுமானால் - அழிந்தால் தவறில்லை. இனவெறிக்கு இவ்வுலகில் இடமில்லை. இதுவே எனது தேசியக் கொள்கை''

'' உலகம் தழுவிய அளவில் சிந்திக்கவே நான் விரும்புகிறேன். மனித இனத்தின் நன்மையை நாடுவதே என் தேசபக்தி. எனவே இந்தியாவுக்கு உழைப்பது என்றால் மனித இனம் முழுமைக்கும் உழைப்பதாகவே பொருள். தனித் தனியாய் சுதந்திரமடைதல் உலக நாடுகளின் இலட்சியமாக இருக்கக் கூடாது. உலக நாடுகளின் இலட்சியம் தாமாகவே முழு விருப்பத்துடன் ஒன்றையொன்று சார்ந்திருப்பதாக இருக்க வேண்டும்''.

இந்த அளவிற்கு மனம் விரிந்து உலக நாடுகளின் தலைவர்கள் சிந்தித்து ஏற்று செயல்படுத்தினால் இந்தப் பூமியை விடச் சொர்க்கம் வேறில்லை

**தீர்வுகள் :**

❊ நிற வேற்றுமைகளுடன் உலக மக்கள் இருக்கும் போதிலும், அனைவரும் ஒரே ஆதி மனிததாய் - தந்தையர்களின் வழித் தோன்றல்களே என்ற உண்மை விஞ்ஞான பூர்வமாக அனைவரும் ஏற்றுக் கொள்ளும் விதம் நிரூபிக்க வேண்டும்.

❊ விஞ்ஞான பூர்வமாய் நிரூபிக்கப்பட்டபின்னர், சிறுவயது முதலே கல்வி திட்டத்தின் மூலம் போதிக்கப்பட்டு, உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளத் திட்டமிட வேண்டும்.

❊ பல மத- பல தெய்வக் கோட்பாடுகள் நிலவி மக்களிடையே மிகப் பெரிய அளவில் பாகுபாடுகள் உருவாயின. இதற்கான தீர்வுகள் அவசர அவசிய அடிப்படையில் தேவையாய் அமைகின்றன. தேவை மனவிரிவும் - அறிவின் தெளிவுமேயாகும்.

❊ உலக மதத் தலைவர்கள் அனைவரும் ஒருங்கு கூடி தெய்வம் ஒன்றா? பலவா? என்று ஒரு தீர்க்கமான முடிவுக்கு வரவேண்டும். தெய்வம் ஒன்று எனில், எந்த ஒன்று அந்தத் தெய்வம் என்று மக்களுக்கு அடையாளம் காட்ட வேண்டும்.

❊ நாடு என்ற எல்லைக் கோடுகள் பாதுகாப்பு தொடர்பாக உண்டானது. நவீன விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி அடிப்படையில், உலக முழுமைக்கும் UNO அமைப்பினைப் பலப்படுத்தி, 'ஓர் உலக ஆட்சி' முறை வகுத்து நாடுகளின் எல்லைகளைப் பாதுகாக்கும் பணியை உலக ராணுவம் மேற்கொள்ள வேண்டும்.

❊ மொழியானது தகவல் பரிமாற்றத்திற்கு அடிப்படை என்பதை உணர்ந்து உலக மக்களுக்கு தாய்மொழி, தேசிய மொழி மற்றும் சர்வதேச மொழி ( International Language) என்று மும்மொழிக் கோட்பாடு கொண்டு வரலாம்.

❊ இயற்கை வளங்களை தேசிய உடமையாக்கல் மூலம் பிராந்திய மக்களிடம் எழும் பாகுபாடுகளை நீக்கி ஒற்றுமை உணர்வையூட்டலாம் (உ.ம். நதிநீர்)

❊ ஆன்ம உணர்வினை அடைந்துவிட்டால், யாரும் எவருக்கும் துன்பம் தரமாட்டார்கள். மத அமைப்புகள் - இறைவழிபாட்டையும் தாண்டி ஆன்ம உணர்வு அடையும் வழிகளை மக்களுக்குச் சாதனை வழியான தியானத்தின் மூலம் மட்டுமே வழங்க முடியும்.

# 2. சுற்றுச்சூழல் பாதிப்பும் அதன் தீர்வும்

முனைவர். **ரா. கண்ணன்**
தாவரவியல் துறைத் தலைவர்
என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி

'' இவ்வுலகம் இனியது, இதிலுள்ள வான் இனிமை
யுடைத்து, காற்றும் இனிது
தீ இனிது, நீர் இனிது, நிலம் இனிது
கடல் இனிது, மலைஇனிது, காடு நன்று
ஆறுகள் இனியன
உலோகமும் மரமும், செடியும் கொடியும்
மலரும், காயும் கனியும் இனியன
பறவைகள் இனியன
ஊர்வனவும் நல்லன
விலங்குகளெல்லாம் இனியவை
நீர் வாழ்வனவும் நல்லன
மனிதர் மிகவும் இனியர்''

என்று பூமியின் அற்புதம் குறித்துப் பாடி பரவசமடைந்தார் மகாகவி பாரதி. பூமி கால காலமாகப் பல்வேறு மாற்றங்களுக்கும் பேரிடர்களுக்கும் ஆளாகி வந்திருப்பது வரலாற்றுச் செய்திகளால் அறியலாகிறது. 'மாற்றங்கள் மட்டும் நிரந்தரம்' என்ற உண்மைக்கேற்ப பூமியில் மாற்றங்கள் இல்லையேல், ஒருசெல் உயிரின் பரிணாமம் இன்று பல்லுயிர்ப் பெருக்கமாக உலகெங்கும் பரந்து பட்டுக் காண இயலாது. கணிணி மற்றும் தொலைத் தொடர்புத்துறை வளர்ச்சியால் பூமிக்கிரகம் தொலைவுகளற்ற ஒரு குட்டிக் கிராமமாக மாறும் அதிசயம் நிகழ்ந்து வருகிறது. உணவுப் பொருள் உற்பத்தியில், உயிரி தாவர தொழில்நுட்ப உத்திகளின் வரவால் உலகநாடுகள் உணவுத் தட்டுப்பாடின்றித் தன்னிறைவு கண்டுள்ளன. செயற்கைக் கோள், தொலை உணர்த் தொழில் நுட்ப ஆராய்ச்சியில், நாடுகளையும், கண்டங்களையும் கடந்து சென்று தகவல் பரிமாறிக் கொள்ளும் நிகழ்வுகள் அரங்கேறி வருகின்றன. இவற்றிலும் மேலாகப் பிரபஞ்ச வெளியில் வேற்றுக் கிரகங்களில் உயிர்களைத் தேடி அலையும் உயர் தொழில்நுட்பமும் இன்று சாத்தியமாகி வருகிறது. இத்தகைய புரட்சிமிகு வளர்ச்சிகளனைத்தும் மானுட சமுதாயத்தில் மிகப்பெரிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தி வாழ்க்கை முறையை எளிதாக்கித் தந்துள்ளன.

## எங்கே அந்த பூமி?

பூமியின் பொக்கிஷங்களான, உயிர்க்காற்று, மண்வளம், நீர்வளம், தாவர உயிரினங்கள், பூமியின் சுற்றுச் சூழலில் நிகழ்ந்து வரும் வியத்தகு மாற்றங்களால் தற்காலிகப் பலன்களைப் பெற்று வந்தாலும், எதிர்காலத்தில் பேரிழப்பை ஏற்படுத்தும் விரும்பத்தகாத விளைவுகளையும் சந்தித்து வருகிறது. நமது முன்னோர்கள் நம்மிடம் விட்டுச் சென்ற பூமி அவர்களது காலத்தில் இருந்த வளத்தோடும், நலத்தோடும் இன்று நம்மிடம் இல்லை. சுற்றுச் சூழல் மாசுபட்டால் பூமியின் வளங்கள் சுரண்டடப்பட்டுப் பூமி நலிந்த நிலைமையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

பூமியின் சூழல் சீர்கெடக் காரணம் சுற்றுச் சூழலில் நிகழ்ந்து வரும் பல விரும்பத் தகாத மாற்றங்களே. காற்று மாசுபடுவதால் 'உயிர்வளிச் செயற்கைச் சாலைகள்' (Oxygen parlour) உருவாக்கப்பட்டு வருகின்றன. கழிவுகளின் கூடாரமாக மாறி வரும் பூமியில் மண்வளம் சீர்கெட்டு, சாகுபடி நிலங்களெல்லாம் மலட்டு நிலங்களாக மாறி வருகின்றன. நீர் நிலைகளில் முறையின்றி கொட்டப்படும் குப்பை மற்றும் ஆலைக் கழிவுகளால் நீர் ஆதாரங்கள் நலன் குன்றி, குடிநீர் புட்டிகளில் அடைத்து விற்பனை செய்யும் அவல நிலைக்கு மானுடம் தள்ளப்பட்டுள்ளது.

இத்தகைய பாதிப்புகளால், சுற்றுச்சூழல் சீர்கெட்டு உலகமே மிகப்பெரிய மீள இயலாத நிரந்தரப் பாதிப்புக்கு ஆளாகி வருகிறது. இன்று உலகையே அச்சுறுத்தும் சுற்றுச் சூழல் சீர்கேடுகளாக கீழ்க்கண்ட பிரச்சினைகள் அறியப்பட்டுள்ளன.

- காற்று மாசுபாடு
- நீர் மாசுபாடு
- ஒலி மாசுபாடு
- பல்லுயிர்ப்பேரழிவு
- கதிரியக்க கழிவுகள்
- புவி வெப்பமடைதல்
- பருவகால மாறுபாடு
- ஓசோன் படலச் சிதைவு
- அமில மழை
- திடக் கழிவுகள்

## காற்று மாசுபாடு

தொழிற்புரட்சியின் காரணமாக உலகளாவிய தொழில் வளர்ச்சி, தொழில் நுட்பவளர்ச்சி போன்றவற்றின் காரணமாகக் காற்று மண்டலத்தை மாசுபடுத்தும் காரணிகள் அதிகமாயின. நச்சு வாயுக்கள், துர்நாற்றம், மிதவைத்துகள்கள் மிக்க தூசி, புகை, மூடுபனி போன்றவை காற்று நலனைக் குறைக்கும் காரணிகளாக அறியப்பட்டிருந்தன. இயல்புக்கு அதிகமாக இவற்றின் அளவு காற்று மண்டலத்தில் உள்ளபோது, இவை பல்வேறு ஆபத்துக்களை விளைவிக்கின்றன. சாதாரணப் புகையிலையில் தொடங்கி தொழிற்சாலைகள் வரை உருவாக்கப்படும் புகை மனிதர்களிடையே, ஆஸ்துமா, நுரையீரல், புற்றுநோய் மற்றும் இதய நோய்களை எளிதில் உருவாக்கி விடுகின்றன.

1984 - ம் ஆண்டு இந்தியாவில் செயல்பட்டுவந்த பூச்சிக் கொல்லி மருந்து தயாரிக்கும் போபால் யூனியன் கார்பைடு ஆலை விபத்தில் ஏற்பட்ட மீத்தைல் அய்சோசயனைடு விஷ வாயுவுக் கசிவு தேசத்தின் மிகப்பெரிய பேரழிவாகி 30,000 உயிர்கள் மடிந்துபோன துயரச்சம்பவம் காற்று மாசுபடுதலின் கொடூரத்தினை அறிய உதவும் நிகழ்வு. தானியங்கி ஊர்திகள், மின்சார உற்பத்தியில் பயன்படும் நிலக்கரி எரிபொருள் போன்றவற்றிலிருந்து வெளிவரும் நச்சு வாயுக்களில் கலந்துள்ள சல்பர் மற்றும் நைட்ரஜன் ஆக்ஸைடுகள் காற்று மண்டலத்தை அசுத்தப்படுத்தி, நீர்த்திவலையோடு வினைபுரிந்து ஹைட்ரோகுளோரிக், நைட்ரிக் அமிலமழை பெய்யும் ஆபத்தான சம்பவங்களை ஏற்படுத்தி விடுகின்றன. நீர் நிலைகளிலும், தாவரங்களிலும், விலங்குகளிலும் ஆபத்தை ஏற்படுத்துவதோடு கூட, தாஜ்மஹால் போன்ற அழகிய நினைவுச் சின்னங்களையும் அமில மழை அசுத்தப்படுத்தி விடுகின்றது.

காற்று மாசுபடுதலுக்காக அடுத்த காரணி, நகரங்களிலிருந்து கிராமங்கள் வரை எங்கும் தற்போது நிறைந்திருக்கும் இரு சக்கர, மூன்று சக்கர, நான்கு சக்கர வாகனங்கள் ஆகும். இவற்றில் பயன்படுத்தும் பெட்ரோல் மற்றும் டீசலில் 16% மட்டுமே வாகன ஓட்டத்திற்கு எரிபொருளாகப் பயன்படுகிறது. எஞ்சிய 84% கார்பன் மோனாக்சைடாகவும், ஹைட்ரோ கார்பனாகவும், ஹைட்ரஜன் ஆக்ஸைடாகவும் வெளியேறி வருகிறது.

மேற்குறிப்பிட்ட காரணங்கள் தவிர, காற்றை மாசுபடுத்தும் பிற காரணிகளும் உண்டு. காற்றை கிழித்தபடி வானில் பறக்கும் விமானங்கள் வெளியேற்றும் திரவப்புகை, விண்வெளி நோக்கிப் பறக்கும் ராக்கெட்டுகளிலிருந்து வெளியேறும் வெப்ப ஹைட்ரஜன் போன்றவற்றோடு அணுமின் நிலையங்களிலிருந்து (செர்னோபில் மற்றும் புக்குஷிமாவைப் போல்) வெளியேறும் கதிர்வீச்சுகளும் கூடப் புவியின் காற்று மண்டலத்தைப் பெருமளவு மாசடைய வைக்கின்றன.

புவியின் சராசரி வெப்பநிலையில் மாற்றங்கள் ஏற்படுவது கடந்த இருபது ஆண்டுகளாக முக்கியத்துவம் பெற்றுள்ளது. புவியிலிருந்து எந்தப் பொருளை எரித்தாலும் புகை வருகிறது. இதற்குக் கார்பன் தான் காரணம். சூரியனில் நெருப்பு இருந்தும் புகை வராதாதற்கு அங்கு கார்பன் இல்லாததே காரணம். கார்பன், புகையில் மட்டுமல்ல நாம் வெளியிடும் கரியமில வாயுவும் கார்பனே. விலங்குகள், வயல்வெளிகள், கழிவுகள் மற்றும் குப்பைக் கழிவுகள் என்று புவியின் எல்லாவிதமான விசயங்களிலும் கரியமிலவாயு நீக்கமற நிறைந்துள்ளது. உண்மையில் கரியமில வாயுவும், கார்பன் எனும் வேதிப் பொருளும் இருப்பதால் தான் புவி உயிர்கள் வாழும், அபூர்வக் கோளமாக இருக்கிறது.

ஆனால் தொழிற்சாலைகள் மற்றும் புகை வண்டிகள் பலவற்றிலிருந்தும் வெளியேறும் கரியமிலவாயுவைப் போன்ற வாயுக்கள் நாம் நினைப்பதைப் போல புவியின் காற்று மண்டலத்தை கடந்து பிரபஞ்ச வெளியில் நுழைத்து விடுவது இல்லை. மாறாக அவை அயனி மண்டலத்தை அடுத்து, புவியைச் சுற்றி ஒரு குடைபோல சூழ்ந்து கொண்டு நிலை கொள்கின்றன. இந்தக் குடையை சுற்றுச்சூழல் வல்லுநர்கள் **‘கார்பன் குடை’** என்று அழைக்கிறார்கள்.

புவியின் மீது வந்து பகலில் கடுமையாகத் தாக்கும் சூரிய வெப்பம் இரவு நேரங்களில் மெல்ல வெளியேறி, கடலிலிருந்து வீசும் கடல் காற்று, நிலத்திலிருந்து கடல் நோக்கி வீசும். வெப்பமான பகல் காற்று போன்ற பூகோளவியல் காரணங்களினால் வெப்பம் மேலெழுந்து காற்று மண்டலத்தையும் கடந்து பிரபஞ்ச வெளியில் பரவுகிறது. புவியின் அதீத கார்பன் வெளியேற்றத்தால் உருவான கார்பன் குடை இந்தப் பகல் நேரப் புவி வெப்பம் வெளியேறாமல் தடுத்து விடுகிறது. இதற்கு, **'பசுமை இல்ல விளைவு**' என்று பெயர். இதனால் காலப் போக்கில் பகல் நேர புவி வெப்பம் கூடுதலாகிறது.

புவியின் சராசரி வெப்பநிலை ஏற்றத்தால் முதலில் பாதிக்கப்படுவது தட்பவெட்பநிலை ஆகும். சீரான வெப்பநிலை மாறுபாடு அடைந்து கோடைகாலம் நீண்டு போவதும் மழை வரத்துத் தாமதமாவதும், கால நிலையில் திடீர் திடீர் என்று மாறுபாடுகள் ஏற்பட்டு வறட்சி, நிலச்சரிவு, நிலநடுக்கம், கடுங்குளிர் என்ற இயற்கைப் பேரழிவுகள் ஏற்படுவதும் இயல்பாகிப் போனதற்கு இந்த சராசரி வெப்பக் கூடுதலே காரணம் என்று விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

## சிதையும் ஓசோன்; சீர்கெடும் பூமி

வாயு மண்டலத்தில் ஓசோன் என்றொரு வாயு வீதி உள்ளது. புவியை முழுமையாக இந்த ஓசோன் உறை திரைபோலச் சுற்றிக் கொண்டுள்ளது. சூரிய ஒளி புவி மீது விழும்போது வெறும் வெப்பம் மட்டும் வருவதில்லை. அதோடு சூரியனில் நடைபெறும் நியுக்ளியார் ஹீலியம் இணைவுமூலம் வெளிப்படும் புற ஊதாக் கதிர்களையும் புவியின் மீது கொண்டு வருகிறது. இந்தப் புற ஊதாக் கதிர்கள் ஆபத்தானவை. தாவரங்கள் தங்களது உணவைத் தயாரிக்க சூரிய ஒளியைப் பயன்படுத்துவதை நாம் அறிவோம். புறஊதாக்கதிர்கள் கொண்ட ஒளியை அவை பயன்படுத்தினால் புவியின் முழு உணவு மண்டலமும் நச்சாகும் அபாயம் உண்டு. குறிப்பாக, கடற் சூழலில் பெரும்பங்காற்றும் மிதவைத் தாவர நுண்ணுயிர்களின் (நுண் ஆல்காக்கள்) வளர்ச்சியைத் தடுத்து அதனைச் சார்ந்து வாழும் இன்ன பிற உயிரினங்களின் பேரழிவுக்குக் காரணமாக ஓசோன் குறைபாடு அமையக்கூடும்.

ஓசோன் 1% குறையுமானால் அதாவது 2% புற ஊதாக்கதிர்கள் பூமிக்குள் வர ஏதுவாக அமைகின்றது. புற ஊதாக் கதிர்கள் அதிகமாக பூமியைத் தாக்கும்போது கேன்சர் போன்ற கொடிய வியாதிகளை அவை மனிதர்களுக்கு ஏற்படுத்துகின்றன. மேலும் ஓசோன் குறைபாடு காரணமாக மலேரியா போன்ற தொற்று நோய்கள் ஏற்படவும், கிட்டத்தட்ட 17 மில்லியனுக்கும் கூடுதலான கண்புரை நோய் ஏற்படவும் கூடும்

இப்படிப்பட்ட புறஊதாக் கதிர்களை ஓசோன் மண்டலம் வரவிடாமல் வடிகட்டி வருகிறது. இதன் மூலம் ஓசோன் புவியை அழிவிலிருந்து காக்கிறது. குளிர்சாதனப் பெட்டிகளில் பயன்படுத்தப்படும் குளிர் வேதிப்பொருளான சி.எப்.சி (குளோரோ புளோரோ கார்பன்) தான் உலகளவில் இன்று ஓசோனுக்கு வில்லனாக அறியப்பட்டுள்ளது. சி.எப்.சி. வாயு குளிர்சாதனப் பெட்டிகள் மட்டுமல்லாது நாம் பயன்படுத்தும் வாசனை வேதித் திரவங்கள் முதல்

லிப்ஸ்டிக் வரை பலவித அலங்காரப் பொருட்களிலிருந்தும் வெளியேறுகிறது. கண்ணுக்குத் தெரியாத இந்த வாயு மேலெழுந்து வாயு மண்டலத்தை அடைந்து ஓசோனுடன் ($O_3$) வினைபுரிந்து அதனைச் சாதாரண ஆக்ஸிஜனாக ($O_2$)க் குறைத்து சிதைவடையச் செய்து வளிமண்டலத்திலிருந்து கீழே அனுப்பி விடுகிறது. இதனால் ஓசோன் மண்டலம் வேகமாக தனது மூலக்கூறுகளை இழந்து ஓசோன் படலம் சிதைவுறுகிறது. புற ஊதாக் கதிர்கள் பூமிக்குள் எளிதில் வர இது வழி வகை செய்கின்றது.

அண்டார்டிகாவில் தொடங்கி இந்தியாவின் இமயமலைச் சிகரங்கள், ஆப்ரிக்காவின் கிளிமஞ்சரோ உட்பட பல இடங்களின் மேல் ஓசோன் படலத்தில் பிளவு ஏற்பட்டுள்ளதை சர்வதேச விஞ்ஞானிகள் உறுதி செய்ததோடு செயற்கைக் கோள் புகைப்படங்களும் அதை நிரூபித்துள்ளன.

## நீர் மாசுபாடு

நீர் இல்லையேல் உயிர்கள் இல்லை, உயிர்களுக்கு அமுதம் போன்றது நீர், உலகில் நான்கில் மூன்று பங்கு நீரால் சூழப்பட்டிருந்தாலும், குடிப்பதற்கு உகந்த நீரின் அளவு மிக மிகக் குறைவே. 97.20% உப்பு நீராகவும், 2.80% நன்னீராகவும் உள்ள நிலையில், நன்னீரில் 2.380% பனிமலை சிகரங்களில் உறைந்து கிடக்கவும், 0.419% நிலத்தடி நீராகவும் உள்ளது போக எஞ்சிய 0.001% நீர் மட்டுமே மனிதப் பயன்பாட்டிற்குக் கிடைக்கிறது.

நீர் நிலைகளில் தேங்கியுள்ள நீர், பல்வேறு கழிவுகளின் சங்கமத்தால் மாசடைந்து போகிறது. தோல் பதனிடுதல், சுத்திகரிப்பு மையங்கள், பூச்சிக் கொல்லி மற்றும் உர உற்பத்தித் தொழிற்சாலைகள், வீட்டு உபயோகக் கழிவுகள், விலங்குகளின் எச்சம் போன்ற பல்வேறு கழிவுகள் அருகிலுள்ள ஆறுகள், ஏரிகள், குளங்கள் போன்றவற்றில் கலப்பதால் அங்குள்ள நீரின் தன்மை கெட்டு, அந்நீர் பயனற்றதாகி விடுகிறது. ஜப்பான் மினமாட்டா கடற்பகுதியில் ஏற்பட்ட பாதரச மாசுபாட்டால் நிகழ்ந்த துயரச் சம்பவங்கள் இன்றும் அங்குள்ள மக்களின் உடல் நலனைப் பாதிப்பிற்கு உள்ளாக்கி வருகிறது.

## கரையை விழுங்கும் கடல்கள்

பூமி உயிர் வாழத் தகுந்த வண்ணம் படைக்கப்பட்டுள்ளது. மிதமான வெப்பநிலை, மிதமான குளிர், என ஒரு கதகதப்பான சூழலில் உயிர்கள் வசித்து வருகின்றன. இதற்கெல்லாம் காரணம், பூமியைச் சுற்றி அமைந்திருக்கும் பாதுகாப்புக் கவசங்களேயாகும்.

புவியின் வெப்பநிலை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. இதன் தொடர் விளைவாக துருவப் பகுதிகளில் உள்ள பனிச்சிகரங்கள் உருகத் தொடங்கி, நதிகளில் நீர் மட்டத்தை உயர்த்தி, கடல் நீர் மட்டத்தையும் உயர்த்தி உயிரினங்கள் வாழும் நிலப் பரப்பினைக் கடல்கோள்கள் கொண்டு விடுகின்றன.

இதன் தொடர் விளைவாக புவி வெப்பநிலை $1.5^{o}C$ லிருந்து 2050- ம் ஆண்டில் $4.5^{o}C$ - யை எட்டும் என்றும் கடல் மட்டம் 20 செ.மீ லிருந்து 40 செ.மீ உயரக் கூடும் என்னும் ஆய்வு

முடிவுகள் உலகையே அச்சுறுத்துகின்றன. கடந்த ஒரு நூற்றாண்டு கால அளவிலேயே கடல் மட்டம் ஏறத்தாழ 30 செ.மீ உயர்ந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## திசைமாறும் காற்றுகள் தடுமாறும் பூமி

இத்தகைய வெப்பநிலை மாறுபாடுகளின் காரணமாக, கடல் நீரோட்டங்களின் போக்குகள் மாறி, பருவக் காற்றுகள் திசைமாறி வீசுவதால் பருவங்கள் தவறி மழை பெய்யத் துவங்குகின்றன. மாதம் மும்மாரி பெய்த காலமெல்லாம் கனாக் காலங்களாகி வருகின்றன.

கடல் நீர் மாசுபாடு காரணமாக மீன் வளம் பெரும் பாதிப்புக்கு ஆளாகி வருகிறது. எண்ணெய்க் கழிவுகள் மற்றும் நுண் ஆல்காக்களின் அபரிமிதமான வளர்ச்சியால் ஏற்படும் '**சிவப்பு வண்ண விளைவு**' போன்றவை கடல்நீரின் தன்மையை மாற்றிக் கடல் உணவுச் சங்கிலியில் தொடர் விளைவுகளை ஏற்படுத்திக் கடல் வளத்தைப் பெருமளவு பாதிக்கின்றன. பசிபிக் கடலில் ஏற்படும் இருவகையான நீரோட்ட மாறுபாடுகளான 'குட்டிப்பையன்' என்று பெயரிடப்பட்ட எல்நினோ என்ற வெப்ப நீரோட்டமும் 'குட்டிப் பெண்' என்று பெயரிடப்பட்ட லா நினா என்ற குளிர் நீரோட்டமும் உலகின் வெப்பநிலையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி அதீத வெப்பம், புயல், சூறாவளி, சுனாமி போன்ற இயற்கைப் பேரழிவுகளை ஏற்படுத்தி வருகின்றன. மேலும் மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து வெளியேறும் வெப்ப நீரும், அணு உலைகள் வெளியேற்றும் கதிரியக்க கழிவுகளும் கடல் நீரில் கலந்து அங்கு வாழும் உயிரினங்களின் வளர்ச்சியில், இனப்பெருக்கத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

## நில மாசுபாடு

மருத்துவக் கழிவுகள், நகர்ப்புற கழிவுகள், தொழிற்சாலை கழிவுகள், முறையற்ற விவசாயம் போன்ற பலவற்றால் மண்வளம், மீள இயலாத நிலையில் பாதிக்கப்பட்டுள்ளது. பல்வேறு விதமான பிளாஸ்டிக் வகைகளால் செய்யப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் பலவிதமான சூழல் பிரச்சனைக்குக் காரணமாக அமைகின்றன. இவை யாவும் எளிதில் மக்காத செயற்கை வேதிப் பொருட்களாக இருப்பதால், மண்ணில் குப்பையாக குவிக்கப்படுவதோடு, மண்ணின் காற்றோட்டத்தையும், நீர்ப்பிடிப்புத் தன்மையும் முற்றிலும் குறைத்து நில வளத்தைப் பாழ்படுத்துகிறது. உதாரணமாக ஒரு செய்தித் தாள் 6 வாரங்களிலும், அட்டைப் பெட்டி 2 மாதங்களிலும் மக்கிவிடும் நிலையில், பிளாஸ்டிக் பைகள் 1-3 வருடங்களிலும், குளிர்பான பாட்டில்கள் 400 வருடங்களிலும், கண்ணாடி குடுவைகள் கணக்கிட முடியாத கால அளவிலும் மக்காது மண்ணில் நிலைத்து விடுகின்றன. பிளாஸ்டிக் பைகள் நிலத்தைப் பாழ்படுத்தும், இவற்றின் முறையற்ற பயன்பாட்டால், ஆயிரக்கணக்கான விலங்குகள், டால்பின்கள், ஆமைகள், பெங்குயின்கள் போன்ற கடல் வாழ் உயிரினங்களும் பேராபத்தைச் சந்திக்கின்றன. பெட்ரோலியப் பொருட்களாலேயே பிளாஸ்டிக் உருவாக்கப்படுகிறது. பெட்ரோல் பற்றாக்குறையை சமாளிக்க பிளாஸ்டிக் உற்பத்தியையும் பயன்பாட்டையும் நிறுத்துவதும் கூட ஒரு அறிவு பூர்வமான வழியாகும்.

மேலும் பூச்சிக் கொல்லி மருந்தான டி.டி.டி. - பெருமளவில் விளைநிலங்களில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. விவசாயக் கழிவுகள் மண் உரத்தைப் பாதிப்பதோடு, நிலத்தடி நீரையும் மாசுபடுத்துகிறது. டி.டி.டி - யின் தங்கு திறன் அதிகமாக இருப்பதால் உணவுப் பொருட்களிலும், தாவர மற்றும் விலங்குத் திசுக்களிலும் சிறிது சிறிதாகப் படிந்து செறிவடைந்து இயல்பு நிலைக்கு அதிகமாகி நஞ்சாக மாறி விடுகிறது. இதன் விளைவாக தாய்ப்பால் கூட விஷமாகி வருவதாக ஆராய்ச்சி முடிவுகள் அதிர்ச்சித் தகவலைத் தருகின்றன.

**ஒலிமாசு**

ஒலி இசையாகவும், ஓசையாகவும், இரைச்சலாகவும் பல பரிணாமங்களைக் கொண்டது. இசையொலி இனிமையும், மன அமைதியும் தரக் கூடியது. கண்ணை மூடி ரசிக்கச் செய்யும் மென்மையான இசையை அறிவோம். அதே சமயம் காதுகளை மூடச் செய்யும் வண்ணம் ஒலி சப்தமாக எழுப்பப்படுமானால் அது இரைச்சலாகவும், பேரிரைச்சலாகவும் தோன்றி சுற்றுச் சூழலை பாதிப்பிற்கு உள்ளாக்குகிறது.

பேரிரைச்சல், கவனச்சிதைவை ஏற்படுத்தி வாகன விபத்துக்களை உண்டாக்கும். உடல் நலனுக்கு ஊறு விளைவிக்கும். இரத்த அழுத்தம் உயரும். மனநிலை பாதிக்கப்படும். காது செவிடாகும். தாவர வளர்ச்சியைப் பாதிக்கும். 90 db (டெசிபல்)-க்கும் கூடுதலான ஒலி, கேட்கும் திறன் நரம்புகளை நிரந்தரமாக பாதிக்கும். 120db- க்கும் கூடுதலான ஒலி, காது செவிடாகும்.

**களவு போகும் காடுகள் :**

ஏறத்தாழ நான்கு பில்லியன் ஆண்டு கால வரலாறு கொண்ட இந்தப் பசுமைக்கோளின் உயிர் ஆதாரம் காடுகள், காடுகள் என்றால் வெறும் மரங்கள் அல்ல. இயற்கை தனது போக்கில் உருவாக்கிய வாழிடங்கள், 1920 களில் உலகில் 40, 000 மில்லியன் எக்டேர் இயற்கைக் காடுகள் இருந்தன. 2001 - ஆம் ஆண்டு உலக உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO) காடுகள் குறித்த புள்ளி விபரம் ஒன்றை வெளியிட்டது. அதன்படி தற்போதைய உலகில் எஞ்சியுள்ள இயற்கைக் காடுகளின் மொத்தப் பரப்பே 3,870 மில்லியன் எக்டேர்கள் தான். அதிலும் ஆசியாக்கண்டத்தில் தான் உலகிலேயே மிகமிக வேகமாக இயற்கைக் காடுகள் அழிக்கப்படுகின்றன. 1990 - ல் 2 மில்லியன் எக்டேராக இருந்த இயற்கை காடுகளின் பரப்பு தற்போது வெறும் 4 லட்சம் எக்டேராக சுருங்கிப் போய் விட்டது.

காடுகள் தேயிலைச் சாகுபடிக்கும், தொழிற்சாலைகள் கட்டுவதற்கும் பெருமளவு அழிக்கப்பட்டு வருகின்றன. இது போன்ற இயற்கைப் பேரழிவுகளின் விளைவுகளை இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார் இவ்வாறு பட்டியலிடுகிறார்.

- ✶ உயிரியக்க மண்டலம் அழிகிறது.
- ✶ மழைவளம் குறைகின்றது / பொய்க்கின்றது.
- ✶ நதிகளுக்குக் கிடைக்க வேண்டிய நீர்வளம் குறைகிறது.

* கிடைக்கின்ற நீர் ரசாயனக் கலப்பாகி வருகிறது.
* உயிரினங்கள் மறைகின்றன.
* மலைச்சரிவும் நில வெடிப்பும் உள்ளே வீடுகள் புதைவதும் நடக்கின்றன.
* உணவு உற்பத்தி பாதிக்கப்படுகிறது.
* உயிரினங்களுக்கும், மனிதர்களுக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்படுகின்றன.

## சூறையாடப்படும் உயிரிப்பன்மயம்

விலங்குகள், பறவைகள், பூச்சி, புழுக்கள் என்று மில்லியன் கணக்கான உயிரினங்களின் வாழிடம் இந்த பூமி. இந்தப் புவியில் மனிதனை விடுத்த பிற உயிரினங்களின் எண்ணிக்கை மனித மக்கள் தொகையை விட எழுபது மடங்கு அதிகம். காடுகள் அழியும்போது, மனித இனத்தின் தேவைக்காக விலங்குகளும் அழித்தொழிக்கப்படுகின்றன. பெரிய அளவில் வெளியே தெரியாமல் நடத்தப்படும் இந்தப் பேரழிவால் புவியின் உயிரிப் பன்மயப் பாதுகாப்பு கேள்விக் குறியாகிறது.

உலகில் தற்போது மொத்தம் 716 வகை விலங்குகள் முற்றிலும் ஒரு உயிரி கூட மிச்சமின்றி அழியும் அபாயத்தில் உள்ளன. கிட்டத்தட்ட ஆயிரம் வகை மரங்கள் முற்றிலும் வளர்த்தெடுக்க முடியாதபடி அழிந்து போயின. கி.பி. 2050-ல் உலகின் கால் பங்கு உயிரினங்கள் முற்றிலும் அழிக்கப்பட்டுவிடுகிற அபாயம் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. 600 மில்லியன் ஆண்டுகளாக இயற்கை பத்திரமாக பாதுகாத்தவற்றை வளர்ச்சி, முன்னேற்றம், அறிவியல் என்ற பெயரில் ஒரு நாளைக்கு ஒரு டஜன் உயிரினம் என்கிற விதத்தில் ஈவு இரக்கமின்றி மனிதன் அழித்து வருவது மிகுந்த கவலை தருவதாகச் சூழல் ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர். புவியில் தற்போது தோரயமாக 10 மில்லியன் உயிரினங்கள் உள்ளன. இப்போது ஆண்டிற்கு 15,000 முதல் 50,000 உயிரினங்கள் வரை அழிக்கப்படுகின்றன. இதனால் உணவுத் தட்டுப்பாடு 2020 -ல் உச்சத்தை எட்டும் என்று கணிக்கப்படுகிறது.

இவை நீங்கலாக புதிய மரபணுமாற்ற முறையும் பழைய உயிரினங்களைப் பெரிதும் பாதிக்கிறது என்று சொல்லப்படுகிறது. மரபணு மாற்ற உயிர் மற்றும் உணவுப் பொருட்களால் இயற்கை உயிரினங்கள் அழியும் அபாயம் உள்ளதாகச் சூழல் ஆர்வலர்கள் அச்சுறுத்துகின்றனர்.

## என்ன செய்யலாம்? எப்படிக் காப்பாற்றலாம்?

பூமியை அழிவிலிருந்து காத்து, சுற்றுச்சூழல் மேம்பாடு காணப் பல்வேறு திட்டங்களையும் முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். கீழ்க்கண்ட சூழல் காக்கும் செயல்களை ஒவ்வொருவரும் மனதில் கொண்டு பூமியின் பாதுகாவலர்களாகச் செயல்படுதல் வேண்டும்.

- ❖ நச்சு வாயுக்களை வெளியிடும் மூலங்களைச் சரிசெய்தலும் குறைத்தலும்
- ❖ வாகனப் பயன்பாட்டைக் குறைத்தல்
- ❖ வாகனங்களில் ஒற்றைப் பயணத்தைத் தவிர்த்து கூட்டாகப் பயணித்தல்
- ❖ தொல் உயிர் எரிபொருள் பயன்பாட்டைத் தவிர்த்தல், மாற்று எரிபொருள் காண முயற்சித்தல்
- ❖ நறுமண / வாசனைத் திரவியங்களின் பயன்பாட்டைக் குறைத்தல்
- ❖ பசுமை வேதியியல் முறைகளின் மூலம் வேதிப்பொருட்களை உற்பத்தி செய்தல்
- ❖ பூச்சிக் கொல்லி, ரசாயன மருந்துகள் உபயோகத்தை தவிர்த்தல்
- ❖ பிளாஸ்டிக் பொருட்களை மறுசுழற்சி, மறு உபயோகம் செய்தல். மேலும் பிளாஸ்டிக் உபயோகத்தைத் தவிர்த்தல் / குறைத்தல்.
- ❖ பிளாஸ்டிக்கிற்கு மாற்றுப் பொருள் காண ஆய்வு செய்தல்
- ❖ பசுமை இல்ல வாயுக்களின் வெளியீட்டைக் குறைத்தல்
- ❖ திடக் கழிவுகளை மேலாண்மை செய்தல்
- ❖ ஆலைக் கழிவுகளைச் சீர் செய்தல் / மறு சுழற்சி செய்தல்
- ❖ புகைப்பதை நிறுத்துதல்
- ❖ காடுகளை வளர்த்தல்
- ❖ நிலத்தடி நீர் / மழைநீர் சேமித்தல்
- ❖ காடுகளைப் பாதுகாக்கப்பட்ட பகுதிகளாக்கி, விலங்கினங்களின் புகலிடமாக அறிவித்து நடைமுறைப் படுத்துதல்.

இத்தகைய பணிகளில் நம்மை இணைத்துக் கொண்டு அவற்றை மேற்கொள்வதும் செயல்படுத்துதலுமே நம் வாழும் பூமியின் நலன்காக்கும் வழிகளாகும் . அழிவினைத் தவிர்ப்போம்; இருப்பதைக் காப்போம் ; வளம் குன்றா வளர்ச்சி கண்டு வரும் சந்ததியும் வாழ வழி செய்வோம்.

# 3. அரசியல் கொந்தளிப்பும் தீர்வும்

முனைவர் **ரெ. முத்துக்குமரன்**
முதன்மையர்
வரலாற்றுத்துறை தலைவர்
ந.க.ம. கல்லூரி, பொள்ளாச்சி

''தண்ணீர் விட் டோவளர்த்தோம்? சர்வேசா! இப்பயிரைக்
கண்ணீராற் காத்தோம் ; கருகத் திருவுளமோ?'' - பாரதியார்.

**முன்னுரை**

1947 ஆகஸ்ட் 15 ஆம் நாள், இந்தியாவில் ஆங்கில ஆட்சியை அகற்றிய நாள். மன்னராட்சி என்பதனை ஒழித்து, மக்களாட்சியை மலரச் செய்து மக்களாகிய நாமே நம் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தை கொடுத்த சுதந்திர நாள் அது. இந்த நாளுக்காகத் தான் அன்றைய 30 கோடி இந்திய மக்களும் தங்கள் குடும்பங்களை மறந்து போராடினர். ஆயிரக்கணக்கானோர் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்தனர். இத்தனை தியாகங்களையும் அவர்கள் செய்தது தங்களுக்காகவோ, தங்கள் குடும்பத்தினருக்காகவோ அல்ல. அவர்கள் சந்ததியினரான நாமாவது சுதந்திர இந்தியாவில் வளமுடன் வாழ வேண்டும் என்பதற்காகத்தான்.

சுதந்திரமும் சுயநலமும் கைகோர்த்துக் கொண்டால் விடைபெறுவது பொறுப்புணர்வு. அரங்கேற்றுவது அராஜகம், அமளி குழப்பம். ஜனநாயகத்தின் நான்கு தூண்களாகக் கருதப்படுகின்ற நாடாளுமன்றம், நிர்வாக இயந்திரம், நீதித்துறை, ஊடகங்கள் ஆகியவை தங்கள் பணியிலிருந்து விலகிச் செல்வதன் காரணமாக அரசியல் கொந்தளிப்புகள் ஏற்படுகின்றன.

**நாடாளுமன்றம்**

அரசு அல்லது தனி நபர்கள் முன்வைக்கிற சட்ட முன் வடிவுகளை மக்கள் பிரதிநிதிகள் விவாதித்து முடிவெடுப்பதற்காக உருவாக்கப்பட்ட அவைதான் நாடாளுமன்றம், இந்தியா போன்ற ஜனநாயக நாட்டில் பல்வேறு மாநிலங்கள், கலாச்சாரங்கள், அரசியல் மற்றும் பொருளாதாரப் பின்னணியிலிருந்து வரும் மக்கள் பிரதிநிதிகள் அறிவுப் பூர்வமாக விவாதித்தால் ஒரு சட்டமுன் வரைவு பல கோணங்களில் பார்க்கப்படுவதற்கான வாய்ப்புகள் உண்டு.

ஆனால் நாடாளுமன்றத்தில் பல சட்டங்கள் விவாதிக்கப்படாமலேயே நிறைவேற்றப்படுகின்ற சூழ்நிலைதான் இன்று நிலவுகிறது.

சட்ட முன்வடிவுகள் மட்டுமல்ல, பல்வேறு அரசுத் துறைகளுக்குச் செலவிடப்படும் நிதி பற்றிக் கூடக் கேள்விகளோ, விவாதங்களோ இல்லாமல் நம் மக்கள் பிரதிநிதிகளால் ஒப்புதல் அளிக்கப்படுகின்றன.

அமளி, கூச்சல், குழப்பம் காரணமாக நாடாளுமன்றம் முடக்கப்படும் போதெல்லாம் நம்முடைய வரிப்பணம் எக்கசக்கமாக வீணாகிறது. ஒரு நாள் நாடாளுமன்றப் பணிகள் முடங்கினால், நாட்டிற்கு ஏற்படும் செலவு 1.23 கோடி ரூபாய்கள், நாடாளுமன்றத்தை நடத்த ஆகும் செலவு ஒரு நிமிடத்திற்கு ரூ. 23,083. இத்தனை செலவில் நடக்கும் நாடாளுமன்றத்தின் உறுப்பினர்கள் பொறுப்புணர்வோடு நடந்து கொள்கிறார்களா? என்றால் இல்லை என்ற பதிலே கிடைக்கிறது.

## நிர்வாக இயந்திரம்

சவாலான நேரங்களில் சுனாமி, தேர்தல், லட்சக்கணக்கானோர் கூடும் திருவிழாக்கள், மாநாடுகள், போன்றவற்றில் நிர்வாகம் தகுந்த திறமையோடு செயல்படுவதை நாம் கண்கூடாகப் பார்த்திருக்கிறோம். இந்தியாவின் 'ஸ்டீல் ஃபிரேம்'என்று வர்ணிக்கப்பட்ட இந்திய சிவில் சர்வீசை, இன்று அரசியல் வாதிகள் தங்கள் கைக்குள் வைத்துக் கொண்டு நிர்வாகத்தை சீர்குலைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அறிவாற்றலும் உழைப்பும் கொண்ட இளைஞர்கள் இந்தப் பணிகளுக்குக் கடுமையாக போட்டித் தேர்வுகளின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அந்தப் புத்திக் கூர்மையும், உழைப்பும், லட்சிய வேகமும் இளமையும் அரசியல்வாதிகளின் சுயநலத்திற்குப் பலியாகி விடுகின்றன, கடமையும் பொறுப்பும் மிக்க இளைஞர்கள் அரசியலுக்கு வந்து நிர்வாக இயந்திரத்தை சிறப்புடன் செயல் படுத்த வேண்டும்.

## நீதித்துறை

உச்சநீதி மன்றத்தில் CBI ஓர் அறிக்கை தாக்கல் செய்தது. ஓய்வு பெற்ற ஓர் உச்சநீதிமன்ற நீதிபதி, அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் 7 நீதிபதிகள் உள்பட 23 நீதிபதிகள் கடைநிலை ஊழியர்களின் பிராவிடன்ட் பண்ட் கணக்கிலிருந்து ரூ. 6.58 கோடி மோசடியாகப் பணம் எடுத்ததாகப் புகார் தெரிவித்தது. ஆனால் போதுமான ஆதாரங்கள் இல்லை எனக் குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவித்து விட்டது. இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட ஒரே நபரான ஆசுதோஷ் ஆஸ்தானா என்ற நீதிமன்ற ஊழியர், சிறையில் மர்மமான முறையில் இறந்து போனார். அவர் தான் இந்த ஊழலின் மூளை, அவருக்குத்தான் முழு விபரமும் தெரியும் எனப் பத்திரிக்கைகள் எழுதின.

நீதித்துறையிலிருந்து கசியும் ஊழல்கள் கவலை தருகின்றன. ஆனால் தேங்கிக் கிடக்கும் வழக்குகளின் எண்ணிக்கை பயமுறுத்துகிறது. இந்தியக் கீழ்நிலை நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கும் கிரிமினல் வழக்குகள் சுமார் 1.32 கோடி. இப்போதுள்ள வேகத்தில் இந்த வழக்குகள் விசாரிக்கப்பட்டால், அவை முடிவுக்கு வர 300 ஆண்டுகள் ஆகும்.

**ஊடகங்கள்**

ஒரு சாதாரண இந்தியன், எம்.பி.க்களை எளிதில் அணுக முடியாது. அதிகாரிகளை அத்தனை சுலபமாக பார்த்துவிட முடியாது. நீதிபதிகளை நெருங்க முடியாது. ஆனால் அவன் அதிகச் சிரமமில்லாமல் அணுகக் கூடிய இடம் ஊடகங்கள். இந்திய ஊடகங்கள் அதிகாரத்தில் இருப்பவர்களின் தவறுகளை அம்பலப்படுத்தி, அவர்கள் பதவியிலிருந்து தூக்கி எறியப்பட க் காரணமாயிருந்திருக்கின்றன. குற்றவாளிகள் தண்டிக்கப்படக் காரணமாயிருந்திருக்கின்றன. அனால் இன்று ஊடகங்கள் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டே அவை நீதிமன்றகளைப் போல வழக்கு நடத்தித் தீர்ப்பெழுதுகின்றன என்பது தான்.

மற்ற மூன்று தூண்கள் அளவிற்கு இல்லை என்றாலும் இந்த நான்காவது தூணும் மக்களின் நம்பிக்கையை இழந்து வருகிறது. வாழ்க்கை முன்னேற்றத்திற்கு எந்த வகையிலும் பயன்தராத செய்திகளுக்குச் சுவாரஸ்யம் என்ற பெயரில் முக்கியத்துவம், ஆக்கபூர்வமான செயல்கள் குறித்து அலட்சியம் என்ற அணுகுமுறை ஊடகங்கள் மீதான நம்பகத்தன்மையை தூக்கி எறிந்து விட்டன.

தொலைக்காட்சிகள் தலையெடுத்தபிறகு, திரைப்படங்களைத் தீனியாகத் தருவதே ஊடகங்களின் ஒரே வேலை என்றாகிவிட்டது. சுதந்திர தினச் சிறப்பு நிகழ்ச்சிகளில் கூட, சினிமா நட்சத்திரங்களைத் தான் முன்னிறுத்துகிறது. நம்முடைய நெடிய வரலாறு, கலை, கல்வி, அறிவியல், சுற்றுலாத்தலங்கள், இலக்கியம், திரைப்படம் சாராத இசை, உடல் நலம், ஆன்மீகம் எல்லாம் ஒதுக்கப்பட்டு ஓரம் கட்டப்பட்டு விட்டன. ஊடகங்கள் தகவல் சாதனங்கள் என்ற தகுதியை இழந்து வணிகப் பொருட்களாக வடிவம் மாறிவிட்டன.

சுதந்திர இந்தியாவின் மணி மகுடங்களாகத் திகழ்ந்திருக்க வேண்டிய இந்த நான்கும் முள் முடிகளாக மாறிப் போனது ஏன்? . அது சுயநலம். சுதந்திரம் சுயநலன்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட விபரீதத்தின் விளைவுகளைத் தான் நாடு நான்கு துறைகளில் மட்டுமல்ல, அனைத்து துறையிலும் கண்டு கொண்டிருக்கிறது. சுயநலனைத் துறக்காத எந்த சுதந்திரமும் இனிக்காது.

## தீர்வுகள் :

''நாம் என்ன செய்ய முடியும்? இவையெல்லாம் அரசாங்கத்தின் வேலைகள்'' என்று கூறி நாம் தப்பிக்க நினைக்காமல் நாம் தான் அரசாங்கம் என்பதை நெஞ்சில் நிறுத்த வேண்டும். மாற்றம் என்பது மக்களில் துவங்குவது என்பதை மனதில் பதிவு செய்ய வேண்டும்.

அமெரிக்க அதிபர் ஒபாமா. அதிபர் பதவிக்குப் போட்டியிட்ட பொழுது கூறிய முழக்கமே, 'ஆம், நம்மால் மாற்ற முடியும்' என்பது தான். ஆனால், அவருக்கு முன் மாதிரியாக இருந்தவர் '' மாற்ற முடியும்'' என நம்பவைத்தவர் மகாத்மா தான் என்று அவரே கூறியுள்ளார். மேலும் 50 ஆப்பிரிக்க நாடுகளின் இளம் தலைவர்கள் அமைப்பில் பேசிய பொழுது அதையே வலியுறுத்தும் விதமாக, 'நீ முதலில் மாற வேண்டும்' என்ற மகாத்மாவின் பொன்மொழியைச் சுட்டிக்காட்டி அந்த இளந்தலைவர்களை, தன்னலமின்றி பொறுப்பேற்றுச் சமுதாய அக்கறையுடன் செயல்பட அறிவுறுத்தினர். இந்தியன் என்ற நம்மை பெருமையடைய வைப்பது அவரது அறவழி நெறிமுறைகளின் அழியாத புகழையே காட்டுகிறது.

வேதாத்திரியத்தில் அரசியலைப் பற்றி கூறும் போது

'' அரசியலும், வாணிபமும் மக்கள் தம்மை
அடக்கிடவும், உறிஞ்சிடவும், ஏற்றதாச்சு
அரசியலே இவ்விரண்டில் முதன்மை என்று
அறிந்திட்டார் சிலர். அதனால் திட்ட மிட்டு,
அரசியலைத் தந்திரத்தால், ஒழுங்கீனத்தால்
அடையமுயல் கின்றார்கள், போட்டி யிட்டு,
அரசியலே முரடர்களின் சொத்தாய் மாறும்
அவலநிலை யைமுதலில் மாற்ற வேண்டும்'' - வேதாத்திரி மகரிஷி

ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு - குறள் (740)

நல்ல அரசனைப் பெறாத நாடு எல்லா வளங்களையும் பெற்றிருந்தாலும் அவற்றால் பயன் இல்லாமல் போய்விடும்.

# 4. உலகை அச்சுறுத்தும் தீவிரவாதமும் தீர்வும்

முனைவர் **பி. பத்ரி ஸ்ரீமன் நாராயணன்**
முதல்வர், என்.ஜி.எம். கல்லூரி,
பொள்ளாச்சி.

உலகை இன்றைய காலகட்டத்தில் தீவிரவாதம் அதிதீவிரமாக வேட்டையாடிக் கொண்டுள்ளது! மானுடத்தின் இந்த நோய்க்கான காரணம் என்ன? இதற்கான மருத்துவம் உள்ளதா? எதிர்காலத்தில் மானுடம் இதன் கோரப்பிடியிலிருந்து தப்புமா? இது போன்ற வினாக்களுடன் கூடிய சிந்தனை மனிதாபிமானம் கொண்ட எவருடைய உள்ளத்திலும் எழுவது இயல்பே.

**தோற்றுவாய்**

தீவிரவாதம் சமீபத்தில் தான் தோன்றியது என்று இருக்குமானால் அதற்கான தீர்வு காண்பது என்பதும் எளிதாக இருக்கும். ஆனால் மனித இனம் தோன்றிய நாள்தொட்டே தீவிரவாதமும் தோன்றியிருப்பதை உணர்ந்து கொள்ள முடிந்தால், மானுட இனத்தின் ஆயுளும் தீவிரவாத இயக்கத்தின் ஆயுளும், ஒன்றாகவே இருப்பதைப் புரிந்து கொள்ளலாம்.

சாக்ரடீஸ் போன்றவர்களை விஷம் அருந்தச் செய்ததும், இயேசு போன்றவர்களை சிலுவையில் அறைந்ததும், மகாத்மா காந்தி போன்றவர்களைத் துப்பாக்கி தோட்டாக்களுக்குப் பரிசளித்ததும் இந்த தீவிரவாதம் தான். கூர்ந்து சிந்தித்தால் இரண்டு உலக மகா யுத்தங்கள் உட்பட மனித வரலாற்றில் நடந்தேறிய போர்கள் எல்லாம் தீவிரவாதத்தின் வெளிப்பாடாகும்.

அடிப்படை வாதம் செறிந்த சமயமோ, அதன் பிரிவோ, தனது கொள்கையை எங்கும் பரவச் செய்ய வேண்டும் என்று முனைந்தால் அதுவே பிற சமயத்தவரிடம் முரட்டுத் தனத்தையும் தூண்டிவிட்டு விடும். விளைவாக வன்முறை பெருகும். ஆகவே கோபதாபங்களைக் கட்டுக்குள் வைத்திருக்கவும், சகிப்புத் தன்மை உருவாகவும், முரண்பாடுகள் நீங்கிக் கொந்தளிப்புகள் இன்றி மனநிலை சாந்தமாக இயங்க என்ன செய்தால் நன்மை விளையும்? நியாயமான வரையறைக்குள் நாடுகளின் வல்லமைகளைக் கட்டுப்படுத்துதல் நன்மை தரும். கல்வியின் மூலமாகச் சமய நன்மைகளின் பொதுத் தன்மைகள் பயிற்றுவிக்கப்பட வேண்டும். அத்துடன் இக்கல்விமுறையானது அறிவு பூர்வமாக விஞ்ஞான ரீதியில் அமைந்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் அதை முழுமையாக ஏற்று சமுதாய மாற்றங்களை மக்களிடையே கொண்டு வர முடியும்.

பொருளாதாரத்தைப் பற்றித் தவறான புரிதலால், 'செல்வமே எல்லாம்; அதுவே அனைத்தின் ஆதியும் அந்தமும்' என்ற சிந்தனை வலுப்பெற்று விடுகிறது. இதன் விளைவு குடும்ப நெருக்கங்கள், மனித உறவுகள், சமுதாயக் கடமைகள் போன்றவை பின்னுக்குத் தள்ளப்படுகின்றன.

ஆசை மனிதனின் உடன் பிறப்பு, ஆசையே வாழ்க்கையின் பிரதான உந்து சக்தி என்றாலும் மிகையாகாது. ஆசைகளைக் கட்டுப்படுத்தாதபோது, சீரமைக்கப்படாதபோது அது பேராசையாக மாறுவதுடன், ஆசை நிறைவேற்றப்படத் துணையாகும் செல்வம் பேராபத்துக்கு வழிவகுத்துவிடுகிறது.

பொருளியல் உலகில் வாழும் மனிதன், தன்னுடைய பிரச்சனைகளுக்கான தீர்வையும் பொருளியல் உலகிலேயே தேடுகிறான். ஆனால் பிரச்சனைகளின் வேர் பொருளியல் உலகில், அதாவது புறஉலகில் இல்லை. இதன் வேர் அகஉலகில் ஆசைகளைத் தோற்றுவித்த மன உலகில் - நம்முடைய நடத்தைகளின் சித்தாந்தங்களில் உறைந்து கிடக்கின்றன. ஆகவே புறஉலகையும் அதைவிட அகஉலகையும் அதிகமாக (மனதை) ஆராய்ந்து தீர்வைக் காண வேண்டும்.

தேவைக்கு மேல் சொத்தையும், செல்வத்தையும் சேகரிக்காமல் தவிர்த்து, தங்களின் மகிழ்ச்சிக்காகப் பிறருக்குத் துன்பம் விளைவிப்பதையும் பிறர் பொருளை அபகரிப்பதையும் முழுமையாகக் கைவிட வேண்டும்.

## உலகை அச்சுறுத்தும் தீவிரவாதம்

உலகின் அமைதிக்கும், வளத்திற்கும், தீவிரவாதத்தின் செயல்களால் ஆபத்து என்ற அச்ச உணர்வு எழுந்துள்ளது. உலகம் முழுவதும் பரவியுள்ள தீவிரவாதம், வளர்ச்சி அடைந்த நாடுகளின் மற்றும் வளர்ந்து வரும் நாடுகளின் பொருளாதாரத்தைப் பின்னடைவு செய்ய வைக்கிறது. தீவிரவாதம் ஒரு குறிப்பிட்ட பகுதியில் மட்டுமே காண முடிகிறது, என்றில்லாமல் உலக நாடுகள் பலவற்றிலும் தனது வேர்க்கால்களை நீட்டிப் பரப்பி வேரூன்றியுள்ளது.

தீவிரவாதத்தின் பல்வேறு விதமான கருத்துக்கள், அந்தப் பகுதி மக்களைத் தீவிரவாதத்தின் பக்கமாக ஈர்க்கக் காரணமாகி இறுதியில் அப்பகுதியின் அமைதியும், வளமும் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டு ஆபத்துக்குள்ளாகி விடுகிறது.

இன்று காணப்படும் தீவிரவாதம் மனித இனத்திற்குப் புதிதல்ல, ஆதிகாலம் தொட்டே மானுட இனத்தின் வளர்ச்சியிலும் நாகரிகத்திலும் வன்முறைச் செயல்கள் ஒரு பகுதியாகவே இருந்திருக்கிறது. இன்றைய காலகட்டத்தில் தீவிரவாதம் முறையாகத் திட்டமிட்டுச் செயல்படும் அமைப்பாக (Organized nature) உருவாகி வளர்ந்துள்ளதால் அதிகக் கவலைப்பட வேண்டியுள்ளது.

## தீவிரவாதத்திற்கான காரணங்கள்

அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியிலும், நாடுகளுக்கிடையே ஏற்படும் உள்ளீடான இயல்பான போட்டிகளால் தீவிரவாதம் பலவிதங்களில் வளரக் காரணிகளாக உருவாகியுள்ளன. எதிர்காலத்தில் உலக நாடுகளிடையே விரோதம், கருத்து வேறுபாடு, பகைமை காரணமாக நேரடியான போரில் ஈடுபட மாட்டார்கள். ஆனால் இச்செயல் அறிவியலும் தொழில்நுட்பமும் சார்ந்து இருக்குமென்று கூறப்படுகிறது.

நாடுகளுக்கிடையே உண்டாகும் கருத்து வேறுபாடுகள், நீர் ஆதாரங்கள் போன்ற இயற்கை வளங்களைப் பங்கிட்டுக் கொள்வது, நாடுகளுக்கிடைப்பட்ட எல்லைப் பிரச்சினைகள், அகதிகள் வருகை, மதவெறிச் சண்டைகள், பூமிக்கடியில் இருந்து கிடைக்கும் இயற்கை தரும் எண்ணெய் வளங்களைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளல், இன வேறுபாடுகள், மொழி, பண்பாடு, பழக்க வழக்கங்கள், கலாச்சாரம், வாணிபம் போன்றவைகள் தீவிரவாதத்திற்கான நீண்ட பட்டியலில் இடம்பெறும் சில சக்திமிக்க வலிமையான காரணங்களாக அமைந்துள்ளன.

தீவிரவாதம் என்பது மனித அறிவுக்கு எட்டாத ரகசிய நிகழ்வு அல்ல. சண்டையிடும் குழுக்கள், தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள, அரசியல் வன்முறையால் உலக முழுவதும் மறைமுக நடவடிக்கைகள் மூலம் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. தீவிரவாதம் என்பது ஒரு விதமான முன்கூட்டியே திட்டமிட்டுச் செயல்படும் வன்முறைத் தன்மை தான். இது இரகசியமாகச் செயல்படும் தீவிரவாதக் குழுக்களால், போராட்டத்தில் (ஈடுபடாத), சம்பந்தமில்லாத அப்பாவிகள் மீது, பொதுமக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் நடத்தப்படும் தாக்குதல் எனலாம். சில தென் ஆப்பிரிக்க நாடுகளில் அரசு அதிகாரத்தைத் தன் வசம் எடுத்துக் கொண்டு நடைபெற்றுவரும் இராணுவ ஆட்சிகளும் மற்றும் தன்னிச்சையாக செயல்பட்டுக் கொண்டிருக்கும் கொரில்லா போராளிக் குழுக்கள் போன்ற அமைப்புகளும் இந்த விதமான முக்கியத்துவம் வாய்ந்த தீவிரவாத அமைப்புகளாகக் கருதப்படுகின்றன.

## உலகமகா யுத்தங்களுக்குப் பின்னர் தீவிரவாதம்

வரலாற்றின் பக்கங்களைப் புரட்டிப் பார்க்கும்போது, உலக அளவில் தீவிரவாதத்தின் பரிணாம வளர்ச்சியை புரிந்து கொள்ள இயலும்.

வல்லரசுகள் முதல் மற்றும் இரண்டாம் உலக மகா யுத்தங்களுக்குப் பின்னர், பிற நாடுகளில் ஏற்படுத்தியிருந்த ஐரோப்பிய நாடுகளின் காலனி குடியேற்றங்களின் எண்ணிக்கைகளைக் குறைத்துக் கொள்ளத் தொடங்கினர். காலனிகளின் பிடியிலிருந்து சுதந்திரம் பெற்று விடுதலையான நாடுகளில் வாழும் பூர்வீக குடிமக்களின் உணர்வுகளை

குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டு விடப்பட்டன. உதாரணமாக :- இவ்வாறு புதியதாக உருவான நாடுகளில் மத, இன, மொழி அடிப்படையில் சிறுபான்மையினராக இருந்தவர்களுடன் சேர்க்கப்பட்டே, அந்த பெரும்பான்மையினரின் இரக்கத்தின்பால் விடப்பட்டனர். இந்த பெரும்பான்மையினர்,சிறுபான்மையினர் கலப்புச் சூழ்நிலை உள்நோக்கத்துடனேயே வளர்க்கப்பட்டும் வந்தன. இந்த பிரித்தாளும் தந்திரம் காரணமாய்த் தேசிய இயக்கங்கள் தோன்றிச் சுதந்திர உரிமைக் கோரிக்கை எழுவதற்குப் பல நாடுகளில் பல ஆண்டுகள் காலதாமதம் ஆயின.

முதல் உலகப் போருக்குப் பின்னர் குர்து இன மக்கள், அவர்களுக்கென என தனிநாடு ஏற்படுத்தித்தரப்படும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தனர். ஆனால் போருக்குப்பின்னர் நாடுகளின் எல்லைகளை நிர்ணயித்தபோது குர்து இனத்தவர்களுக்கென்று தனிநாடு உருவாக்கப்படாமல் துருக்கி, ஈரான், ஈராக் நாடுகளுக்கிடையே பொதுவாக விடப்பட்டனர். பாலஸ்தீனம் பிரிக்கப்பட்டு இஸ்ரேல் என்ற யூதர்களின் புதிய நாடு உருவாக்கப்பட்டது. அயர்லாந்தின் விடுதலைப் படையினர் இங்கிலாந்தின் வடபகுதிகளைத் தங்கள் நாட்டுடன் இணைத்துக் கொள்ளச் செய்யும் முயற்சிகள் இன்றுவரையிலும் தொலைதூரக் கனவாக உள்ளன.

சீனா, பிரேசில், கியூபா போன்ற நாடுகளில் பாதிக்கப்பட்ட குழுக்களைச் சேர்ந்த மக்கள், அந்நாட்டு அரசுகளுக்கு எதிராகக் குரலெழுப்பி, திடீரென பெரிய மாற்றங்களை ஏற்படுத்தி வெற்றி பெற்றதும் போராளிகள் உருவாகக் காரணங்களாகி விட்டன.

பொருளாதார வல்லரசுகளும், சில நாடுகளில் மட்டுமே பொருள் வளம் குவிக்கப்படுவதும் - அந்த நாடுகள் பிற நாடுகள் மீது சர்வாதிகாரிகளாக செயல்படும் அமைதிக்காலப் போர் நிலைமைகளை (cold war situations) உருவாக்கி மறைமுகப் போர்களையும், தீவிரவாதத்தையும் தூண்டிவிடும் தீப்பொறிகளாகச் சிலநாடுகளில் உருவாகி விட்டன. கம்யூனிசத்திற்கும் குடியரசுக்கும் இடைப்பட்ட போராட்டமே அமைதிக்காலப் போர் சூழல் (Cold war) என்று வரையறை செய்யலாம்.

## இந்தியத் துணைக் கண்டத்தில் தீவிரவாதம்

இந்திய துணைக் கண்டத்தின் வடக்கு, கிழக்கு மற்றும் மேற்கு திக்குகளின் நீண்ட எல்லைப் பகுதிகளில் பெரும் சவால்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது. மாவோயிஸ்டுகளின் தாக்குதல்கள் உள்நாட்டு அமைதிக்கு அச்சுறுத்தலாக உள்ளன. சட்டீஸ்கர் மாநிலத்தில் தன்டோவா காட்டுப்பகுதியில் மத்தியப் பாதுகாப்புப் படையினர் (CRPF) எழுபத்தைந்து பேர்கள் மாவோயிஸ்டுகளால் சூழப்பெற்றுக் கொல்லப்பட்டனர்.ஒரிசாவில் மாவட்ட ஆட்சியர் திரு. R. வீனீல் கிருஷ்ணா மால்கண்ட்கிரி பகுதியில் (Malkangiri) மாவேயிஸ்டுகளால் கடத்தப்பட்டார்.

நாட்டின் ஒரு பகுதியில் அபரிமிதமான வளர்ச்சியும் மற்றொரு பகுதியில் கவனிப்பு இன்றிப் பின்தங்கி இருப்பதும், எங்கும் பரவலாப் பெருகியிருக்கும் ஊழலும், சரியான படி திட்டமிடப்படாமல் மேற்கொள்ளப்படும் மாநில, மைய அரசுகளின் திட்டங்களும் புகைந்து கொண்டிருக்கும் தீவிரவாதத்திற்கு நெய் வார்ப்பது போல் அமைந்து விடுகின்றன.

இந்தியாவில் காஷ்மீர் பகுதியில் வாழும் மக்கள் தீவிரவாதிகளை 'ஆஸாதிகள்' என்றும் 'சுதந்திரப் போராட்ட வீரர்கள்' என்றும் நம்பப்பட்டு தீவிரவாதம் வளர்க்கப்படுகிறது.

எந்த ஒரு யுத்தத்திலும் முதலில் தன்னுடைய 'எதிரி யார்' என்று அடையாளம் கண்டு கொள்ள வேண்டும் என்பதே முதல் விதியாக அமையும். தவறாக வழிநடத்தப்பட்ட இளைஞர்களும், சிறுவர்களுமே ஈடுபடுத்தப்படுகிறார்கள் என்பது தான் மிகவும் துக்ககரமானது. பெரும்பாலும் தீவிரவாதத்திற்கு திட்டமிட்டவர்கள் பின்னணியில் இருந்து கொண்டு தப்பி விடுகின்றனர்.

மனித சமுதாயத்தை எல்லாத் தருணங்களிலும் மேம்பட்ட விழுமியங்களாக்குவன. (Noble Values) 'ஈட்டுதலும் பகிர்ந்து கொள்ளுதலும்' ' தொண்டும் தியாகமும்.' இத்தகைய விழுமியங்களே அழிவிலிருந்து காத்து வருகின்றன என்பதை நினைவு கூர்ந்து கொள்ள வேண்டும்.

## தற்காலத்தில் தீவிரவாதத்தின் போக்கு

1990 ம் ஆண்டிலிருந்து தீவிரவாதம் புதிய வடிவம் எடுத்துள்ளது. அது தீவிரவாதத்திற்கு எதிர் நடவடிக்கை எடுக்கும் இடங்களில் மனித வெடிகுண்டுகளும், தற்கொலைப்படைகளும் தீவிரவாதிகளால் அறிமுகப்படுத்தப்பட்டுப் புதிய அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

உலக நாடுகள் எல்லாம் தீவிரவாதிகளின் தேவைகளையும் பூர்த்தி செய்து, அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற அரசியல் ரீதியான பேச்சுவார்த்தைகள் நடத்தத் தயாராக உள்ளனர். தீவிரவாதத்திலிருந்து முழுமையாக விடுபடுவதற்கு தீவிரவாதிகளுக்கு மீட்புத் தொகை வழங்கவும், பயங்கரமான தீவிரவாதிகளை விடுதலை செய்யவும் மற்றும் அவர்களின் பிற கோரிக்கைகளை நிறைவேற்றவும், அரசுகள் ஒத்துக் கொள்கின்றன.

இத்தகு செயல்கள், உண்மையில் தீவிரவாதிகளை மேலும் உற்சாகமூட்டி, தீவிரவாதத்தின் புதிய இலக்கை நிர்ணயித்து ஆச்சரியப்பட வைக்கும் விதமாக நவீன முறையில் தாக்குதல்களும் போராட்டங்களும் நடத்த உதவுகின்றன. அமெரிக்காவின் 'உலக வர்த்தக மையம்' மீது நடத்தப்பட்ட தீவிரவாதிகளின் தாக்குதல், நாகரிக உலகின் மீது நடத்தப்பட்ட அதிர்ச்சியளிக்கும் மிகக் கொடூரமான செயலாகும்.

## தீவிரவாதத்திற்கான தீர்வுகள்

மேற்கூறப்பட்ட பல்வேறு காரணங்களின் அடிப்படையில் தீவிரவாதத்தின் கோரமுகம் வெளிப்படுத்தப்படுகிறது. தற்காலச் சூழ்நிலையில் அமைதியுடன் அனைவரும் கூடிவாழ்வதற்கு கீழ்க்கண்ட தீர்வுகளை மேற்கொள்வதும் நடைமுறைப்படுத்துவதும் நன்மை பயக்கும்.

★ தீவிரவாதிகளை அழைத்து நேரடியாக அவர்களுடன் கலந்தாலோசித்து, பிரச்சனைகளை எளிதாகக் கையாள்வதுடன் அவற்றிற்கு நிரந்தத் தீர்வு காணுதல் வேண்டும்.

★ நாடுகளுக்கிடையே அமைதிப்போர்காலச் சூழலைத் தவிர்த்து (Coldwar) நல்ல புரிந்துணர்வுகள் மூலம் நட்பை பலப்படுத்துதல் வேண்டும்.

★ உலக சமுதாயம் ஒன்றுகூடி தென்னாப்பிரிக்க நாடுகளில் நிலவும் வறுமையின் கொடூரப்பிடியிலிருந்து அந்நாட்டு மக்களை மீட்டெடுக்க வேண்டும். போர்க் குணத்தையும், இனமோதல்களையும் இதன் மூலம் முடிவுக்கு கொண்டு வருதல் வேண்டும்.

★ அணுசக்தித் தொழில்நுட்ப பரவலையும், அணு ஆயுதம் தொடர்பான தீவிரவாதத்தையும் மறு ஆய்வுக்கு உட்படுத்தி, உலக நாடுகளின் அணு சக்திக் கொள்கைக் கருத்து வேறுபாடுகளைப் போக்க வேண்டும்.

★ உலகில் உள்ள இயற்கை வளங்களை உபயோகப்படுத்திக் கொள்ளும் செயல்களில் மேற்கொள்ளப்படும் பேதவேற்றுமைகள் மீது கவனம் செலுத்திக் களைவது தீவிரவாதத்திற்கு முடிவு காண உதவும்.

★ உலகளாவிய எச்சரிக்கைகளை மிதப்படுத்தி (Reducing Global Warning) கியோடோ (Kyoto) ஒப்பந்தத்தை தாண்டி, பிற நாடுகளையும் இணைத்துக் கொண்டு உலக அமைதியை அடைவதில் வெற்றிபெறுதல் வேண்டும்.

★ ஜெனீவா ஒப்பந்தத்தைப் பின்பற்றுவதும், குவாண்டனமா சிறையை (Guantanamo Prison) மூடுவதுடன், சித்திரவதை செய்யும் கோட்பாடுகளைப் பின்பற்றும் உலகின் சில நாடுகளின் செயலையும் தவிர்ப்பதன் மூலம் தீவிரவாதத்திலிருந்து திரும்ப வழிவகை காணுதல் வேண்டும்.

★ மானிட நலன்கருதி, பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்த நாடுகளின் வெளியுறவுக் கொள்கைகள், சட்ட திட்டங்கள், தீர்மானங்களை எல்லாம் மறு ஆய்வு செய்து திருத்தங்களை ஏற்படுத்திச் செயல்படுத்துதல் வேண்டும்.

# 5. கலாச்சார சீரழிவும் தீர்வும்

முனைவர் **பொ.மா. பழனிசாமி**
தமிழ்த்துறை
என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி

**முன்னுரை :**

'அரம் போலும் கூர்மையரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லாதவர்' (குறள் - 997)

கூர்மையான அரத்தைப் போன்று கூர்ந்த அறிவை ஒருவர் பெற்றிருந்தாலும், மானிடப் பண்புணர்வினைக் கொண்டிருக்கா விட்டால் அவர் மரத்திற்கு ஒப்பாவார். ஏனெனில் மானிடவியல் பண்புணர்வே மனிதனை மனிதனாக இருக்கச் செய்யவும், அவன் வாழ்வைச் செம்மைப்படுத்தவும் வழி வகுக்கின்றது.

கோடிக்கணக்கான எண்ணத்துகள்கள் கொட்டிச் சிதறும் இடம் மானிட மனமே. தெளிந்த நீரோடையாக இருக்க வேண்டிய மனித மனத்தில் சமுதாயச் சூழல் நிமித்தம் தீய எண்ணங்கள் என்ற அசுத்தங்கள் கலக்கின்றன. அதை அசுத்தங்கள் என்று அடையாளம் கண்ட மானிட மனங்கள் 'பண்பாடு' என்ற சுத்திகரிப்புக் கருவி மூலம் நீக்குகின்றன; சில மனங்கள் நீக்க முயல்கின்றன. சில மனங்கள் நீக்க இயலாமல் தவிக்கின்றன.

கலாச்சாரத்தில் யாருக்கு அதிக முக்கியத்தவம் இருக்கிறது? தனி மனிதனுக்கா? அல்லது சமுதாயத்திற்கா? சமுதாயத்திற்காகத்தான் தனி மனிதன் இருக்கிறான். ஏனென்றால் தனிமனிதன் அழிந்த போதிலும் சமுதாயத்தில் என்றும் அழிவுறாமல் தொடர்ந்து இருந்து வருவது இந்தக் கலாச்சாரம் தான்.

**கலாச்சாரத்தின் பொருள் விளக்கம்**

கலாச்சாரம் = கலை+ ஆச்சாரம்

மனிதனுடைய வாழ்க்கையே 'கலைதான்', மனிதன் தன் கைத்திறனாலும், அறிவின் உயர்வாலும் இயற்கை வளத்தை வாழ்வின் வளமாக மாற்றியமைத்துதான் வாழ்க்கையே நடத்துகிறான். ஆகையினாலேயே அந்தக் கலையையே வாழ்க்கையாகக் கொண்ட மனிதனுக்கு ''ஆச்சாரம்'' அவசியம்.

எந்தச் செயல் செய்தாலும் தன்க்கோ, பிறருக்கோ, தற்காலத்திலோ, பிற்காலத்திலோ அறிவுக்கோ, உடல் உணர்ச்சிக்கோ துன்பம் எழாத அளவோடும், முறையோடும் ஆற்றிப் பழகி செய்யக் கூடிய செயல் நெறிதான் **ஆச்சாரம்**. ஆகவே துன்பம் வராது இருக்க வேண்டுமென்றால் இயற்கையைத் தெரிந்து கொள்ள வேண்டும். அப்படி தெரிந்து கொண்டால் அப்பொழுதான் அளவு முறை, இரண்டும் தெரிந்து செயலாற்றி வாழ முடியும்.

## கலாச்சார சீரழிவிற்கான அடிப்படைக் காரணிகள்

'தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்பதற்கேற்ப மனிதன் தானே தவறான செயல்களைச் செய்துப் பெரும் துன்பத்திற்கு ஆளாகிறான். மிக உயர்ந்த எக்காலத்திற்கும் ஏற்றமளிக்கும் நம்முடைய பண்டைய பாரம்பரியமிக்க பண்பாட்டுக் கல்வியை கல்வி முறையிலிருந்து நீக்கி விட்டதுடன், சுதந்திரம் பெற்றப் பின்னரும் அக்கல்வியினை நாம் மீண்டும் கல்விமுறையில் கொண்டு வர முயற்சி செய்யவில்லை. இவ்வாறானச் சீர்திருத்தங்களை செயல்படுத்த வேண்டிய அரசுகளின் மெத்தனப் போக்கும் கலாச்சாரத்தின் சீரழிவிற்கான காரணிகளாகின்றன.

1. மது அருந்துதல், புகைபிடித்தல்
2. பால் உணர்வை தூண்டிவிடும் புகைப்படங்கள்
3. பத்திரிக்கைகளில் உள்ள தவறான விஷயத்தை படிப்பது.
4. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் ஒளிபரப்பாகும் சமுதாயத்தில் தனிமனிதனின் உள்ளத்தில் தீயபாதைகளில் செல்லத் தூண்டும் தொடர்நிகழ்ச்சிகள் மற்றும் கதைகள்
5. சமுதாய வளர்ச்சியில் பங்கு கொள்ளும் பெரியோர்களை அறவே வெறுத்து ஒதுக்குவது
6. மேனாட்டு கலாச்சார மோகத்தில் கவரப்பட்டு, வாழ்க்கை நெறிகள் மற்றும் பண்பாடுகளைப் பின்பற்றாது வாழ்வது.

## 'பண்பாடு' விளக்கம்

செம்மைப்படுத்தப்பட்ட மானிட உணர்வே 'பண்பாடு' என்ற சொல்லின் பொருள் ஆகும்.

'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்' (133)

என்ற கலித் தொகைப்பாடலுக்கு நச்சினார்க்கினியர் உரை வகுக்கும் போது **'எல்லோருடைய இயல்புகளையும் அறிந்து, ஒத்து, நன்னெறியில் ஒழுகுதலே பண்பு' என்பார்.**

பேராசிரியர் வையாபுரிபிள்ளை, ' மக்களது அறிவு நலம், கருத்து நலம், குண நலம் கொள்கை நலம். ஒழுக்க நலம், வாழ்க்கை நலம் முதலியன மேன்மேலும் திருந்திவரும் நிலையே பண்பாடு' என்பர்.

இவ்வாறு அறிஞர்கள் பலர் பல விளக்கங்களைப் பண்பாட்டிற்குக் கூறினாலும் அடிப்படைக் கருத்து குணநலம் என்ற ஒன்றுதான்.

## நாகரிகம் – பண்பாடு

நாகரிகம் (Civilization) என்பது மானிடத்தின் புறத் தோற்றத்தையும், பண்பாடு (Culture) என்பது மானிடத்தின் அகத் தோற்றத்தையும் விளக்கிக்கூறும் சொற்களாகும்.

மானிடத்தின் புறத்தோற்றமாக உணவு, உடை, உறையுள், தொழில், கருவி, கலை சமுதாய அமைப்புப் போன்றனவும், அகத் தோற்றமாக காதல், வீரம், கொடை, அன்பு, அருள், அறம், ஒழுக்கம், கடமை முதலியனவும் அமைகின்றன.

நாகரிகம் என்பது 'வெளித்தோற்றத்தையும், மரபு வழி இயக்கத்தையும் உணர்த்துவது ஆகும். (Civilization is External and Mechanical While Culture is internal and organic).

## அக்கால பண்பாடு

ஒழுக்கமுள்ளவர்களே உயர்ந்தவர்கள் என்பது மானுட சமூகத்தின் உயிர்க்கொள்கை. ஒருவனுக்கு ஒருத்தி. ஒருத்திக்கு ஒருவன் என்பதற்கு இலக்கியமாக '' இந்த பிறவிக்கு இருமாதரைச் சிந்தையாலும் தொடேன்''(கம்பராமா. சுந்தர - சூளாமணி-43) என்று இராமன் சீதைக்குத் தந்த செவ்வரம் மானுடசமூகத்தை உயர்த்தும் உயர்வரம்.

கணவனும் மனைவியும் ஒருங்கிணைந்து செல்வது தான் குடும்ப வாழ்க்கையின் உன்னதம் . இதைக் குறுந்தொகை.

'' இம்மை மாறி வறுமை யாயினும்
நீயாகியர் என் கணவனை
யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே'' ( நெய் - 39)

இப்பிறப்பில் மட்டுமல்ல மறுபிறப்பிலும் தான் மணந்த தலைவனே தனக்குக் கணவனாக அமைய வேண்டும் எனத் தலைவி கூற்றாகக் கூறுகிறது.

பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன் - குறள் (996)

பண்புடையவர்கள் உள்ளதால், உலகம் இயங்குகின்றது அவர்கள் இல்லை என்றால், உலகம் மண்ணுக்குள் மறைந்துவிடும்.

## மண்ணின் வழி வெளிப்படும் பண்பாடு

மண்தரத்தால் ஐந்தாக (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை) உள்ளது போல் மானிடர்களும் அவர்களின் தன்மையால் பலவகையாக உள்ளனர். எதனையும் பொறுமையுடன் தாங்கும் நிலம் போல மானிடர்களும் பொறுமையின் சின்னமாக விளங்க வேண்டும். நிலத்தோடு நீர் சேர்ந்து உலகைச் செழிக்கச் செய்வது போல், கணவனும் மனைவியும் இணைந்து இல்லற வாழ்வைச் செழிக்க செய்ய வேண்டும்.

'' நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே'' (புறம்)

என்ற புறநானூற்றுப் பாடல் மானிடர்கள் நல்லவர்களாக இருக்கும் இடம் நல்ல இடமாகப் பெயர் பெறுகிறது என விளக்கம் தருகின்றது.

## தற்காலப் பண்பாடு

ஆண்களிடமும் பெண்களிடமும் பண்பாட்டுக் குறைபாடுகள் இல்லாமல் இல்லை. பொதுவாக பண்பாட்டுக் குறைவுடைய சிந்தனையோட்டத்தோடு இன்றைய சமூகம் உலவிக் கொண்டுள்ளது.

இன்று பொதுவாக, மேல்நாட்டு நாகரிகம், பண்பாடு நம்மவர்களையும் ஆட்டிப்படைக்கின்றன. போலி நாகரிகங்கள் பெருகி வருகின்றன.

எனவே இதையறிந்த நல்லுள்ளங்கள் சில, கவலையில் ஆழ்ந்துள்ளன. மன உறுதியல்லாத நிலையில் மனிதன் கிடைக்காத பொருளைத் தேடி தேடாத பொருளைப் பெற்று வாழ்கிறான்.

'' வாழ்க்கையின் முதற்பகுதியில் வெற்றி பெறுவதற்குத் தேவையானவை சுறுசுறுப்பும் ஊக்கமும்; பிற்பகுதியில் வெற்றி பெறத் தேவையானவை அடக்கமும், பொறுமையும்' என்பார் அரிஸ்டாட்டில்.

எனவே சுறுசுறுப்பும், ஊக்கமும் உள்ள காலத்தில் பாலுணர்ச்சியைத் தூண்டக்கூடிய திரைப்படங்களை, நூல்களைப் பார்ப்பதிலும், படிப்பதிலும் இளைய உள்ளங்கள் ஈடுபட்டால் வெற்றி என்பது கானல் நீரே.

## பண்பாடு வெற்றி பெற வழி

'' உங்களைக் காட்டிலும் கெட்டிக்காரர்கள் உங்களைச் சுற்றி இருக்க வேண்டும் அல்லது நீங்கள் அவர்களைச் சுற்றி இருக்க வேண்டும். அது தான் வெற்றிக்கு வழி'' என்பார் பாங்க்கில்.

எனவே ஒவ்வொரு மானிடனும் கடமைகளை, பொறுப்புகளை முறைப்படி மன ஈடுபாட்டோடு செம்மையாகச் செய்து முடிப்பானாயின் பண்பாடு நிலைத்து வாழும்.

மானிட சமுதாயத்தில் பண்பாடு வளர அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டும். நான், எனது என்ற நிலை மாறி நாம், எமது என்ற நிலை உருவானால் சமநிலை மனப்பான்மை வளரும், வாழும்.

''உண்மையான உழைப்பின் துணைகொண்டு நியாயமாக கிடைப்பதை நன்றாக அனுபவிக்கும் மனோபாவத்தை வளர்த்துக் கொண்டவனுடைய வாழ்க்கையே சுவையுள்ளதாக இருக்கும்'' என்பார் ஆதிசங்கராச்சாரியார்.

''மேகங்கள் எவ்வளவு தான் பெரியனவாக இருந்த போதிலும் அதனால் சூரியனை மறைத்து விட முடியாது. அதே போல் கயவர்கள் எவ்வளவு தான் முயன்றாலும் சிறந்த திறமைசாலிகளின் முன்னேற்றத்தை தவிர்த்துவிட முடியாது.'' என்பார் தாகூர்.

'Work more talk less' என்று மானிடம் எப்பொழுது எண்ணுகிறதோ அன்றே முன்னேற்றம் ஏற்படும்.

## கலாச்சார சீரழிவிற்கான தீர்வுகள்

மனிதன் தன் வாழ்வில் கைக் கொள்ள வேண்டிய பண்பாட்டுக் கூறுகளாவன: பெருமையும், ஆற்றலையும் செயல்பாட்டில் கொண்டு விளங்குதல். பழி பாவங்களுக்கு அஞ்சும் ஞான உணர்வு கொள்ளுதல், தீய வழியில் பெரும் பொருளீட்டும் எண்ணம் கொள்ளாமலிருத்தல், பிறர் வாழத் தாம் வாழ வேண்டும் என்று எண்ணுதல்.

வலியோர் எளியோரை அடக்கியாள முற்படாமல், உற்ற துணையாக இருத்தல். செம்மையான வாழ்வுக்குப் போதுமான பொருளை எடுத்துக் கொண்டு மிகுதியைத் திறம் வாய்ந்த உழைப்பாளிக்கு ஊக்கத் தொகையாகக் கொடுத்து சமுதாய வளர்ச்சிக்கு வழிகோலலாம். இரு பாலரும் கற்பை உயிரினும் மேலாகக் கருதி வாழ்தல், வரவுக் கேற்ற செலவினையே செய்து செம்மை வாழ்வு வாழ்தல், ஆட்சியாளர்கள் காட்சிக்கு எளியவர்களாகவும்,நேர்மை திறம் உடையவர்களாகவும் விளங்குதல்.

நேரிய பண்பாளருக்குத் துன்பம்வரின் உயிரையும் தந்து காத்தல், செய்யும் தொழிலை தெய்வமாக மதித்தல், நீதிநெறியை வழுவாமல் காத்தல், உண்மை, நேர்மை, வழியிலிருந்து தவறாமை, பழியில்லாத புகழை மனமுவந்து ஏற்றுக் கொள்ளல்.

உலக மக்கள் யாவரும் என் உடன்பிறப்புகளே என்ற பொது மன நிலையுடனிருத்தல். வருமுன் காக்கும் முக்கால ஆராய்ச்சி அறிவுடனிருத்தல்.

மாசிலன்பு, ஐம்புலனடக்கம், விருப்பு, வெறுப்பற்ற ஆராய்ச்சி மனம், பிறர் மனை நோக்கா பேராண்மை, பிறர்மனம் நோகாத அறச்செயல், நல்நாணம், வாய்மை, நேர்மை, தூய்மை, பணிவு போன்ற பண்புகளை மனிதன் வேலியாகக் கொண்டு வாழ்தல் கலாச்சார சீரழிவிற்கான தீர்வாகும்.

தன் அறிவிற்கும், அனுபவத்திற்கும், தகுதிக்கும், பொருளாதார நிலைக்கும் அப்பாற்பட்ட செயல்களை ஒரு பொழுதும் செய்யாமல் இருத்தல் வேண்டும். தன்னை விட அறிவிலும், அனுபவத்திலும், தகுதியிலும் சிறந்தோரிடையே எதையும் தேவை இல்லாமல் முந்திச் சென்று சொல்லாத நாவடக்கம் கொள்ளுதல் வேண்டும்.

## நிறைவுரை

மானிடப் பிறவிகள் தம் குணங்களை ஆராய்ந்து பிறகு குற்றங்களையும் ஆராய்ந்து, மிகுதியானவை எவையென ஆராய்ந்து மிகுந்திருப்பவற்றால், குணமுள்ள பிறவியா, குற்றமுள்ள பிறவியா என அடையாளம் கண்டு கொள்ளலாம்.

எனவே மானிட வாழ்வியலில் பண்பாட்டியல் கூறுகள் இலைமறை காயாக உள்ளன. இதனை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்திப் பயன்பெறுவோமாக.

# 6. ஒருமித்த கலாச்சார விளைவும் தீர்வும்

முனைவர். **அமுதன்**
மதிப்பியல் பேராசிரியர்
முதுகலை தமிழ் துறை
என். ஜி.எம்.கல்லூரி,பொள்ளாச்சி.

ஒரு நாட்டின் உயர்வு. அதன் கல்வி, கலை, கலாச்சாரத்தை உள்ளடக்கியது பல்வேறு மொழிகளும், இனங்களும் இணைந்த நம் நாட்டுக் கலாச்சாரம், ஒருங்கிணைகிறபோது, அதன் இனிமை தனித் தன்மையுடையது

''இந்திய தேசமே, ஒரு பெரிய சர்வகலாசாலை, ஒரு பெரிய நூலகம்'' என்றார் செருமானியப் பேரறிஞர் மாக்ஸ் முல்லர். இங்கு உதித்த ஞானிகள் எத்தனை பேர்? யாருக்கு எண்ணி முடிக்கத் தெரியும்? இங்கு பிறந்த அத்தனை ஞானிகளும் ஒரு சர்வ கலா சாலை அதனால் ஒரு கலாச்சாரப் பண்பாட்டுச் சர்வகலாசாலையாயிற்று இந்த இந்திய தேசம்.

பரந்து பட்ட இந்திய தேசத்தின் வேற்றுமைகளுக்குள்ளும், ஒவ்வொரு நிலையிலும், ஒற்றுமை ஊடாடுகின்றதை ஒவ்வொருவரும் ஆழ்ந்து நோக்கின் அறியக் கூடும்.

இப்படி இத்தேசத்தின் அடிநாத இணைப்பு, கவியரசர் தாகூரை இனிக்க வைத்ததனால்தான் பஞ்சாப சிந்து குஜராட்ட மராட்டாவில் ஓடும் நதிகள் எல்லாம் இந்நாட்டின் கலாச்சாரத்தை இணைய வைக்கும் தங்கச் சரடுகளாகக் கண்டு '' ஜனகணமன அதிநாயக ஜயஹே'' எனும் ஒருங்கிணைந்த கலாச்சார உயர்வு காட்டும் நம் ஒப்பற்ற தேசிய கீதத்தைத் தர முடிந்தது.

**ஒருங்கிணைந்த பண்பாடு**

நம் நாட்டிற்கு எங்கிருந்தாவது இன்னல் முன்வரும்போது, இந்து, முஸ்லீம், கிறித்தவர், சீக்கியர் என்ற வேற்றுமைகள் எல்லாம் இருக்குமிடம் தெரியாமல் மறைந்து விடுகிறது

இதற்குப் பெயர்தான் இந்தியக் கலாச்சாரம் ; ஒருங்கிணைந்த பண்பாடு

எந்த நாட்டின் மீதும் வலியப் படையெடுக்காதது, தொன்று தொட்டு வரும் நம் இந்தியப் பண்பாடு.

''ஒத்தாரும் தாழ்ந்தாரும் உயர்ந்தாரும் எல்லாம்
ஒருமையுளர் ஆகி உலகியல் நடத்த வேண்டும்.'' (வள்ளலார்)

என்பது இந்தியப் பெரு நாடு உலகறிய வெளியிட்ட சமுதாய பண்பாட்டின் அறைகூவல் அன்றி வேறென்ன?

''எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க'', ''அற்றார் அழிபசி தீர்க்க'' ''கருணையொன்றே தெய்வம்'' என்ற இந்நாட்டிற் பிறந்த தெய்வீக வாசகங்கள் மனித மனத்தில் தேங்கிக்கிடக்கும் அருள் ஊற்றை, ஆன்ம நேயத்தை வெளிக் கொணரவைத்த வீறார்ந்த வாசகங்கள்.

கல்விப் பரவ பரவ வெளி உலக அனுபவமும், உள் உலக ஞானமும், இத்தேசத்தில் காணும் இடமெல்லாம் பரந்து விரிவதைக் கண்கூடாகக் கண்டு வருகிறோம். ஒருங்கிணைந்த இந்தியப் பண்பாடு, கலாச்சாரம், ஒரு தேசமக்கள் நலத்தை மட்டும் பார்க்காத அளவுக்கு விரிந்தது, உயர்ந்தது, உலகம் எல்லோருக்கும், எல்லா உயிர்களுக்கும் உரியது.

''சர்வ ஜன சுகினோ பவந்து'' ( உலக உயிர்கள் மாந்தர்கள் எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும்) என்று இமய உச்சியில் நின்று உபநிடத முனிவர்கள் முழங்கிய தேசம் இது.

அனைவரும் ஒரு குடும்பம், ஓர் உலகம், ஒரு கடவுள் என்பது ஒருங்கிணைந்த கலாச்சாரத்தின் பிழியப்பட்ட சாறு.

''ஓர் இந்தியன் தனியாக எங்கும் செல்வதில்லை. அவனோடு 5000 ஆண்டுக் கலாச்சாரமும் பண்பாடும் உடன் செல்கின்றன'' என்று வீரமுரசறைந்து இக்கோட்பாட்டை உலகுக்குப் பிரகடனப்படுத்தினார். சுவாமி விவேகானந்தா

**ஒருங்கிணைந்த கலாச்சாரம்**

இந்த நாட்டில் ஒருங்கிணைந்த கலாச்சாரம் எனும் உன்னத விதைகளை ஊன்றி வளர்த்து, செழிக்கச் செய்து விட்டுப் போகவே, விவேகாநந்தப் பெருமானின் திரு அவதாரம் இங்கு நிகழ்ந்தது.

.அரசியல் இந்த நாட்டை 56 தேசமாகக் கூறுபோட்டது. ஆன்மீகந்தான் இந்த நாட்டை ஒன்றாக்க விதைப் போட்டது.

''இமயசேது பரியந்தம்'' ''இமயம் முதல் குமரி வரை'' என்று வழங்கும் தொடர்கள். நம் ஒருங்கிணைந்த கலாச்சாரத்தை உலகுக்குக் காட்டும் பதாகைகளாய் காலத்தை வென்று நிற்கின்றன.

எதிலும் முன்னோடிக் கனவுகளையே, அவற்றிலும் பலிக்கும் கனவுகளையே கண்டவர் நம் பாரதியார்; இந்த ஒருங்கிணைந்த கலாச்சார ஒற்றுமையால் வரும் விளைவுகள் பற்றி அன்றே அழகிய கனவாகக் கண்டு பாடியுள்ளார்.

‘‘வெள்ளிப்பனிமலையின் மீதுலாவுவோம் - அடி
மேலைக் கடல் முழுதும் கப்பல் விடுவோம்
பள்ளித்தலம் அனைத்தும் கோவில் செய்குவோம் - எங்கள்
பாரத தேசமென்று தோள் கொட்டுவோம்!’’
‘‘சிங்களத் தீவினுக் கோர் பாலம் அமைப்போம்
சேதுவை மேடுறுத்தி வீதிசமைப்போம்
வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம் .’’

( நதி நீர் இணைப்புக் கனவு இது!
அவர்கனவுகள் பலிக்கும் கனாக்கள்!)

**இதிகாசங்கள் உணர்த்தும் கலாச்சாரம்**

நம் நாட்டில் அன்றிருந்த அக்காலக் கல்வி முறைகள், அவை போதித்த பண்பாடுகள் காலவெள்ளம் அடித்துக் கொண்டு போய்விடதாவாறு, அவை காலூன்றி நிற்குமாறு நம் முன்னோர் செய்த முயற்சிகள், பழைய வரலாறுகள் யாவும் பல இடங்களில் சிதறிக் கிடந்தன.

தங்கள் சித்தத்தைக் கவர்ந்த நெடு நாளைய கல்வி, கலாச்சார செல்வங்களையெல்லாம் தெளிவாக மக்களுக்கு உணர்த்தாவிட்டால், அவை கவனிப்பாரின்றி அழிந்து விடுமே என்று அப்பெரியோர்கள் கவலை கொண்டனர். அந்தக் காரணத்தினாலேதான் இதிகாசங்கள் தோன்றின.

இப்படித்தான், நாடு முழுவதும் சர்வகலாசாலைகளாக மாறும்படி நம் முன்னோர்கள் மகாபாரதத்திலும் இராமாயணத்திலும் பல அரிய கருத்துக்களைத் தொகுத்து வைத்தார்கள். அன்று மக்கள் பண்பு வளர்ப்பதற்கே படிப்பு, தொழில் அவரவர் விருப்பப்படி அமையும். இதிகாசங்கள் நம் பண்புகளை வளர்த்த பண்ணைகள்!

அந்தப் பண்பாடு உலகம் முழுவதற்குப் பயன்பட்டால்தான், தாய்லாந்து, ஜாவா, இந்தோனேஷியா முதலிய பல நாடுகளில் இராமாயண, பாரதக் கதைகள் இன்றும் செல்வாக்குப் பெற்று விளங்குவதைக் காண்கிறோம்.

நம் கவியரசர் தாகூர், தம் உலகச்சுற்றுப் பயணத்தின் போது இந்தோனேஷியாவில், இஸ்லாமியப் பெரியார் ஒருவர் இராமாயணம் படித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து வியந்து நின்றார்.

கவியரசரின் வியப்பைக் கண்ணுற்ற இஸ்லாமியப் பெரியார், ‘‘ இந்த இராமயணமும், மகாபாரதமும் இந்துக்களுக்கு மட்டுமே உரிய நூல்கள் அல்ல; இந்துக்கள் தந்தவை; ஆனால் உலகத்துக்கே உரியவை! அவற்றின் பண்பாடுகள்! உலகம் முழுவதும், பின்பற்றுவதற்கு உரியவை’’ என்றார் அப்பெரியார்.

இன்று நம் நாட்டில் வாழும் அத்தனை கிறித்துவ மக்களும், இஸ்லாமிய மக்களும் மதத்தால் மட்டுமே அந்தந்த மதங்களுக்கு உரியவர்கள் ஆவர். பிறப்பால் இந்தப் பாரத மண்ணுக்கு உரியவர்கள்.

ஆகவே, இராமாயணம், மகாபாரதம், வேதம், உபநிடதம், திருக்குறள், கம்பர் காவியம் முதலிய அத்தனையும் இந்த மண்ணுக்குரிய சொத்துக்களும் அவர்களுக்கும் உரியவை. ஆதலால் அவர்களும் நம் பண்பாட்டுச் சொத்துக்களுக்கு முழு உரிமையுடையவர்களே.

''ஒன்றே குலம். ஒருவனே தேவன்'' என்பது நம் பண்பாட்டின் உச்சநிலை. இதனை யார் மறுப்பவர்கள்?

''சூரியன் வருவது யாராலே?
சந்திரன் திரிவது எவராலே?
காரிருள் வானின் மின்மினிப்போல்
கண்ணிற் படுவன அவை என்ன?
பேரிடி மின்னல் எதனாலே?
பெருமழை பெய்வதும் எவராலே
யாரிதற்கெல்லாம் அதிகாரி?
அதை நாம் எண்ணிட வேண்டாவோ?

அந்தப் பொருளை நாம் நினைத்தே
அனைவரும் அன்பாய்க் குலவிடுவோம்
எந்தப்படியால் எவர் அதனை
எப்படித் தொழுதால் நமக்கென்ன?
நிந்தை பிறரைப் பேசாமல்
நினைவிலும் கெடுதல் செய்யாமல்
வந்திப்போம் அதை வணங்கிடுவோம்
வாழ்வோம் சுகமாய் வாழ்ந்திடுவோம் !

இந்த வரிகளில் ஒருங்கிணைந்த கலாச்சாரத்தைப் பிழிந்து வைத்திருக்கிற சாற்றைத் தந்திருக்கிறார் நம் காந்தியுகக் கவிஞர் நாமக்கல் இராமலிங்கனார்.

**ஒரே மதம் – அன்பு மதம்**

இன்றைய உலகில் மனிதமன ஒருங்கிணைப்புக்குப் பெருந்தடையாய் இருப்பது மத வேறுபாடே மதம், மனம் இணைவதற்கு ஏற்ற கருவி. அதனை மனம் பிரிவதற்கு ஏற்ற கருவியாக்கி விட்டனர் மனிதர்கள் என்று நல்லோர்கள் உள்ளம் கண்ணீர் விட்டு கூறி வருகிறது.

ஒரு புறாவும் குஞ்சுவும் இந்து மக்களின் கோயில் கோபுரத்தில் உட்கார்ந்து வேடிக்கை பார்த்தன.

மறுநாள், கிறித்துவ தேவாலய உச்சியில் அமர்ந்திருந்து வேடிக்கை பார்த்தன.

அதற்கடுத்த நாள், இஸ்லாமிய மக்களின் மசூதி உச்சியிலிருந்து வேடிக்கை பார்த்தன.

தாய்ப்புறாவைக் குஞ்சுப் புறா கேட்டது.

''இம்மக்கள் நம்மைப் போல, எல்லா கோயில்களுக்குள்ளும் கால் பதிப்பதில்லையே ஏன்? போன கோயில்களுக்குள்ளே போகிறார்கள்'' '' மகனே அவர்கள் மதம் பிடித்த மக்கள். ஒருவர் கோவிலுக்குள் ஒருவர் நுழைய மாட்டார்கள்!''

''அதனால் தான் அவர்கள் கீழே இருக்கிறார்கள். நாம் மேலலே இருக்கிறோம்!'' என்றது தாய்ப்புறா.

ஒரு புதுக் கவிதை கேட்கிறது.

புத்தர் வந்தார் ; பௌத்தர்கள் தோன்றினர்

மகாவீரர் வந்தார் ; சமணர் தோன்றினர்

இயேசு வந்தார் ; கிறித்துவர் தோன்றினர்

நபிகள் நாயகம் வந்தார்; இஸ்லாமியர் தோன்றினர்

குரு கோவிந்த சிங் வந்தார்; சீக்கியர்கள் தோன்றினர்

**யார் வந்தால் மனிதர்கள் தோன்றுவார்கள் ?**

இந்தக் கவிதை எத்தனை பொருளைச் சுமந்து கொண்டு நிற்கிறது? இது கேட்கும் வினா எத்தனை நெஞ்சத்தை உலுக்கி நிற்கிறது!

நம் பண்டிகைகளுக்கு உறவினர்களுக்கு அழைப்பு கொடுப்பது போல், நம் சமயச் சகோதரர்களுக்கும் அழைப்பு நல்கி இல்லத்தில் விருந்தளித்து அளாவும் நன்னாள் பரவலாக வேண்டும். இதற்குப் பெயர்தான் ஒருங்கிணைந்த கலாச்சாரப் பண்பாடு.

மத நேயம் குறைந்து, மன நேயம் மிகும்போது மனித நேயம் மலர்கிறது. அப்போது தான் உலகப் பண்பாடு ஒருங்கிணைந்து மிளிர்கிறது. '' யாதும் ஊரே, யாவரும் கேளிர்'' என்று தமிழன் கண்ட உன்னதப் பண்பாடு அப்போது தலை நிமிர்கிறது.

உண்மையிலேயே, மனித மனம் கூடி வாழவே விரும்புகிறது.

பாரிஸ் நகரப் பூங்கா ஒன்றில் பலர் அமர்ந்திருந்தனர் - பொழுது போக்காக! அதிலொருவர் அருகிலிருந்தவரை '' நீங்கள்?'' ( நீங்கள் யார் என்ற பொருளில்) என்றார் '' நான் பக்கத்துத் தெருவாசி'' ''ஓ! நாம் பக்கத்துப் பக்கத்துப் பிரஞ்சு நாட்டவர்!'' என்று கைகுலுக்கிக் கொண்டனர்.

அருகிலிருந்த இன்னொருவரை '' நீங்கள் ?'' என்றார். '' நான் ஸ்விஸ் நாட்டுக்காரன்!'' என்றார் ''ஓ! நாம் இருவரும் அண்டை நாட்டார்!'' கை குலுக்கிக் கொண்டனர்.

‘‘ நீங்கள்?’’ மந்றொருவரை நோக்கி வினவ.

‘‘ நான் லண்டன் வாசி!’’

‘‘ ஓ! நாம் இருவரும் வெள்ளை இனத்தவர்! என்று கைகுலுக்கிக் கொண்டனர்’’

இன்னொருவர் இந்தியர்

‘‘ நீங்கள்?’’என்றார் அவர்.

‘‘ மனிதர்!’’ என்றார் இவர்.

‘‘ஓ! நாம் இருவரும் மிகப் பெரிய ஆதி இனமாகிய மனித இனத்தைச் சார்ந்தவர்கள்!’’ என்று நெடுநேரங் கை குலுக்கினார் அவர் ‘‘ யாவரும் கேளிர்!’’ என்பதற்குச் சான்றாகி நிற்கிற என்ன அற்புதமான காட்சி இது! சாட்சி இது!!

ஒருங்கிணைந்த கலாச்சாரத்தின் கோட்பாடே நம் பாரதப் பெருநாட்டில்தான் முதலில் முளைத்தது; படர்ந்தது!

ஒரே மதம் - அன்பு மதம்
ஒரே இனம் - மனித இனம்
ஒரே மொழி - இதய மொழி
ஒரே கடவுள் - சர்வ வியாபி

இந்தக் கோட்பாடே உலகம் முழுவதற்கும் ஒருங்கிணைந்த கலாச்சார கோட்பாடாக வேண்டும். இதனை ஐ. நா. சபையின் நெற்றியில் எழுதி வைத்தாக வேண்டும்.

எல்லோரும் ஓர் குலம்
எல்லோரும் ஓர் இனம்
எல்லோரும் இந்திய மக்கள்
எல்லோரும் ஓர் நிறை
எல்லோரும் ஓர் விலை
எல்லோரும் இந்நாட்டு மன்னர் - ஆம்
எல்லோரும் இந்நாட்டு மன்னர்!

இந்த வரிகளையே இந்த தேசத்தின் ஒருங்கிணைந்த கலாச்சாரத்தின் தேசியக் கோட்பாட்டுவரிகளாக எல்லா மதங்களும் ஒருங்கிணைந்து உறுதிப் படுத்த வேண்டும்.

### விவேகானந்தரின் கோட்பாடுகள்

வாழ்நாள் முழுவதும் இளைஞர்களுக்காக எழுச்சிக் குரல் கொடுத்தவர் வீரத்துறவி விவேகானந்தர். அவர் பிறந்த தினமான ஜனவரி மாதம் 12ம் தேதி தேசிய இளைஞர் தினமாக நாடெங்கும் கொண்டாடப்படுகிறது. உலகம் முழுவதிலும், நம் புனித பூமியாம் பாரதத்தின் ஆன்மீகப் பெருமையைப் பரப்பிய வீர இளந்துறவி சுவாமி விவேகானந்தர் நம் பாரதத்திற்குக் கிடைத்த ஒப்பற்றஞானப் பொக்கிஷம். இன்று வாழ்வின் எந்த நிலையில் இருப்பவராயினும்

அவர்களுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கமாக, நம்பிக்கை நட்சத்திரமாக திகழ்ந்தவர்; இன்றும் திகழ்ந்து வருபவர். அவரது கோட்பாடுகளில் சிலவற்றைக் காண்போம்;

**வலிமையே தேவை:**

- வலிமைதான் வாழ்வு; பலவீனமே மரணம். வலிமையே மகிழ்ச்சிகரமான வாழ்க்கை. நிரந்தரமான வாழ்வு அமரத்துவம் ஆகும். பலவீனம் இடையறாத சித்திரவதையாகவும் துன்பமாகவும் அமைகிறது. பலவீனம் மரணமேதான்.

- நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய். நீ உன்னை பலவீனன் என்று நினைத்தால் பலவீனனாகவே ஆகிவிடுவாய். நீ உன்னை வலிமையுடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவனாகவே ஆகிவிடுவாய்.

- பிறருடைய பாராட்டுக்கும் பழிக்கும் செவி சாய்த்தால் மகத்தான செயல் எதையும் செய்ய முடியாது.

- எல்லாவற்றிற்கும் மற்றவர்களை எதிர்பார்ப்பது நல்லதல்ல. உடலை வலிமையாக வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தை மக்கள் அறிந்து கொள்ளும்படி செய்தால் பிறகு அவர்களே அதைச் செய்து கொள்வார்கள். இந்த வகையான கல்வி தான் இப்போது தேவை என்பதை அவர்கள் உணரும்படி செய்ய வேண்டும்.

**மதமும் ஒழுக்கமும்:**

- பாமரனைப் பண்புள்ளவனாகவும் பண்புள்ளவனைத் தெய்வமாகவும் உயர்த்தும் கருத்தே மதம் எனப்படும்.

- சுயநலமே ஒழுக்கக்கேடு; சுயநலமின்மையே நல்லொழுக்கம். இதுதான் நாம் ஒழுக்கத்திற்குக் கொடுக்கக்கூடிய ஒரே இலக்கணமாகும்.

- உண்மைக்காக எதையும் துறக்கலாம். ஆனால் எதன் பொருட்டும் உண்மையைத் துறக்கக்கூடாது.

- நம்மை முன்னேற்றத்திற்கு அழைத்துச் செல்வதே நல்லொழுக்கம். கீழ்நிலைக்கு இழுத்துச் செல்வதே தீய ஒழுக்கம். உன்னிடமுள்ள தெய்வீகத் தன்மையை வளர்க்கக் கூடியது தான் நல்லொழுக்கமாகும். உன்னிடமுள்ள மிருக இயல்பை அதிகரிக்கச் செய்வதே தீய ஒழுக்கம். மிருக இயல்பை உன்னிடமிருந்து அழித்துவிட்டு மனிதத்தன்மை கொண்டவனாக மாற வேண்டும். அதாவது அன்புள்ளமும் தர்ம சிந்தனையும் உடையவனாக இருக்க வேண்டும்.

- நீ சிறந்த மகான் ஒருவரைப் போன்ற மனநிலையைக் கொள். அவராகவே நீ ஆகிவிடுவாய். புத்தரைப் போன்ற மனநிலையைக் கொள். புத்தர் பெருமானாகவே நீ ஆகிவிடுவாய். உயர்ந்த மனநிலைதான் வாழ்க்கையாக அமைகிறது; வலிமையைத் தருகிறது;

உயிர்நாடியாக விளங்குகிறது. அத்தகைய மனநிலை இல்லாமற் போனால், அறிவாற்றல் எவ்வளவுதான் வேலை செய்தாலும் கடவுளை அடையமுடியாது.

- மனிதனுக்கு மன அமைதியைத் தருவதுதான் மதத்தின் அடிப்படை இலட்சியமாகும்.

- ஒழுக்கம் உள்ளவனாக இரு. தைரியம் உள்ளவனாக இரு. இதயப்பூர்வமான, உறுதி பிறழாத ஒழுக்கத்தில் நிலைபெற்றிரு. கோழைதான் பாவம் செய்கிறான். தைரியசாலி ஒரு போதும் செய்வதில்லை. மனதால் கூட அவன் பாவத்தை நினைப்பதில்லை.

**மனிதனும் மகான் ஆகலாம்:**

- பிறருக்காக செய்கின்ற சேவையால் நம்மைத் தூய்மைப்படுத்திக் கொள்ள முடியும்.

- உன்னைத் தியாகம் செய்வதனால் மட்டுமே பிறரின் இதயங்களை நீ வெல்ல முடியும்.

- எப்போதும் பொறாமையை விலக்குங்கள். இதுவரை நீங்கள் செய்யாத மகத்தான நல்ல செயல்களை எல்லாம் செய்து முடிப்பீர்கள்.

- நம்மை நாமே பெரிதாக எண்ணிக் கொண்டு அகந்தை கொள்வது கூடாது. சாதாரணமானவர்களாக நம்மை கருதும்போது தான் நம்மிடம் கருணையும், பணிவும், நல்ல சிந்தனையும் வெளிப்படத் தொடங்கும்.

- ஆன்மீகத்தின் உதவியால் தீயவர்கள் கூட மகானாக முடியும். வாழ்வில் தடைகளைப் போக்கினால் போதும். நம் இயல்பான குணமாகிய நிறை நிலையின் வாசல்கள் தானாகவே திறந்து விடும்.

- ஞானியாக விரும்புகிறவன் முதலில் விலக்க வேண்டியது பயம். நமது மோசமான எதிரிகளுள் ஒன்று பயம். அடுத்து, நீயே உணராமல் எதையும் நம்பாதே.

**எல்லோரிடமும் அன்பு கொள்க:**

- மனிதன் கைமாறு கிடைக்கும் இடத்தில் மட்டுமே அன்பு காட்டுகிறான். எல்லோரிடமும் அன்பு காட்டுவதே முறையானது.

- ஆன்மீக நெறியில் பக்குவப்பட்ட மனிதர்கள் கைமாறு கருதாமல் அன்பை வெளிப்படுத்துவர். அவர்கள் கடவுளின் அருளைப் பெறும் தகுதியைப் பெறுகிறார்கள்.

- பற்றற்ற மனப்பான்மையை நீங்கள் பெற்றுவிட்டால் உங்களை நன்மையோ, தீமையோ எதுவும் நெருங்க முடியாது. சுயநலமே நன்மை தீமை என்ற வேறுபாட்டை உருவாக்குகிறது.

- எல்லோரிடத்தும் சம அன்பு கொள்ளுதல் மிகமிகக்கடுமையான ஓர் ஒழுக்கமாகும். இந்த ஒழுக்கமின்றி முக்தி கிடையாது.

சுவாமி விவேகானந்தர் ஆன்மீக இமயம்! பண்பாட்டில் தொடமுடியாத சிகரம்! ஒழுக்கத்தின் உறைவிடம்! அன்பின் அமைவிடம்! அறநெறியின் உறைவிடம்! ' மனிதமே மதம்' என்பதை உலகிற்கு ஓங்கி ஒலித்த தீர்க்கதரிசனம்! அந்த உத்தமப் பெருமகனாரின் கோட்பாடுகளைப் பின்பற்றி நாமும் உயர்ந்து இச்சமுதாயத்தையும் உயர்த்துவோம்.

**தீர்வுகள்.**

ஒருங்கிணைந்த கலாச்சாரத்தின் விளைவும் தீர்வும் இவ்வாறு இருக்கும் என்கின்றனர் அறிஞர்கள்.

1. எல்லா மக்களிடமும் காட்டும் சம அன்பே இனிச் சமய அன்பாகக் கொள்ளப்படும்.
2. மனிதாபிமானம் இல்லாத மதாபிமானம், இனி மகா அவமானம் என்று உணரப்பட வேண்டும்.
3. கடவுள் உறையும் இடம் கோவில் மட்டுமே அல்ல; இவ்வுலகம் முழுவதும் அவர் உறைவிடம், கடவுளையும் மக்களையும் கோவிலிருந்து வெளியே கூட்டி வந்தாக வேண்டும் எனும் விவேகாநந்தப் பெருமானின் வீரவசனம் எல்லோர் நெஞ்சிலும் எழுதப்பட வேண்டும்.
4. ''உயிர்களிடத்து அன்பு வேண்டும் - தெய்வம் உண்மையென்று தான் அறிதல் வேண்டும்'' இந்த இரண்டு '' வேண்டும்'' களும் ஒருங்கிணைந்த கலாச்சாரத்திற்கு உயிர் போன்றவைகள் என உணர்ந்தாக வேண்டும்.

ஒருங்கிணைந்த கலாச்சாரத்தின் விளைவும் தீர்வுமாக ரிக்வேதம் அன்றே நமக்கு விதிமுறைகளை அள்ளித் தந்து சென்றிருக்கிறது.

Common be our Prayers ;
Common be our ends;
Common be our purpose ;
Common be our deliberation;
Common be our desires;
Common be our hearts ;
Common be our intention;
Common be the union amongst you;

வேத விதி இது. கடைபிடித்தால் கடைத்தேறலாம். கடைத்தேறுவோம். கடைத்தேற்றுவோம்.

# 7. பொருளாதாரப் பாகுபாடுகளும் தீர்வுகளும்

**பி.வீரசித்தி விநாயகன்**
உதவிப்பேராசிரியர்
மனித வள மாண்புத்துறை
என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி

மனிதன் இவ்வுலகில் வாழ உணவு, உடை, உறைவிடம், மிகவும் அவசியம். அவன் உழைப்பின் மூலம் பெறும் பணத்தைக் கொண்டுதான் அவற்றைப் பெற முடியும். மனிதன் தன் உழைப்பின் மூலம் பெறும் மாத வருமானத்தை தனி நபர் வருமானம் என்கிறோம். இதைப்போல் நாட்டில் உள்ள அனைவரின் வருமானத்தையும் கூட்டிச் சராசரி வருமானம் கணக்கிடப்படுவதை நாட்டின் வருமானம் என்கிறோம். இவற்றையெல்லாம் உள்ளடக்கியதே பொருளாதாரம் எனப்படும்.

உலகில் பல்வேறு விதமான பொருளாதாரக் கோட்பாடுகள் உள்ளன. அவை

1. முதலாளித்துவம் (Captalism)
2. சோஷியலிசம் (Socialism)
3. கம்யூனிசம் (Communism)

என்பனவாகும். இருப்பினும் மக்களுக்குப் பயன்படும் வகையில் பொருளாதாரக் கோட்பாடுகள் பின்பற்றப்படவில்லை.

இயற்கை வளங்களைக் கொண்டுதான் மனிதன் பொருட்களை உற்பத்தி செய்தல், தொழிற்சாலைகள் அமைத்தல், கட்டிடங்கள் கட்டுதல், வேளாண்மை செய்தல், மருத்துவத்துறை முன்னேற்றம் எனப் பொருளாதாரத்தில் வளர்ச்சியைக் காண முடிந்தது. ஆனால் உலகில் ஏற்படும் பூகம்பம், சுனாமி, போர்கள் போன்ற பேரழிவால் எத்தகைய உச்சத்தில் இருந்த பொருளாதார வளர்ச்சியும் அடியோடு சீரழியும் அபாயம் தொற்றிக் கொண்டு உள்ளது. இந்நிலைமையை சமாளிக்க உலக நாடுகள் சேர்ந்து எடுத்த முடிவு தான் என்ன? என்றால் ஒன்றுமில்லை.

இதுவரை நடந்த உலகப் போர்கள், தீவிரவாதம், உலக மயமாக்கல், தாராள மயமாக்கல் நாட்டின் இயற்கையின் சீற்றங்கள், நிர்வாக ஊழல்கள் ஆகியவற்றால் ஏற்பட்ட பொருளாதார சீரழிவுகள் கணக்கிலடங்கா.

## முதலாளித்துவ முறையால் ஏற்படும் தீமைகள்

இந்நிலை மாற ஒரு தீர்வாக வருபவர் தான் வேதாத்திரி மகரிஷி அவர்கள். ஆறு வகையான அடிப்படைக் காரணிகள் மூலம் இலாபமானது மீண்டும் மீண்டும் முதலாளிகளுக்கே கிடைக்கிறது என்ற உண்மையை ஒரு கவியின் மூலம் விளக்குகிறார் மகரிஷி.

''அடக்குமுறை ஆட்சிக்கோல், பணம், வியாபாரம்
ஆலைத் தொழிற்சாலை, நிலம், வீடு ஆறும்
முடக்கப்பட்ட சிலருக்கே உரிமை என்ற
முறை நீடித்திருக்கும் வரை உழைப்போர் செல்வம்
குடக்கூலி, வட்டி, தொழிற்சாலை லாபம்
குத்தகை, கமிஷன், வரி என்னும் பேரால்
மடக்கிக் கவரப் பெற்றே செலவாகிப்போம்
மக்களிடை வறுமை, நோய், துன்பம் நீங்கா''- ( ஞா. க. வேதாத்திரி மகரிஷி)

## உலக யுத்தத்தால் ஏற்பட்ட பொருளாதார சீரழிவு

முதல் உலகப் போர், இரண்டாம் உலகப் போரால் ஏற்பட்ட பொருளாதாரச் சீரழிவை உலகு அறியும் உலகில் பல நாடுகளில் இதன் தாக்கம் அதிகமாகக் காணப்பட்டாலும் இதன் பாதிப்பு ஜெர்மனி, ஜப்பான் போன்ற நாடுகள் மிக மோசமாகத் துன்புற்றன. ஜெர்மனியில் பண வீக்கம் அதிகமாகி ஒரு டீ குடிப்பதற்குத் தள்ளுவண்டி நிறையப் பணம் கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

மேலும் உணவு, உடை, இருப்பிடம் போன்றவற்றிற்கான வசதியை உயர் குடிமக்கள் மட்டுமே நல்ல முறையில் பயன்படுத்தினர். போரினால் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் ஏழைகள், குழந்தைகள், வயதானவர்கள், நோயாளிகள் போன்றவர்கள்தாம். அவர்கள் பிச்சை எடுக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டனர். அமெரிக்கா அரசு வீசிய அணுகுண்டு வீச்சால் ஜப்பான் நாட்டில் நாகஷாகி, கிரோஷிமா நகர் முழுவதும் முற்றிலும் மோசமானது. புல், பூண்டு கூட முளைக்கவில்லை. இன்னும் கூட அங்கே அணுக் கதிர்வீச்சால் ஊனமுற்றக் குழந்தைகள் பிறப்பதாகக் கூறப்படுகிறது.

ஒவ்வொரு நாடும் இராணுவத்திற்காகப் பெரும் பங்கு செலவு செய்கின்றனர். நாட்டைப் பொறுத்தவரை பொருளாதாரம் வளர்ச்சி அடைந்து கொண்டே போனாலும் நாட்டு மக்களின் நிலை மோசமடைந்து கொண்டே தான் வருகிறது.

## பொருளாதார ஏற்றத்தாழ்வு

வாழ்க்கையிலுள்ள எல்லாச் சிக்கல்களையும் நீக்கி மகிழ்ச்சியாகவும் வெற்றிகரமாகவும் வாழ்ந்து காட்டுவதற்காகவே இயற்கை மனிதர்களுக்கு ஆறாவது அறிவைக் கொடுத்து

உதவியுள்ளது. இருந்தாலும், பெரிய சிக்கலாகிய பொருளாதார ஏற்றத் தாழ்வு நிலை நம்மை எல்லாம் தடுமாற்றம் அடைய வைக்கிறது. இடம், வரலாற்றுக் காலம், மக்கள் பிறப்பு, நோய் பற்றிய புள்ளி விவரங்கள் விஞ்ஞான வளர்ச்சி, தொழில் நுணுக்கம், கல்வித் தரங்கள், அரசு நிர்வாக முறைகள், இவைகளுக்கு தகுந்தவாறு பொருளாதார நிலை அளவுகள் (Parameters) வேறுபடுகின்றன.

பொருளாதாரத்தை எது தீர்மானிக்கிறது? இயற்கையின் அருட்செயலுக்கும் மனித உணர்வுகளுக்கும் இடையேயுள்ள இசைவும், வேறுபாடுகளுமே பொருளாதாரத்தைத் தீர்மானிக்கின்றன. பணம் மட்டும் தான் பொருளாதாரத்தின் முக்கிய ஆக்கக்கூறு என்பதே ஒரு போலி நம்பிக்கை ஆகும். உண்மையில், உழைப்பின் ஊதியமே பணம் ஆகும். தேவைகளை உணர்வதும், அவற்றை அடைய முயல்வதும் மனித மனமே ஆகும். அறிவுக் குறைபாட்டினால்தான் உண்மையாகவே பொருளாதார ஏற்றத் தாழ்வு வேரூன்றி விட்டது.

எல்லா மனிதர்களுக்கும் ஒரே ஒரு நில உலகமே உள்ளது. நாம் எல்லோரும் அதில் பிறந்து வாழ்ந்து வருகிறோம். எனவே நாம் இந்த ஒரு புவியை மட்டுமே நம் எல்லோரின் தேவைக்காகவும் பங்கிட்டுத் தான் ஆக வேண்டும்.

‘‘குலமுதலாய்ப் பேதங்கள் கொள்ளும் நிலைமாற்றி
பலரும் கூடி உழைத்துப் பங்கிட்டு வாழ்ந்திடுவோம்
உலகில் பிறந்து விட்ட ஒவ்வோர் மனிதனுக்கும்
நில உலகம் சொந்தமென்ற நீதிநிலை நாட்டிடுவோம்’’.

இக்காலத்தில் தெரிந்தோ தெரியாமலோ ஒவ்வொரு மனிதனும் அனைத்துலகில் உள்ள பிற மக்களின் உழைப்பால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களையும் வாழ்க்கையின் வசதிகளையும் நாள்தோறும் அனுபோகித்து வருகின்றான். இதுபோல ஒவ்வொருவரின் உற்பத்தியும் உலகிலுள்ள பிறரின் நலனுக்காகப் பரவலாகப் போய்க் கொண்டிருக்கிறது.

ஒரு மனிதன் இயற்கைத் தத்துவத்தையும் அதற்கு ஒத்த முறையில் வாழும் விஞ்ஞானத்தையும் அறிந்து கொள்ளாதவரை வாழ்க்கையின் ஒவ்வொரு செயலும் சிக்கலாகவும் குழப்பமடைந்ததாகவும் தோன்றும். மனித அறியாமையின் இந்த இரண்டும் கெட்டான் நிலையே பொருளாதார ஏற்றத் தாழ்வாக உருவெடுத்துள்ளது.

## பொருளாதார சீரழிவிற்கான தீர்வுகள்

நமது பொருளாதாரக் கொள்கை மனிதனின் தேவைகளை நிறைவு செய்யுமாறு அமைத்தல் வேண்டும். நமது அரசியலமைப்பு மற்றும் அரசு நிறுவனங்கள் அந்தப் பொருளாதாரக் கொள்கையைச் செயல்படுத்தி மனிதன் வாழ்வின் நோக்கத்தை அடைய உதவ வேண்டும்.

இவற்றிற்கெல்லாம் தீர்வாக அமைவது தான் வேதாத்திரியக் கொள்கைகள்.

போரில்லா நல்லுலகம்

பொருள் துறையில் சமநீதி

நேர்மையான நீதிமுறை

நில உலகுக்கோர் ஆட்சி போன்றவைகளாகும்.

இவர் தரும் தீர்வுகள் நமது அறிவையும், சிந்தனையையும் தூண்டவல்லன.

## தீர்வு – 1 : ஊதிய அமைப்பு

தற்போதைய முதலாளித்துவ சமூகத்தில், ஊதிய அமைப்பே, முரண்பாடுகளுக்கும் மற்றும் சமூக அநியாயங்களுக்கும் காரணமாயிருக்கின்றன. இந்த முரண்பாடு உற்பத்தி நிறுவனங்களான தொழிற்சாலை, வர்த்தக அமைப்பு ஆகியவற்றை அதிக ஊதியம் தருவன, குறைந்த ஊதியம் தருவன என இரண்டாகப் பிரிக்கின்றன.

ஒரே மாதிரியான திறன் மற்றும் உழைப்பு உள்ளவர்கள் எந்த தொழிலில் இருந்தாலும் ஒரே ஊதியம் தான் தர வேண்டும். ஏற்கனவே கூறிய தேசியமயமாக்கல் திட்டத்தின் படியும் ஊதியஅமைப்பைச் செயல்படுத்த சிரமம் இருக்காது. இத்தகைய ஊதிய அமைப்பைச் செயல்படுத்தினால், சில பாடப்பிரிவுகளுக்கு மட்டும் ஏற்படும் போட்டி மறையும், ஒருவனுக்கு வேலை உறுதி செய்யப்பட்டு அவனது ஊதியம் சீரமைப்பு, உழைப்பாளர்களுக்கு வேலைத் திருப்தியையும், அவனது உற்பத்தித் திறனையும் வெளிப்படுத்தும். முடிவாக, அதிகபட்ச அளவில் தரத்தில் உற்பத்தி உண்டாவதால் தேசம் இலாபம் அடைகிறது.

## தீர்வு – 2 : வேலை பங்கீடு

வேதாத்திரியம் கூறுவது என்னவென்றால், பொருட்களை உற்பத்தி செய்யும் திறனையும், உழைப்பையும் பகிர்தல் ஆகும். அனைவருக்கும் வேலையைக் கொடுப்பதால் வேலை நேரம் குறைவதால், தற்காலிகமாக ஊதியம் குறையும் என்பது உண்மை. அநேகமாக குடும்ப மொத்த வருமானத்தை இது பாதிக்காது.

எடுத்துக்காட்டாக ஒரு குடும்பத்தில் தந்தைக்கு இரண்டு மகன்கள் இருக்கிறார்கள். தந்தை மட்டும் ஒரு மாதத்திற்கு ரூ 4,000/-ம் சம்பாதிக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். வேலையற்றோருக்கு வேலை என்ற திட்டம் வருகின்ற போது வேலை நேரம் ஒரு நாளைக்கு 8 மணியிலிருந்து 7 மணி நேரமாகக் குறைவதால் தந்தையின் சம்பளம் ரு. 3,500/- ஆகக் குறைக்கப்படலாம். அப்போது வேலையில்லாதிருந்த மகன்கள் இருவருக்கும் பணி பயில்பவராக (Apprentice) வேலை கிடைக்கிறது. மாதம் ரூ.1, 000/- பயிற்சிக்கான ஊதியமாகக் கொடுக்கப்படும்போது அக்குடும்பத்தின் மாத வருமானம் ரூ.5,500/- ஆகும். முன்பிருந்ததை விட இப்போது வருமானம் கூடி இருக்கிறது. இது ஓர் எடுத்துக்காட்டுதான்.

ஊதியக் குறைப்பின் போது, அரசாங்கமே தொழிற்சாலைகளுக்கு நிதியுதவி (Subsidised) அளிக்க வேண்டும். இத் தேவைகள் தற்காலிகமானவை. விரைவில் இந்த நிலை மாறி விடும். தற்போதைய தொழிற்சாலைகளின் விரிவாக்கம், புதிய தொழிற்சாலைகளின் ஆரம்பம், வேலை வாய்ப்பை நிலையாக அதிகரிக்கும்.

## தீர்வு –3 : தொழிற்சாலைகள் பொதுவுடமையாக்கல்

நாம் கோரும் பொருளாதாரச் சீர்திருத்தம் செல்வந்தர்களைக்கூட ஏழைகளாக்கி விடுவதல்ல. மக்கள் சுகமாக வாழ வேண்டுமெனில் அதற்கு பணம் மட்டும் இருந்தால் போதாது. வாழ்க்கைப் பொருட்களும் அவற்றை நிரவியஅனுபவிக்கும் பொது நோக்கமும் தேவை. ஆகையால் முதன் முதலில் மக்களின் அறிவு நிலையும் செல்வந்தர்களின் எண்ணிக்கையும் விரைவாக உயர வேண்டும். அப்படிப் பெருகும் செல்வத்தால் வாழ்க்கைத் தேவைகளுக்கான பொருள்கள் பெருக வேண்டும். இந்த வகையில் தொழிற்சாலைகளும், தொழிலாளர்களின் நலனும் பெருக வேண்டும். பிறகு செல்வத்தைப் பொதுவாக நிர்வகிக்கும் கூட்டுறவு நிர்வாகத் திட்டம் கொண்டு வந்து, கடைசியில் எல்லாச் செல்வங்களையும் பொதுவுடமையாக்க முயல வேண்டும்.

## தீர்வு –4 : சமையல் திட்டம்

இருநூறு பேர்களுக்கோர் சமையல் கூடம்
ஏற்படுத்தி, அவர்களிலே இருபத்துப் பேர்
ஒருநாளைக்கென முறையாய்ச் சமையல் செய்வார்
உணவு வகைத் திட்டங்கள் வாராவாரம்
உருவாக்கி, அதன்படியே அன்று அன்று
ஒழுங்காக உலகெங்கும் சமைத்து உண்பார்
வரும் நாளில் காய்கறிகள்,பழத்தோட்டங்கள்
வளர்ந்து செழிக்கும், திருட்டுக்கிடமில்லாமல்

நூறு தம்பதிகளை அதாவது இருநூறு பேர்களை ஒரு பகுதி (Unit - அளவை) ஆக்கி அவர்களுக்கு ஒரு பொதுச் சமையல் கூடம் ஏற்படுத்த வேண்டும். அதில் தினம் இருபது பேர்கள் சமைப்பார்கள். பத்துப் பேர்கள் இந்தப் பகுதியின் மேற்பார்வை செய்யும் நிர்வாகப் பொறுப்பை கவனிப்பார்கள். மற்ற நூற்றெழுபது பேர்கள் வேறு தொழிலுக்குப் போவார்கள் இவ்வாறு தொழில் திட்டத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

அந்ததந்தப் பகுதிகளுக்கு வேண்டிய உணவுத் திட்டங்களை, அனைவர்களின் ஒத்துழைப்புடன், வாரம் ஒரு முறையாக முன் கூட்டியே வகுத்துக் கொள்ளலாம்.

உலக மக்கள் அனைவருக்கும் இத்தகைய உணவுத்திட்டம் பொதுவாக இருக்கும். ஆனால் அங்கங்கே கிடைக்கும் காய்கறிகளுக்கு ஏற்பவும், சிறு சிறு மாறுதல்களை அமைத்துக் கொள்ளலாம்.

## உலக அமைதிக்கான திட்டங்கள் / தீர்வுகள்

உலக அமைதிக்கு உரிய திட்டங்களை வேதாத்திரிமகரிஷி அவர்கள் வகுத்து அமெரிக்க நாட்டில் உள்ள கலிபோர்னியா மாகாணத்தின் ஒரு பகுதியான யக்காவேலி என்ற ஆசிரம அரங்கில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அனைவராலும் ஏகமனதாக ஒப்புக் கொள்ளப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு.

- உலகில் பிறந்து வாழும் எல்லா மக்களுக்கும் சம உரிமையும், சமப்பிரதிநிதித்துவமும் அளிக்கத்தக்க முறையில் எல்லா நாடுகளையும் இணைத்த, எல்லா நாட்டு ஆட்சிக்கும் மேலாதிக்கம் உடைய, 'ஒருலகப் பேரரசு' ஜனநாயக முறையில் அமைக்கப்பட வேண்டும். செயல் புரியவும் வேண்டும்.

- ஒரு கோடி மக்களுக்கு ஒரு பிரதிநிதி விகிதம். அந்தந்த நாட்டு அரசாங்கத்தின் மூலம், தேர்தல் மூலமோ, நியமன மூலமோ, தேர்ந்து எடுக்கப்பட்ட தலைவர்களைக் கொண்டு 'உலகப் பொது ஜனநாயக சட்டமன்றம்' ஒன்றை அமைக்க வேண்டும். அது மனித உரிமையினையும், சுதந்திரத்தையும் காக்க ஏற்ற சட்டங்களை அவ்வப்போது இயற்றிப் பணிபுரியும்.

- இந்த சட்டமன்றம் உலகப் பேரறிஞர்களையும், நிபுணர்களையும் தேவையான எண்ணிக்கையில் கூட்டி ஒரு 'ஆட்சி மன்றம்' அமைக்கும். உலகப் பேரரசாகச் சட்ட மன்றத்தின் மேற்பார்வைக்கு உட்பட்டு, அதன் சட்ட திட்டங்களை அமுல் நடத்தும். இந்த ஆட்சி மன்றத்தைக் கண்காணிக்கவோ, திருத்தவோ, மாற்றவோ, புதுப்பிக்கவோ, கலைக்கவோ உலக ஜனநாயகச் சட்டமன்றத்திற்கே உரிமை உண்டு.

- எல்லோருடைய பிறப்புரிமையும் சுதந்திரமும் ஒரு தனிமனிதனாலோ, ஒரு குழுவினராலோ, ஒரு நாட்டு ஆட்சியாலோ பறிக்கப்படாமலும், தடுக்கப்பட்டாலும் இந்த உலகப் பேரரசு பாதுகாக்கப் பொறுப்பேற்று கொள்ளும்.

- உணவு, உடை, வீடு, கல்வி, தொழில், திருமணம், ஆராய்ச்சி வாய்ப்பு இவற்றை ஒவ்வொரு அரசாங்கமும் அதன் கீழ் இருக்கும் குடிமக்கள் பெற வசதியைச் செய்யும்.

- ஆண்களுக்குப் போலவே பெண்களுக்கும் எல்லாத்துறைகளிலும் சம உரிமை அளிக்கப்படும். மேலும் இயற்கையாகப் பெண்களுக்கென அமைந்த உடலமைப்புக்கு ஒத்த அவசியமான வசதிகளும் அளிக்கப்படும்.

- ❊ மக்கள் சமுதாயத்தில் ஒரு கோடி மக்களைக் கொண்ட குழுவினரோ ஒரு பிரதேச வாசிகளோ அல்லது ஒரு நாட்டவரோ விரும்பினால், அவர்களது விருப்பம் போலவே தனியாக ஆட்சி எல்லை வகுத்துக் கொண்டு, சட்டமன்றம் அமைத்துக் கொண்டு, உலக ஆட்சிக்கும் அந்நாட்டுச் சமத்துவ ஆட்சிக்கும் உட்பட்டு, மனித உரிமைச் சாசனத்தை மதித்து வாழ உரிமையுண்டு.

- ❊ உலக மக்கள் எல்லோருக்கும் உலகனைத்தும் சொந்தம். எந்த நாட்டிலும் எந்த இடத்திலும் எவரொருவர் குடியேறவோ, பயணம் செய்யவோ சம உரிமை உண்டு. மக்கள் உடல்நலம். இனிய வாழ்வு இவற்றிற்காக உலக அரசாங்கம் தான் இந்தத் துறையில் அவசியமான கட்டுப்பாடுகளை விதிக்கலாம்.

- ❊ உலகில் எந்த அரசாங்கமும் தனது கடமைகளை நிறைவேற்றத் தவறினாலும், தகுதியற்றிருந்தாலும் அந்தப் பிரதேசத்தை உலக ஆட்சி கைப்பற்றி மக்களைத் தகுதி உடையவர்களாக்கி, பின்னர் ஆட்சியை அந்நாட்டு மக்களிடம் ஒப்புவிக்கும்.

- ❊ போர் சட்டவிரோதமாக்கப்படும். போர் அணிகள், போர்க்கருவிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள், விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடங்கள், உலகில் எங்கிருந்தாலும் அவை உலக ஆட்சி நிர்வாகத்தின் கீழ் வந்து விடும். இவற்றை ஆக்கத் துறைக்காகவும்,பின் தங்கிய நாடுகளையும், மக்களையும் முன்னேற்றுவதற்காகவும், அகில உலகத்தரசு திட்டமிட்டுப் பயன்படுத்தும்.

- ❊ உலக ஆட்சியின் கீழ் அகில உலகப் பேரறிஞர்களைக் கொண்ட ஒரு ‘தொண்டு நிலையம்’ அமைக்கப்படும். அது அவ்வப்போது மனித இன வாழ்வின் உயர்வுக்கான திட்டங்களை வகுத்துக் கொடுக்கவும், மக்களுக்குத் தொண்டாற்றவும், ஒரு பொது சமுதாய சீர்திருத்த இணைப்பு நிலையமாக பணி ஆற்றும். ஆன்மிகம், பொருளாதாரம், சுகாதாரம், விஞ்ஞானம், அரசியல் என்ற ஐந்து வகைகளையும் இணைத்து அறிஞர்களும், நிபுணர்களும் கூடிய ஆராய்ச்சிக் குழுவினரால் மக்கள் வாழ்வை அவ்வப்போது சீர்திருத்த ஏற்ற பல வழிகளை வகுத்துக் காட்டும்.

# 8. செயலும் மனிதனே - தீர்வும் மனிதனே

முனைவர் **என். ராஜ்குமார்**
முன்னாள் முதல்வர்
என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி

**முன்னுரை**

இந்த உலகம் ஒரு மிகப்பெரிய ஓட்டப் பந்தய மைதானம். இதில் அரசன் முதல் ஆண்டிவரை அனைவரும் ஓடுகின்றனர்? சிலர் பண வேட்டைக்காக ஓடுகின்றனர்; சிலர் மன அமைதிக்காக ஓடுகின்றனர். சிலர் போகத்திற்காக ஓடுகின்றனர். சிலர் பட்டங்களுக்காக ஓடுகின்றனர் ; சிலர் பதிவிகளுக்காக ஓடுகின்றனர். தர்மத்திற்காக ஓடுபவர்கள் எத்தனை பேர்? நீதியை நேர்மையைக் கடைப்பிடித்து ஓடுபவர்கள் எத்தனை பேர்? அன்பிற்காகவும் கருணைக்காகவும் ஓடுபவர்கள் எத்தனை பேர்? ‘‘எண்ணம் போல் வாழ்வு’’ என்ற தத்துவத்திற்கேற்ப அவரவர் மனதில் ஏற்படும் செயல்களுக்கு ஏற்ப ஓடுகிறார்கள். அதற்கேற்ற விளைவுகளைப் பெறுகிறார்கள். அவ்விளைவுகளால் சிலர் பெருமை அடைகிறார்கள்.

இன்று நம்மிடையே பரவிவரும் வன்முறைக் கலாச்சாரமும், இனவெறி மோதலும், ஜாதி வேற்றுமைக் கொடுமையும், தேவையற்ற மொழிப்பூசலும், நதிநீர்த் தகராறும் நம்மைத் தலைகுனிய வைக்கின்றன. வானுயர்ந்த கோபுரங்களும், மாதா கோவில்களும், மசூதிகளும் குருத் துவாரக்களும் எத்தனை இருந்தபோதும் மனிதன் நல்லதை விடுத்து அல்லதை நேசிப்பதே அதிகமாக இருக்கிறது. கடவுளுக்கு இருக்கும் பக்தர்களைவிட சாத்தானுக்கு இருக்கும் பக்தர்கள் அதிகமாக இருப்பார்கள் போலும். ஆகவே தான் இந்த சமுதாயத்தில் இத்தனை வேறுபாடுகள்.

ஐம்பூதத்தையும் அடக்கி ஆட்சி செய்கிறான் இன்றைய மனிதன், அவன் நிலமனைத்தையும் தனதாக்கிக் கொண்டு விட்டான். நீர்ப்பரப்பு அனைத்தையும் வெற்றி கொண்டு பயணம் செய்கிறான். காற்றைக் கட்டுப் படுத்தி அதை அடக்கி ஆள்கிறான். நெருப்பைத் தன் ஏவல்காரனாக மாற்றி விட்டான். ஆகாயத்தில் தன் ஆட்சியைப் பரப்பி விட்டான். இருந்தாலும் ஏதோ ஒரு குறை இருப்பதை அவன் உணருகிறான். ஆம் மனதை கட்டுப்படுத்தி நேர் வழியில் சென்று அமைதியான, பெருமையான வாழ்வு பெறுவதில் மட்டும் தவறிவிட்டான். இவற்றிற்கு எல்லாம் காரணம் மனிதனே. அவனது செயல்களே அவனை சிறுமைப்படுத்துகின்றன. அவன் பெருமை பெற வேண்டுமானால் தீர்வும் அவனிடம் தான் உள்ளது.

மாறுகின்ற வேடமும், மறைகின்ற தன்மையும் கொண்ட இவ்வாழ்வில், மனிதன் அணு சக்தியின் ஆற்றலை உணர்ந்துள்ளான். ஆனால் தன் மன ஆற்றலை உணர்ந்து கொள்ள மறந்து விடுகிறான். அறிவு வளர்ச்சியில் எவரெஸ்ட் சிகரத்தில் இருக்கும் அவன், பண்பு வளர்ச்சியில் அதள பாதாளத்தில் வீழ்ந்து கிடக்கிறான்.

## செயல் விளைவுத் தத்துவம்

'' நோவு வேண்டேன் நூறு ஆண்டு வேண்டினேன்
அச்சம் வேண்டேன் அமைதி வேண்டினேன்
வேண்டாதனைத்தும் நீக்கி வேண்டியதனைத்தும்
அருள்வது உன் கடனே'' - மகாகவி பாரதியார்.

நோயற்ற சுக வாழ்வும், நூறு ஆண்டு நிறை வாழ்வும் ஒரு மனிதனுக்கு வேண்டுமெனில் அதற்காக இறைவனை வேண்டினால் மட்டும் போதாது. அதற்கான நற்செயலும் நல் எண்ணமும் இருந்தால் அவைதாமே ஒரு மனிதனுக்கு வந்து சேரும். மாறாக வஞ்சக மனம் ஒன்று நினைக்க, வாய்மையற்ற வாய் ஒன்று சொல்ல, வணக்கம் மொழிந்த கை ஒன்று செய்ய வாழ்க்கை ஓடினால் அதன்மூலம் வம்பு வருமே தவிர வளம் வராது.

விதைப்பது எதுவோ அதுவே விளையும், விதை ஒன்று போட, மரம் ஒன்று வளராது. இது இயற்கைத் தத்துவம். யார் இதை ஏற்றுக் கொண்டாலும் சரி, மறுதலித்தாலும் சரி இது தான் மாறாத பேருண்மை.

Each and every action is having its own reaction என்பது விஞ்ஞானி நியூட்டனின் மூன்றாம் விதி. சுவரில் அடிக்கப்பட்ட பந்து திரும்பி வரத்தான் செய்யும். நிலத்தை வேகமாக அறைந்தவன் கை வலிக்கத்தான் செய்யும். முன்னுக்குப்போன ஊஞ்சல் பின்னுக்கு வருவது இயல்புதானே!. அதுபோலச் செயலுக்குத் தகுந்த விளைவுகள் வருவது இயற்கையின் எழுதப்படாத சட்டம். பாவத்தை விதைத்துவிட்டு, அமுதத்தை எதிர்பார்ப்பது மடமை.

நம்முடைய ஒவ்வொரு செயலுக்கும் பலன் உண்டு. நாம் செய்யும் நற்செயல்கள் புண்ணியமாகவும், தீச்செயல்கள் பாவமூட்டையாகவும் திரும்பி வருகின்றன.

'' நன்றும் தீதும் பிறர் தர வாரா''

'' பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக்கல்''

நம்முடைய உயர்வுக்கும், தாழ்வுக்கும் நாம செய்யும் செயல்களே காரணமாக அமைகின்றன. செயல்களின் பலன்களை ஒருவன் அனுபவித்து தான் ஆக வேண்டும். பசுவின்

கன்றுக்குட்டி தன் தாயை தேடிச் சென்று அடைவது போல ஒருவன் செய்த நன்மைகள், தீமைகள் ஒருவனை நிச்சயம் சென்று சேரும்.உனக்கு நீ நண்பனாக இரு, பகைவனாக இராதே என்பது கீதாரகஸ்யம். நண்பனாக இருந்தால் நலமெல்லாம் குவியும். பகைவனாக இருந்தால் நலமெல்லாம் அழியும்.

## நேர்மையான செயலால் வெற்றி

இன்றைக்கு அவசரம் தான் நாம் வழிபடும் தெய்வமாகிறது. படபடப்புதான் அதற்கு மந்திரமாகிறது. பதறாத காரியம் சிதறாது என்பதை நாம் மறந்து விட்டோம். ஆனால் ஒரு வரலாற்று நிகழ்ச்சி ஒன்று அவசரத்தை விடப் பொறுமையும், நிதானமுமே மனிதனுக்கு புகழ் கொடுக்கும் என்பதைக் காட்டுவதைப் பார்க்கலாம்.

அவர் ஒரு பிரபலமான வழக்கறிஞர். உண்மை சார்ந்த வழக்குகளையே தேர்ந்தெடுப்பார். அதற்காக ஈடுபாட்டுடன் வாதாடுவார். ஒரு நிரபராதிக்காகத் தீவிரமாக வாதாடிக் கொண்டிருக்கும் வேளையில் அவசரம் அவசரமாக ஒரு தந்தி அவரிடம் கொடுக்கப்படுகிறது. அதை வாங்கிப் படித்து முடித்துவிட்டு தன் வாதத்தை தொடர்கிறார். அதில் மனைவியின் மரணச் செய்தி வந்திருக்கிறது என்கிறார் அவர். முடிந்து போன மனைவிக்காக துடிதுடித்து ஓடுவதை விட ஒரு அப்பாவிக் கைதிக்காக வாதாடுவது என் கடமை என்று கூறினார் அந்த வழக்கறிஞர் வேறு யாருமல்ல,அவர்தான் சர்தார் வல்லபாய் பட்டேல்.

இது போன்ற மாமனிதர்களின் கடமை உணர்வு இன்றைக்குச் சமுதாய மக்களிடம் இல்லாமல் குறைந்து வருவதைப் பார்க்கிறோம். நமது முன்னோர்களிடமிருந்து நம் மரபணுக்களைப் (Gens) பெற்றுள்ளோம். பெற்றோரிடமிருந்து செல்வத்தைப் பெறுகிறோம். ஆனால் நமது நல்ல செயல்கள் மூலம் தான் நமக்கு நல்ல பெயரும், மதிப்பும் மரியாதையும் உருவாகும்.

### பகுத்தறிவின் பணி

மனித உயிர்களிடம் காணப்படும் ஆறாவது அறிவுதான் மனிதனை மிருகத்திலிருந்தும் தாவரத்திலிருந்தும் வேறுபடுத்திக் காட்டுகிறது. இந்தப் பகுத்தறிவுதான் மனிதனைக் காட்டை அழித்து நாட்டை உருவாக்க ஆணையிட்டது. இந்தப் பகுத்தறிவுதான் இயற்கை உணவைச் சமைத்துச் சுவையாக உண்ண ஏவல் செய்தது. இந்தப் பகுத்தறிவுதான் மனிதனுக்கு ‘மனிதன்’ என்ற தகுதியைக் கொடுத்தது.இந்தப் பகுத்தறிவுதான் நிலவிற்கு சந்திராயனை அனுப்பியது. இந்தப் பகுத்தறிவு தான் சிந்திக்கிற மனதை மனிதனுக்குக் கொடுத்தது. இந்தப் பகுத்தறிவு தான் பக்தி, ஞான, யோக நெறிகளில் மனிதனைச் செலுத்தியது. மனிதனாகப் பிறப்பது அரிது இல்லை. மனிதனாக வாழ்வது தான் அரிது. மனிதனாகப் பிறப்பது ஆண்டவன் செயல்; மனிதனாக வாழ்வது அவனவன் செயல்.

## இயற்கையைப் போற்றி இன்பமுடன் வாழ்வோம்

இன்றைய உலகின் அவசர கதியில் இருந்து விடுபட்டு வாழ்வை வளப்படுத்த நமக்குத் தேவை இயற்கையின் அரவணைப்பு. அவள் மடியில் தவழ்ந்து விளையாடும் நீல வானத்தின் மகா விரிவையும், பூரண நிலவின் குளுமையையும், பகலவனின் அதி அற்புத ஆற்றலையும், வானுயர்ந்த மலைகளின் பிரம்மாண்டத்தையும், ஓயாத கடல் அலைகளின் ஆர்ப்பரிப்பையும், மரம், செடி, கொடி, விலங்குகள் ஆகியவற்றின் பயன்பாட்டையும் போற்றி வாழும் உன்னதமான வாழ்வு வேண்டுமெனில் இயற்கையைப் பாதுகாத்து வாழ வேண்டும்.

நாம் இயற்கையைப் பாதுகாத்தால் இயற்கை அன்னை நம்மைப் பாதுகாப்பாள். இதுவே மனித குலம் இன்னும் கல்பகோடி ஆண்டு நலமுடன் வாழத் தீர்வாகும்.

''வாழ்க்கை என்பது எவ்வளவு நீண்டது என்பது முக்கியமல்ல எவ்வளவு பயனுடையது என்பதே முக்கியம்'' என்பார் சுவாமி விவேகானந்தர். அப்படிப்பட்ட பயனுள்ள வாழ்க்கையை வாழ்வதும் வாழாததும் அவரவர் கையில் தான் உள்ளது.'' செயலும் மனிதனே. தீர்வும் மனிதனே''

# 9. பஞ்சேந்திரியத் தவம்




பஞ்சேந்திரியத் தவம், ஐம்புலன்களின் மேல் மனம் வைத்துசெய்யப்படுவது. உடலில் உள்ள சீவகாந்த சக்தி அலைகளாக, அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் ஆகியவைகளாக மாற்றிக் கொண்டேயிருக்கக் கூடியவை ஐம்புலன்கள். ஐம்புலன்களையே (பஞ்சேந்திரியங்கள்) அறிவுக்கருவிகள், ஞானேந்திரியங்கள் என வேறு பெயர்களால் அழைக்கின்றோம்.

அறிவுக் கருவிகள் ஐந்து (ஞானேந்திரியங்கள்) அவை:

1. தோல் (தொடு உணர்வு) 2. நாக்கு (சுவை) 3. மூக்கு (மணம்) 4. கண்கள் (ஒளி) 5. காதுகள் (ஒலி)

தொழில் கருவிகள் ஐந்து (கார்மேந்திரியங்கள்) அவை:

1. கைகள் 2. கால்கள் 3. வாய் 4. குதம் 5. பால்குறி

இவற்றில் (ஞானேந்திரியங்கள்) ஐம்புலன்களையே நாம் பஞ்சேந்திரியத் தவத்திற்கு எடுத்துக் கொள்கின்றோம். பஞ்சேந்திரிய தவத்தில், நாம் தொடு உணர்வு, சுவை, மணம்,

ஒளி, ஒலி, ஆகிய ஐந்து புலன்களின் இயக்கத்திலேயே மனத்தைச் செலுத்துகிறோம். ஒவ்வொரு புலனின் மீதும் தவம் செய்வதால், ஐம்புலன்களின் இயக்கங்கள் செம்மையாகின்றன.

"சுவை ஒளி ஊறு ஓசை நாற்றமென்று ஐந்தின்
வகை தெரிவான் கட்டே உலகு" (குறள் - 27)

என்ற குறளுக்கு ஒப்ப அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் என்ற ஐந்து வகைகளாக சீவகாந்தம் தன்மாற்றம் பெறுகின்றது. இவை எல்லாம் உடலில் எப்படி உற்பத்தியாகின்றன? வெளி உலகத்தோடு தொடர்பு வரும் பொழுது அவை எல்லாம் எவ்வாறு மாற்றம் உயர்வு, பெற்று உணர்வுகளாக மாறுகின்றன? என்பதும் அதனால் வரக்கூடிய இன்ப துன்ப உணர்வுகளைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும்.

## ஐம்புலன்களின் தோற்றம்

பிரபஞ்சம் பஞ்ச பூதங்களாக, ஐந்து பௌதிகப் பிரிவுகளாக இருக்கிறது. முதல் பௌதிகப் பிரிவு விண், தனது இறுக்க ஆற்றல், விலக்க ஆற்றலோடு இருக்கிறது. அந்த ஆற்றல் அழுத்தமாக உணரப்படுகின்றது. இதை உணர உயிரினங்களுக்கு தொடுபுலன் அமைகிறது.அதுவே தொடு உணர்வு, பொதுவாக உடல் முழுவதும் உள்ளும் புறமுமாக அழுத்தத்தை உணர்கிறது. அதற்குச் சிறப்பாக தோல் நமக்குப் பயன்படுகிறது.

இறுக்க, விலக்க இயக்கத்தோடு இருந்த விண் மேலும் சுழற்சி வேக வேறுபாடு காரணமாக இயக்கம் பெற்று, இரண்டாவது பௌதிகப் பிரிவான காற்றாக மாறுகிறது. இரு விண்கள் 1 எலக்ட்ரானும், 1 புரோட்டானும் சேர்ந்த காற்றாக மாறியது. இந்தக் காற்றையும் அதன் இயக்க வெளிப்பாடான ஒலியை உணர்வதற்கு காது பயன்படுகிறது.

மேலும் சுழல் வேகம் குறைந்த இயக்கத்தில் கூடுதலான விண்துகள்கள் சேர்ந்த மூன்றாவது பௌதிகப்பிரிவான அழுத்தக் காற்று அல்லது நெருப்பு, அதாவது ஆக்ஸிஜன் தோன்றியது. அதன் இயக்க வெளிப்பாடான ஒளியை உணர கண் உதவுகிறது. நான்காவது பௌதிகப் பிரிவாக நீர் தோன்றியது. அதன் இயக்க விளைவு சுவை, அதை உணர நாக்கு உதவுகிறது.

ஐந்தாவது பௌதிகப் பிரிவாக நிலம் தோன்றியது. அதன் இயக்க விளைவு மணம் , அதை உணர மூக்கு உதவுகிறது.

இப்படியாக ஐந்து பூதங்களின் இயக்க விளைவுகளை , ஐந்து புலன்கள் மூலமாக உணர்கிறோம். பிரபஞ்சத்தில் அனைத்துத் தோற்றங்களும் நிகழ்ச்சிகளும் ஐந்து புலன்களின் மூலமே நமக்கு எட்டி, நமது கணிப்புக்கு வருகின்றன. இவற்றை ஞான இந்திரியங்கள் என்றும் அழைப்பதுண்டு.

## புலன்களின் மேல் தவம்

பஞ்சேந்திரிய தவத்தில் ஐம்புலன்களின் மேல் மனம் செலுத்துகிறோம். மனம் என்பது சீவகாந்த ஆற்றல் வெளியேறும் பாதையாக உள்ளது.

எந்த இடத்தில் மனம் மனத்தைப் பொருத்துகிறோமோ அந்த இடத்தில் நம் சீவகாந்த ஆற்றல் செலவாகிறது. நாம் ஒருவரை நினைக்கிறோம் என்றால் உருவப் பாதையில் தொடர்பு கொண்டு அங்கு செலவாகிறது. நாம் எந்தக் கருத்தோடு பாய்ச்சுகிறோமோ அந்தக் கருத்து அங்கே நிலைக்கிறது.

சீவகாந்த ஆற்றல் எந்த இடத்தில் மின்குறுக்கு (Short Circuit) ஆகிறதோ, அங்கு வலியாக உணர்கிறோம். வலியே காலத்தாலும் இடத்தாலும் நீடிக்கும் பொழுது நோய் ஏற்படுகிறது.

நோய்வாய்ப்பட்ட இடத்தில் ஆற்றல் குறைவாக இருக்கிறது. குறைவு நிறைவு பெறுவதற்காக அங்கே சீவகாந்த ஆற்றல் பாய்ச்ச வேண்டி உள்ளது. அப்படி வலிக்கின்ற இடத்திலேயே மனம் நிலைத்து விடுவதால், அங்குச் சீவகாந்த ஆற்றல் தொடர்ந்து பாய்ச்சப்பட்டு இயற்கையாகவே நோய் குணமாகிறது.

அதனால், இயற்கையாக நம் மனத்தைப் பஞ்சேந்திரியங்களில் செலுத்த வேண்டும். என்பதற்காகவே பஞ்சேந்திரியத் தவம் செய்கிறோம்.

பூதங்கள் ஐந்து, அவை பஞ்ச பூதங்கள், புலன்கள் ஐந்து, அது பஞ்சேந்திரியம். அப்புலன் வழிஅனுபோக உணர்வு ஐந்து, அது ஐயுணர்வு, புலன்வழி உயிர் செலவாகும் போது அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணமாக மாற்றம் பெற்று செலவாகிறது. அப்படிச் செலவாகும் சீவகாந்த மாற்றமே பஞ்ச தன்மாத்திரைகள்.

இந்த விளக்கங்கள் மூலம் பெறும் அறிவு மெய்ப்பொருள் அறிவு

எனவே, கருவியாகிய புலன்களையும் மறக்கக் கூடாது. செலவாகும் உயிரையும் மறந்து விடக் கூடாது. அச்செலவில் உள்ள ஏ'ற்றத் தாழ்வையும் மறக்கக் கூடாது. அவ்வப்போது சீர் செய்து கொள்வதற்கு இந்த பஞ்சேந்திரியத் தவம் உதவியாக அமையும்.

## பஞ்சேந்திரியத் தவம் மூலம் பெறபடும் உண்மைகள்

1. மனம், புலன்கள் மூலமாக பொருட்கள் மற்றும் நபர்களோடு தொடர்பு கொள்கிறது. பஞ்சதன்மாத்திரைகளாக மாற்றம் பெற்று உணர்வாகிறது.

2. பொருட்களிலிருந்து இன்பம் கிடைக்கிறது என்று நினைத்து அதில் மனம் மயங்குகிறது.
3. புலன்களிலிருந்தும் இன்பம் கிடைக்கிறது என்று நினைத்து மனம் அதற்கு அடிமையாகி விடுகிறது. ஆனால் உண்மை அதுவல்ல.
4. பொருள்களோடும், நபர்களோடும் தொடர்பு கொள்கின்ற போது சீவகாந்த ஆற்றல் தொடர்பு கொள்ளும் பொருள் மற்றும் நபருடைய தன்மையைப் பொறுத்துச் செலவாகும்.
5. இந்த செலவு புலன்கள் தாங்குகின்ற அளவுக்கு இருந்தாலும், மனதிற்குப் பொருத்தமாக அமைந்தாலும் அதை இன்பம் என்கிறோம்.
6. ஆனால் இந்த செலவு புலன்களின் தாங்குகின்ற அளவுக்கு மேலேயும், மனதிற்கு ஓர் பொருத்தமற்ற நிலையானால் அதை துன்பம் என்கிறோம்.
7. இதிலிருந்து நாம் உணர்ந்து கொள்வது என்னவென்றால், புலன்கள் தாங்குகின்ற அளவு சீவகாந்தச் செலவே இன்பம். அதிகச்செலவு துன்பமாகும். பொருளோ / நபரோ சீவகாந்த ஆற்றலைத் தூண்டுகிறது.
8. எப்பொழுதும் இன்பமாக இருக்க உணவு, உழைப்பு, உறக்கம், உடலுறவு எண்ணம். செயல்களில் அளவு முறை காக்க வேண்டும்.

## பஞ்சேந்திரிய தவப் பலன்கள்:

1. மனம் புலன் மயக்கத்திலிருந்து விடுபடுகிறது.
2. மனம் தன்னை பொருள் மயக்கத்திலிருந்து விடுவித்துக் கொள்கிறது.
3. மனம் ஆன்ம ஞானம் பெறுகிறது.
4. மனதிற்கு விழிப்பு நிலை கிடைக்கிறது.
5. எண்ணம், சொல், செயலில் ஒரு ஒழுங்கு கிடைக்கிறது.
6. ஐந்தில் (உணவு, உழைப்பு, உறக்கம், எண்ணம், புலன்இன்பம்) அளவும், முறையும் கிடைக்கிறது.
7. மனம் அமைதி அடைகிறது.

# 10. முத்திரைப் பயிற்சிகள்

நம் உடலில் மறைந்திருக்கும் சக்தியை வெளிக் கொண்டு வருவதே முத்திரையாகும். நரம்புகளுடன் சம்பந்தமுள்ள உடல் உறுப்புகளை முத்திரை ஆளுகிறது. பிரபஞ்சமானது பஞ்ச பூதங்களினால் உண்டாக்கப்பட்டது. நம் உடலும், பஞ்ச பூதங்களின் கூட்டே ஆகும். அதைப்போல நம் உடலில் உள்ள கை விரல்கள் ஐந்து தத்துவங்களாகச் செயல்படுகின்றன.



1. கட்டை விரல் - அக்னி
2. ஆள்காட்டி விரல் - காற்று
3. நடுவிரல் - விண்
4. மோதிர விரல் - நிலம்
5. சிறு விரல் - நீர்

இவ்வைந்து பூதங்களும் உடலில் சமநிலையில் இருக்கும்போது உடல் ஆரோக்கியமானதாகவும், நிலை குலையும் போது நோயுள்ளதாகவும் இருக்கிறது. ஐந்து பூதங்களின் ஒருங்கிணைப்பால் உடலின் உள்கட்டுகள், உறுப்புகள் மற்றும் அவைகளின் செயல்பாடுகள் சீரமைக்கப்படுகின்றன.

இம்முத்திரைகளை நிற்கும்போதோ, நடக்கும் போதோ, அமரும்போதோ செய்யலாம். வஜ்ராசனம், பத்மாசனத்தில் அமர்ந்து செய்வது அதிக நன்மை பயக்கும். இம்முத்திரைகள் தினந்தோறும் 10 நிமிடம் முதல் 45 நிமிடங்கள் வரை செய்தால் அதிகப் பலன்களை அளிக்கும்.

### 1. ஞான முத்திரை (அல்லது) சின் முத்திரை

கட்டை விரல் மற்றும் ஆள்காட்டி விரல் நுனிகள் இரண்டும் தொட்டுக் கொண்டு இருத்தல் வேண்டும். மற்ற விரல்கள் நேராக இருக்க வேண்டும்.



**நன்மைகள்**

1. தியானத்தில் மனதை ஒருநிலைப்படுத்த உதவுகிறது. மூளைச் செல்கள் புத்துணர்ச்சி பெறுகின்றன.
2. தலைவலி, தூக்கமின்மை மற்றும் கவலை, கோபம் ஆகியவற்றை போக்குகிறது.

## 2. வாயு முத்திரை



ஆள்காட்டி விரலை கட்டை விரலின் அடிப்பகுதியில் வைத்துக் கட்டை விரலால் சிறிது அழுத்தம் கொடுக்க வேண்டும். மற்ற விரல்கள் நேராக இருக்க வேண்டும்.

**நன்மைகள்**

1. வாயு சம்பந்தமான நோய்களை போக்குகிறது.
2. இரத்த ஓட்டம் சீராக இயங்கும்.

## 3. சூரிய முத்திரை



மோதிர விரலை கட்டை விரலின் அடிப் பாகத்தில் வைத்து மெதுவாக அழுத்த வேண்டும். மற்ற விரல்கள் நேராக இருக்க வேண்டும்.

**நன்மைகள்**

1. வயிறு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை சரி செய்கிறது.
2. உடலில் உஷ்ணத்தை அதிகப்படுத்தி, சீரண சக்திக்கு உதவுகிறது.

## 4. சூன்ய முத்திரை



நடுவிரலை, கட்டை விரலின் அடிப்பகுதியில் வைத்துக் கட்டை விரலால் அழுத்த வேண்டும். மற்ற விரல்கள் நேராக இருக்க வேண்டும்.

**நன்மைகள்**

1. காது கேளாமை, நீர் வடிதல், காது அடைத்தல் போன்றவைகளைச் சரி செய்கிறது.
2. எலும்புகளின் தளர்ச்சி மற்றும் இதயநோய் தடுக்கப்படும்.
3. தசைகள் வலுவடைகின்றன.
4. கழுத்து மற்றும் தைராய்டு நோயிலிருந்து நிவாரணம் பெறலாம்.

## 5. ப்ருதிவி முத்திரை



பெருவிரல் மற்றும் மோதிர விரலின் நுனிப் பாகம் தொட்டுக் கொண்டிருக்க வேண்டும். மற்ற விரல்கள் நேராக இருக்க வேண்டும்.

**நன்மைகள்**

1. உடல் மற்றும் மூளை செல்களை ஊக்குவிக்கிறது.

## 6. ப்ராண முத்திரை



மோதிர விரல், சுண்டு விரல் இரண்டையும் மடக்கிக் கட்டை விரலின் நுனியை தொட்டுக் கொண்டு இருக்க வேண்டும். மற்ற விரல்கள் நேராக இருக்க வேண்டும்.

**நன்மைகள்.**

1. கண் கோளாறுகளை நீக்கி ஒளியை அதிகரிக்க செய்கிறது.
2. உடல் நோய் எதிர்ப்பு சக்தியை கூட்டுகிறது.

## 7. அபான முத்திரை

மோதிர விரல், நடுவிரல் இரண்டையும் மடக்கிக் கட்டை விரலின் நுனியை தொட்டுக் கொண்டிருக்குமாறு வைக்க வேண்டும். மற்ற விரல்கள் நேராக இருக்க வேண்டும்.



**நன்மைகள்**

1. மலச்சிக்கல், மூலநோய் மற்றும் வாயுத் தொல்லையை போக்குகிறது.
2. உடலில் தேவையற்ற பொருட்களை வெளியேற்றுகிறது.

## 8. அபான வாயு முத்திரை



மோதிர விரல், நடுவிரல் இரண்டும் கட்டை விரல் நுனியை தொட்டுக் கொண்டு இருக்க வேண்டும். ஆள்காட்டி விரல், கட்டை விரலின் அடிப்பாகத்தை தொட்டுக் கொண்டிருக்கவேண்டும். சுண்டு விரல் நேராக இருக்க வேண்டும்.

**நன்மைகள்**

1. இதய நோய்களை சரி செய்கிறது.
2. இரத்த ஓட்ட மண்டலம் சீராகிறது.

## 9. வருண முத்திரை



சுண்டு விரலின் நுனியைக் கட்டை விரலின் நுனி தொட்டுக் கொண்டிருக்க வேண்டும். மற்ற விரல்கள் நேராக இருக்க வேண்டும்.

**நன்மைகள்**

1. தோல் சம்பந்தமான வியாதிகளைக் குணமாக்குகிறது.
2. தோல் வறட்சி,முகப்பருக்கள் வராமல் தடுப்படுகிறது

## 10. லிங்க முத்திரை

இரண்டு கைகளையும் சேர்த்துப் பிடித்துக் கொண்டு இடது கட்டை விரலை மட்டும் நிமிர்த்து வைத்துக் கொள்ளவும்.



**நன்மைகள்**

1. உடலில் உள்ள அதிகமான சூட்டைச் சமப்படுத்துகிறது.
2. கபத்தை அகற்றுகிறது.
3. ஜலதோசம், ஆஸ்துமா பிரச்சனையைச் சரி செய்கிறது.
4. வறட்டு இருமல், நீர்க்கட்டுப் பிரச்சனையையும் சரி செய்கிறது.

# NGM COLLEGE (AUTONOMOUS), POLLACHI.

## பாடத்திட்டம்

| Programme Code | All UG Course | Programme Title : | Human Excellence |
|---|---|---|---|
| Course Code | 18 HEC606 | Course Title | Batch : 2018-21 |
| Hrs/Week : | 2 | Human Excellence - Global values & SKY Yoga Practice - VI | Semster : VI<br>Credits : 1 |

**Course Objective :** உலகில் நிலவும் இனப்பாகுபாடு கலாச்சாரச் சீரழிவும் தீவிரவாதம் மற்றும் பொருளாதார சீரழிவிற்கான தீர்வுகளை அறிந்து வளமான மகிழ்ச்சியான அமைதியான உலகை அமைக்க வழிவகை அளிப்பதற்கு உதவுவது.

**Couese Outcomes (CO)**

| | | |
|---|---|---|
| K1 | CO1 | இனப் பாகுபாடு மற்றும் சுற்றுச்சுழல் பாதிப்பு போன்ற சிக்கல்களுக்கு ஆன்மீக அறிவு இன்மையே காரணம் என்ற மூலக்கருத்தினை அறியச் செய்தல் |
| K2 | CO2 | தனி மனிதனின் மாற்றம் மூலம் சமுதாய அரசியல் மாற்றங்களை உலகம் முழுவதும் அடையமுடியும் என்பதை உணரச் செய்தல். |
| K3 | CO3 | ஆன்மீக முன்னேற்றம் ஏற்படுவதன் மூலம் நன்நடத்தையும் அறிவின் மேம்பாடும் பெற்று ஒருமித்த கலாச்சாரத்தின் முக்கியத்துவம் உணர்தல் பொருழீட்டுதல் பகிர்ந்து கொள்ளுதல் சேவை தியாகம்இ சகிப்புத்தன்மை விட்டுக்கொடுத்தல் |
| K4 | CO4 | இயற்கையின் அழிவிற்கும் உருவாக்கத்திற்கும் மனிதனே காரணம் என்ற கருத்தினை வலியுறுத்தல். தியானம் மற்றும் முத்திரைகளைத் தொடர்ந்து பயிற்சி செய்வதன் மூலம் உடல்நலம் பெறுவதுடன் நோய் தடுப்பு முறையும் ஆகும். |

| Syllabus | |
|---|---|
| அலகு - I | இனப்பாகுபாடும் தீர்வுகளும் - இனப்பாகுபாட்டின் தோற்றுவாய் - தீர்வுகள் - சுற்றுச்சூழல் பாதிப்பும் அதன் தீர்வுகளும் - உலகை அச்சுறுத்தும் சுற்றுச்சூழல் சீர்கேடுகள் - தீர்வுகள். |
| அலகு - II | அரசியல் கொந்தளிப்பும் தீர்வும் - ஜனநாயகத்தின் தூண்கள் - தீர்வுகள் - உலகை அச்சுறுத்தும் தீவிரவாதமும் தீர்வும் - தீவிரவாதத்தின் தோற்றுவாய் தீர்வுகள். |
| அலகு - III | கலாச்சார சீரழிவும் தீர்வும் - கலாச்சார சீரழிவிற்கான காரணிகள் - தீர்வுகள் ஒருமித்த கலாச்சார விளைவும் தீர்வும் - விவேகானந்தரின் கோட்பாடுகள் |
| அலகு - IV | பொருளாதாரப் பாகுபாடுகளும் தீர்வுகளும் - பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் ஏற்படக் காரணங்கள் - உலக அமைதி திட்டங்கள் - செயலும் மனிதனே தீர்வும் மனிதனே |
| அலகு - V | தவம் VI - பஞ்சேந்திரிய தவம் - முத்திரைகள் (1.சின் முத்திரை - 2.வாயு முத்திரை - 3. சூரிய முத்திரை - 4. சூன்ய முத்திரை - 5. ப்ருதிவி முத்திரை - 6. பிராண முத்திரை - 7. அபான முத்திரை - 8. அபான வாயு முத்திரை - 9. வருண முத்திரை - 10. லிங்க முத்திரை) - மீள்பார்வை (காயகல்பப் பயிற்சி - மகராசனப்பயிற்சி பகுதி I & II உடலை தேய்த்துவிடுதல் பயிற்சி - உடலை அழுத்திவிடுதல் பயிற்சி - உடல் தளர்த்தல் பயிற்சி) |

** Italicized texts are for self-study*

Power point Presentations, Group discussions, Seminar ,Quiz, Assignment, Experience Discussion, Brain storming, Activity, Case study, Video playing.

**Books for study :**

1. Jeyalakshmi. S. et al., (2015). Global values. Fifth Edition. Pollachi : NGM College. (Tamil version). pp:72.
2. Vethathiri maharishi. (2013). Social inequality and solutions. 5th Edition. Erode: Vethathiri pulication. pp: 139.
3. Vethathiri maharishi. (2013). Ulaga samuthaya Valkaineri. First edition. Erode: Vethathiri publications (Tamil version). pp:84.
4. WCSC - Vision for wisdom (compilation). (2018). Yogasanas. 16th edition. Erode: Vethathiri publications (Tamil version). pp: 64.
5. WCSC - Vision for wisdom (compilation). (2016). Value education, 4th edition. Erode: Vethathiri publication (English Version). pp:168.

**Reference Books :**

1. N.M. Khandelwal, Indian Ethos and Values for Managers,Mumbai, Himalaya publishing house PVT. LTD., 2011.
2. K. Lakshman, Indian Philosophy, Chennai, Easian Printers, 2008
3. Vethathiri maharishi. (2015). World peace,9th edition , Erode, Vethathiri Publications (Tamil version). pp: 341.

## மாதிரிவினாதாள்

ஆறாம் பருவம்

மதிப்பெண்கள் : 50
காலம் : 2 மணி நேரம்

## மனித வள மாண்பு - உலகளாவிய விழுமியங்கள் மற்றும் SKY யோகப் பயிற்சிகள் - VI

### பிரிவு - அ

**அனைத்து வினாக்களுக்கும் ஒரிரு சொற்களில் / தொடர்களில் விடையளிக்கவும்**

(மதிப்பெண்கள் 10 x 1= 10 )

1. பசுமை இல்ல விளைவு என்றால் என்ன?
2. தீவிரவாதம் என்றால் என்ன?
3. நாடாளுமன்றம் என்றால் என்ன ?
4. இனப்பாகுபாடு என்பது என்ன?
5. கலாச்சாரம் - பொருள் விளக்கம் தருக
6. ஓர் இந்தியன் தனியாக எங்கும் செல்வதில்லை அவனோடு 5000 ஆண்டுக் கலாச்சாரமும் பண்பாடும் உடன் செல்கின்றன என்று உலகிற்கு கூறியவர்...............

   அ) நேரு ஆ) விவேகானந்தர் இ) காந்தியடிகள் ஈ) காமராசர்
7. தியானத்தில் மனதை ஒருநிலைப்படுத்த உதவுவது.................................

   அ) சின்முத்திரை ஆ) வாயுமுத்திரை இ) சூரியமுத்திரை ஈ) வருண முத்திரை
8. ‘‘ நோவு வேண்டேன் நூறு ஆண்டு வேண்டினேன் அச்சம் வேண்டேன் அமைதி வேண்டினேன் ’’ என்று கூறியவர்

   அ) பாரதியார் ஆ) விவேகானந்தர் இ) அரவிந்தர் ஈ) காந்தியடிகள்
9. உழைப்பின் ஊதியமே ................................. ஆகும்

   அ) பணம் ஆ) ஆற்றல் இ) முயற்சி ஈ) வட்டி
10. ஐம்புலன்களின் மேல் மனம் வைத்து செய்யும் தவம் .............................ஆகும்

    அ) துரியம் ஆ) பஞ்சேந்திரியம் இ) ஆக்கினை ஈ) சாந்தி

## பிரிவு - ஆ

**ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு நான்கு பக்க அளவில் விடை அளிக்கவும்.**

**( 5 X 8 = 40 மதிப்பெண்கள் )**

11. கலாச்சார சீரழிவு மனிதகுலத்தின் சீரான வாழ்வை எந்தளவு பாதிக்கிறது என்பதை எழுதுக.
12. பஞ்சேந்திரிய தவத்தை பயன்களுடன் விவரி?
13. தீவிரவாதம் உலகை எவ்வாறு அச்சுறுத்துகிறது.?
14. உலகில் பொருளாதார பாகுபாடுகளை சரிசெய்வதற்கான தீர்வுகள் குறித்து விரிவாக விவரி.
15. ஒருங்கிணைந்த கலாச்சாரத்தினை விவரித்து எழுதுக.
16. செயலும் மனிதனே, தீர்வும் மனிதனே - ஆராய்க
17. இனப்பாகுபாடுகள் மூலம் உலக மக்களின் வாழ்க்கைத்தரம் எந்தெந்த வகைகளில் பாதிப்படைந்துள்ளது என்பதை விவரி.
18. உலகம் முழுவதிலும் சுற்றுச்சூழல் பாதிப்பை சரிசெய்ய, மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவரி.

★★★★★★★

## உறுதிமொழி

பாரதத் திருநாட்டின் தவசீடர்களுக்கு நாங்கள் தரும் உறுதிமொழி:

❖ அரிதான இம்மானுடப் பிறப்பை அலட்சியம் செய்யாமல், பொறுப்போடு வாழ்ந்து, செயற்கரிய காரியங்களைச் செய்வோம்!

❖ எங்கள் முன்னோர்கள் காட்டிய ஞானமார்க்கத்தைப் பின்பற்றி, எங்களுள் புதைந்து கிடக்கும் அளவற்ற அறிவையும் ஆற்றலையும் முழுமையாக வெளிப்படுத்தி, உன்னத இலட்சியத்திற்காக வாழ்க்கையை அர்ப்பணித்து, வித்தியாசமாகச் சிந்தித்து, துணிவோடு செயல்பட்டுப் புதிய சரித்திரம் படைப்போம்!

❖ சாதி, மத, இன உணர்வுகளை எல்லாம் கடந்து, நாம் அனைவரும் இந்தியர்கள் என்ற உணர்வோடு செயல்பட்டு நாட்டின் ஜனநாயகத்தையும் ஒருமைப்பாட்டையும் போற்றிக் காப்போம்!

❖ பாரம்பரியச் சிறப்புமிக்க நம் கலாச்சாரத்தை எந்நாளும் கட்டிக் காப்போம்!

❖ நவீன விஞ்ஞானத்தையும் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தித் தேசத்தின் சமூக, பொருளாதார அந்தஸ்தை உயர்த்தி, பாரதத்தை 21ஆம் நூற்றாண்டில் உலகை ஆளும் வல்லரசாக உருவாக்குவோம்!

❖ எங்களுக்கு அமைந்த வாழ்வையும் வாய்ப்பையும் முறையோடு பயன்படுத்தி, நாங்களும் வாழ்க்கையில் உயர்ந்து, எங்களை உயர்த்திய சமுதாயத்தையும் உயர்த்துவோம்!

இந்தக் கனவை நனவாக்கும் வரை ஓயமாட்டோம்!
இது சத்தியம்! வந்தே மாதரம்!!

டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ் வாணவராயர்
தலைவர், என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி.